
# அரச சார்பற்ற பாடசாலைகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல் நடைமுறைகள்



**அறிக்கை இலக்கம் : PER/A/NGS/2020/06**

தேசிய கணக்காய்வு அலுவலகம்

## பொருளடக்கம்


| இலக்கம் ------ | விபரம் --------- | பக்க இலக்கம் ------- |
|---|---|---|
| 1. | நிறைவேற்றுப் பொழிப்புரை | 01 |
| 2. | அறிமுகம் | |
| 2.1 | பின்புலம் | 05 |
| 2.2 | கணக்காய்விற்கான அதிகாரபலம் | 07 |
| 2.3 | கணக்காய்வு நுழைவு | 07 |
| 2.4 | கணக்காய்வு முறைமைகள் | 09 |
| 2.5 | கணக்காய்வின் நோக்கம் மற்றும் மூலப் பிரமாணங்கள் | 10 |
| 2.6 | கணக்காய்வின் விடயப் பரப்பு | 15 |
| 2.7 | குணக்காய்வு விடயப்பரப்பு மட்டுப்படுத்தப்படல் | 15 |
| 2.8 | தொடர்புடைய நிறுவனங்கள் | 15 |
| 3. | விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் | |
| 3.1 | அனைவருக்கும் தரமான கல்விக்கான சட்டரீதியிலான வசதிகள் | 17 |
| 3.2 | அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் | 20 |
| 3.3 | சர்வதேச பாடசாலைகள் | 48 |
| 3.4 | சமய பாடசாலைகள் | 81 |
| 4. | பரிந்துரைகள் | 94 |
| 5. | பின்னிணைப்புகள் | 98 |

## 01. நிறைவேற்றுப் பொழிப்புரை

இலங்கைக்கு பௌத்த சமயத்தை கொண்டு வந்ததன் பலனாக கிடைத்த ஆக்கப்பட்ட பௌத்த கல்வியானது, பௌத்த விகாரைகள் மற்றும் பிரிவென என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பரப்பப்பட்டது. அதன் பின்னர் காலனித்துவ விரிவாக்கத்தின் ஆரம்பத்துடன் முதலில் கடலோரப் பிரதேசங்களில் அதன் பின்னர் உட்பகுதிகளில் கிறிஸ்தவ மிஷனரிகள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட தொடங்கி இருந்ததுடன் 1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு அதிகாரத்தினை பெற்றுக் கொடுத்ததன் பின்னர் கலாநிதி சி.டபிள்யு.டபிள்யு.கன்னங்கர அவர்களின் தலைமைத்துவத்தில் இலவசக் கல்வி முறைமை ஒன்று தாபிக்கப்பட்டது. இதன்கீழ் அனைவருக்கும் கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கத்தினால் நாடு முழுவதிலும் மத்திய மகா வித்தியாலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த சுதந்திரக் கல்வி முறைமை செயற்பட்டு வரும் காலத்தினுள் மிஷனரி பாடசாலைகள் மற்றும் ஒரு சில பௌத்த தனியார் பாடசாலைகளாக பணம் அறவிடும் பாடசாலைகள் பல 1960 இன் 05 ஆம் இலக்க துணைப் பாடங்கள் மற்றும் பயிற்சி கல்லூரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1961 இன் 08 ஆம் இலக்க துணைப் பாடங்கள் மற்றும் பயிற்சி கல்லூரிகள் (மேலதிக ஏற்பாடுகள்) அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தற்போது இவ்வாறான அரச அனுமதி பெற்ற 80 தனியார் பாடசாலைகள் மற்றும் அவற்றின் 10 கிளை பாடசாலைகள் நாடு முழுவதிலும் செயற்பட்டு வருவதுடன் இந்தப் பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர் சம்பளம், மாணவர் சீருடை, பாடப்புத்தகங்கள் என்பவற்றை பெற்றுக் கொடுப்பதற்காக வருடாந்தம் ரூபா.2,000 மில்லியனுக்கும் அதிக தொகை அரசாங்கத்தினால் செலவிடப்பட்டு வருகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

1961 இன் 08 ஆம் இலக்க துணை பாடசாலைகள் மற்றும் பயிற்சி கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவின் மூலம் கட்டாய கல்வி வயது எல்லை (5 - 14 வருடங்கள் வரையில்) கடக்கும் பிள்ளைகளுக்கு கல்வியினை பெற்றுக் கொடுப்பதற்காக பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு தனியார் துறையினருக்கு முடியாது என்பதாக ஒழுங்கு விதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான சட்ட ரீதியான நிலைமை காணப்பட்ட போதிலும் 1980 ஆம் ஆண்டளவில் இலங்கையில் வசிக்கும் வெளிநாட்டு மக்களின் பிள்ளைகளை இலக்காகக் கொண்டு சர்வதேச பாடசாலைகள் எனும் பெயரில் கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்காலத்தில் இலங்கை மாணவர்களுக்கும் குறிப்பிடத்தக்க அளவில் அந்தப் பாடசாலைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாடத் திட்டங்களில் கல்வி கற்று வருகின்றனர்.

கல்வி தொடர்பான சர்வதேச மற்றும் உள்நாட்டு ரீதியில் நடைமுறையிலுள்ள சட்ட ரீதியான கட்டமைப்பு தொடர்பில் கவனத்தில் கொள்ளுமிடத்து ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் ஒப்பந்தத்தின் 29 ஆம் இலக்கத்தின் 2 ஆவது பந்தியின் பிரகாரம் 18 வயத்திற்கு குறைந்த பிள்ளைக்கு கல்வியை பெற்றுக் கொடுப்பதில் ஏற்றுக் கொள்ளக்கூடிய மூலப் பிரமாணங்களை அறிமுகப்படுத்தி இருத்தல் வேண்டும். அதே போன்று பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கும் நிறுவனத்தினால் அரசாங்கத்தின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ள மூலப்பிரமாணங்களுக்கு அமைய தமது நிறுவனங்களை நடாத்தி செல்லப்படுகின்றது என்பதற்கான உறுதிப்பாட்டினை பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

அதே போன்று 2030 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் நோக்க இலக்கம் 4 க்கு அமைய முழுமையான, நியாயமான மற்றும் தரமான கல்விக்கான அதன் இலக்கு 4.1க்கு அமைய, ஆக்கபூர்வமான கற்றல் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அனைத்து பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் பிள்ளைகள் சுதந்திரமான, சமனான மற்றும் உயர் தரத்திலான ஆரம்ப நிலை மற்றும் இடைநிலை கல்வியினை பூர்த்தி செய்து உள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான நிலைமையின் கீழ் 2020 ஆம் ஆண்டு வரையிலும் அரச பாடசாலை எனும் தொகுதிக்கு முரணாக இலங்கை பிள்ளைகளுக்கு கல்வியை பெற்றுக் கொடுக்கும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் மதரஸா பாடசாலைகள் போன்ற பாடசாலைகள் ஒழுங்குறுத்தப்பட்டுள்ள முறைமையினை மதிபீடு செய்யும் நோக்கில் இந்த செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு பல்வேறு அரச நிறுவனங்கள் மூலம் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது எனினும், சர்வதேச பாடசாலைகள் மற்றும் மதரஸா பாடசாலைகள் தொடர்பான மொத்த தரவுகளையும் பெற்றுக் கொள்ளக் கூடிய அரச நிறுவனங்கள் இல்லாமையும், நிலவும் கொவிட் 19 சூழ்நிலைக்கு முகம் கொடுத்து இந்த அனைத்து பாடசாலைகளையும் பௌதீக பரீட்சிப்பு செய்ய முடியாது இருந்தமையும் இந்த கணக்காய்வு மேற்கொள்ளுகையில் காணப்பட்ட வரையறைகள் ஆகும்.

அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் தொடர்பில் இங்கு கண்டறியப்பட்ட பிரதான அவதானிப்புகளிடையே கல்வி அமைச்சின் முகாமைத்துவம் மற்றும் தரங்கள் கிளைகளின் மூலம் அரசின் அனைத்து பாடசாலைகளினதும் கற்றல் நடவடிக்கைகள் கண்காணிப்பு செய்யப்பட்ட போதிலும், கல்வி அமைச்சின் விடய பரப்பிற்கு உட்படாதது என கூறப்படும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் தொடர்பில் அவ்வாறான விரிவான கண்காணிப்பு இடம்பெறவில்லை என்பதும், கல்வி அமைச்சின் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்காக சுற்றறிக்கைகள்

வெளியிடப்பட்டு இருந்த போதிலும் அந்த சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளை பின்பற்றாத பாடசாலைகள் காணப்படுகின்றன என்பதும் அவ்வாறான அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு பரீட்சிப்பு செய்வதற்காக போகும் போது தேவையான ஒத்துழைப்பு அந்தப் பாடசாலைகளில் கிடைக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

அதே போன்று கல்வி அமைச்சின் ஆரம்ப அனுமதியின்றி ஒரு சில தாய்ப் பாடசாலைகளில் கிளை பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருந்தமை, ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்கையில் பட்டதாரிகள் அல்லாத ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்தல், ஒழுக்காற்று நடவடிக்கைகளில் கல்வி அமைச்சின் பிரதிநிதித்துவம் இல்லாது பாடசாலையின் சமய பிரிவுகள் மூலம் மட்டும் அடிப்படை பரீட்சிப்பு மேற்கொள்ளுதல் போன்ற காரணிகள் அவதானிக்கப்பட்டன. இந்த பாடசாலைகளில் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளம் போன்று வழங்கப்படும் சேவைகளுக்கு ஏற்ப பாடசாலைகள் தரப்படுத்தப்பட்டு அதற்கமைய அறவிடப்பட வேண்டிய ஆகக் கூடிய மற்றும் ஆகக் குறைந்த கட்டணங்களின் வீச்சு தொடர்பிலான எல்லைகள் கல்வி அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஒரு சில அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு அரசாங்கத்தினால் சீருடை, பாடப்புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் சம்பளம் போன்றவற்றிற்கான செலவினை ஏற்றிருந்த போதிலும், அந்த பாடசாலைகளின் முகாமைத்துவத்தின் தற்றுணிவின் அடிப்படையில் பாடசாலை கட்டணங்கள் உள்ளிட்ட வேறு கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட பிரதான அவதானிப்புகளில் இடையே கல்வி அமைச்சில் பதிவு செய்தல் அல்லது ஏதேனும் முறையில் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் இந்த பாடசாலைகள் தொடர்பில் இடம்பெறவில்லை என்பதை காணமுடிகிறது. ஆயினும் கம்பனிகள் சட்டம் / வியாபார பெயர் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் கீழ் வியாபார நிறுவனமாக பதிவு செய்யப்படும் இந்தப் பாடசாலைகளில் காணப்படும் பௌதீக வளங்களின் குறைபாடு, ஆசிரியர்களின் தகைமைகள் மற்றும் கற்பித்தல் முறை தொடர்பான சிக்கல்கள், கட்டணம் அறவிடப்படுவதில் உள்ள வேறுபாடுகள் உள்ளிட்ட ஏனைய சிக்கல்கள் தொடர்பில் தொடர்ந்தும் பல்வேறு மக்கள் பிரதிநிதிகளினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் நாட்டில் ஒரு சில பிரபலமானது என ஒத்துக்கொள்ளப்பட்ட, அதிக பெற்றோர்களின் கவனத்தை ஈர்த்த சர்வதேச பாடசாலைகளில் ஆசிரியர்கள் சரியான முறையில் கற்பித்தல் மேற்கொள்ளாமை, தொடர்ந்தும் ஆசிரியர்களை மாற்றுதல், தகைமை இல்லாத ஆசிரியர்கள் கற்பித்தல், விடய பரப்புகளை பூர்த்தி செய்யாமை, பிள்ளைகளின் மனநிலையை அறிந்து கொள்ளாது ஆசிரியர்கள் கற்பித்தல் முறைகளை பயன்படுத்துதல், நியாயமற்ற முறையில் கட்டணங்கள் அறவிடல், பிள்ளைகளுக்கு பாலியல் துஷ்பிரயோகங்கள் எற்படல் போன்ற சந்தர்ப்பங்களில்

கல்வி அமைச்சின் தலையீடு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன், அது ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை இங்கு தெளிவாக காணமுடிகிறது.

இந்த சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் எழுந்துள்ள பல்வேறு சிக்கல் நிறைந்த சந்தர்ப்பங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்பினர்களினால் பல்வேறு காரணிகள் கல்வி அமைச்சிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் அறியப்படுவது சர்வதேச பாடசாலைகளை தாபித்தல், நடாத்தி செல்லுதல் தொடர்பில் தீர்மானிக்கப்பட்ட அதிகாரம் கல்வி அமைச்சு என்பது பெரும்பாலான மக்களின் நம்பிக்கையாகும். ஆயினும் இந்த அனைத்து விசாரணைகளிலும் கல்வி அமைச்சு தமது தலையீடு இல்லை என்பதனை அந்தந்த நிறுவனங்களுக்கு பதிலாக பெற்றுக் கொடுத்து இருந்தபோதிலும் இந்த தீரமானிக்கப்பட்ட செயற்பாடு கல்வி அமைச்சுக்கு உரித்தாக வேண்டியது என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய காரணியாகும்.

மதரஸா பாடசாலைகள் தொடர்பிலான பிரதான அவதானிப்புகளிடையே முஸ்லீம் சமய அலுவல்கள்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 317 மட்டுமே ஆன போதிலும் 2021 செப்டெம்பர் 06 ஆம் திகதி வரையிலும் 32 பாடசாலைகள் செயற்படவில்லை என்பது அந்த திணைக்களத்தினால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் அவ்வாறான 1700 இற்கு கிட்டிய எண்ணிக்கையிலான பாடசாலைகள் செயற்பட்டு வருகின்றது என்பதும் இது தொடர்பான தரவுகள் இல்லாமை மற்றும் எந்த ஒரு அரச நிறுவனத்தினாலும் இந்த பாடசாலைகளின் கண்காணிப்பு அல்லது ஒழுங்குறுத்தல் இடம்பெறவில்லை என்பதை குறிப்பிட முடியும். இந்தப் பிள்ளைகளுக்கு நியாயமான கல்வியை பெற்றுக் கொடுக்கும் அரச பாடசாலைகள் குறித்த மாவட்டங்களில் அமைந்திருந்த போதிலும் இவ்வாறான பாடசாலைகளுக்கு கட்டாயக் கல்வியை பயில வேண்டிய வயதுப் பிள்ளைகளை ஈடுபடுத்துதல் தொடர்பில் ஒழுங்குபடுத்துவதற்கு கல்வி அமைச்சு தலையீடு செய்திருக்கவில்லை.

2019 ஏப்பிரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் இந்த பாடசாலைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்தோடு இந்த பாடசாலைகள் தொடர்பில் சர்வதேச ரீதியில் அல்லது உள்நாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பாடத் திட்டங்களின் அடிப்படையில் கற்பித்தல் நடவடிக்கைகளின் கண்காணிப்பு இடம்பெறாமை, இந்தப் பாடசாலைகளின் மாணவரிகளின் எண்ணிக்கை, கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் தகைமைகள் மற்றும் இந்தப் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பது தொடர்பிலும், இந்தப் பாடசாலைகளின் நிதி நிலைமை என்ன என்பது மற்றும் நிதியினைப் பெற்றுக் கொள்ளும் மூலாதாரம் என்ன என்பது தொடர்பிலும், இந்த பாடசாலைகள் தொடர்பில் எந்த ஒரு அரச நிறுவனத்தினதும் ஒழுங்குறுத்தல்

இடம்பெறவில்லை என்பதும் 2020 பெப்ரவரி 19 ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தொடர்பான துறை குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்கமைய சாதாரணமான கல்வியை கற்க வேண்டிய வயதில் உள்ள அனைத்து பிள்ளைகளும் தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்துடனான கல்வியை பெற்றுக கொடுப்பதற்கு தற்போதுள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும், உலகளாவிய தேவைப்பாடுகளுக்கு பொருத்தமான அத்தகைய கல்வி முறையின் தேவை தற்போது ஏற்பட்டுள்ளதால் அவ்வாறான தேவைகளுக்கு பொருத்தமான கல்வியை பெற்றுக்கொடுக்கும் பெயரில் வியாபார நிலையங்கள் உருவாகுவதை தடுப்பதற்கு அனைத்து கல்வி நிறுவனங்களையும் ஒழுங்குறுத்தும் மத்திய நிலையமாக கல்வி அமைச்சு நியமிக்கப்பட வேண்டும் என்பதும் இந்த கணக்காய்வில் பரிந்துரை செய்யப்படுகின்றது.

## 02. அறிமுகம்

### 2.1 பின்புலம்

#### 2.1.1 சுதந்திரமான கல்வியின் வெளிப்பாடு

இலங்கையில் மடாலயம் மற்றும் பௌத்த பர்ணசாலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சமயக் கல்வி கிறிஸ்துவுக்கு முன் 6 ஆவது நூற்றாண்டு வரையிலும் பரவலடைந்து வந்துள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி பாதியில், பிரித்தானியர் இலங்கையை கைப்பற்றியதன் பின்னர் கிறிஸ்தவ மிஷனரி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

1945 ஆம் ஆண்டு இலவசக் கல்வி யோசனை முறை செயற்படுத்தப்பட்டதுடன் இந்த நாட்டு கல்விமுறையில் மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டது. தற்காலத்தில் இலங்கை அரசின் மூலம் ஆரம்ப நிலை, இடைநிலை போன்று சில நேரங்களில் மூன்றாம் நிலை கல்வியும் இலவசமாக பெற்றுக் கொடுப்பதுடன், 5-15 வயது எல்லை வரையிலும் முறையான கல்வியை கட்டாயமாக்கி உள்ளது. அதேபோன்று தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பில் சாதாரண கல்வி துறைக்கு உரியதாக தேசிய பொது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் மாறுபடும் உலகிற்கு பொருத்தமான வகையில் கல்வியை மீள்கட்டமைப்பு செய்து உற்பத்தித்திறன் ஆனதாக செயற்படுத்துவதன் முன்னோடி பொறுப்பு கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அப்போது கட்டணம் அறவிடப்படும் ஆங்கில பாடசாலைகளாக மற்றும் சமய அடிப்படையைக் கொண்ட பாடசாலைகளாக காணப்பட்ட பல பாடசாலைகள் 1960 இன் 05 ஆம் இலக்க துணைப் பாடசாலை மற்றும் பயிற்சி கல்லூரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் மற்றும் 1961 இன் 08 ஆம் இலக்க துணை பாடசாலை மற்றும் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தினால் அரசின் கீழ் கொண்டு வரப்பட்டது. அரசு கைப்பற்றாத பல்வேறு தனியார் பாடசாலைகள்

ஏதேனும் கட்டணங்களை அறவிடுவதுடன் அவ்வாறான அனேக பாடசாலைகளுக்கு அரச பாடசாலைகளை விட நவீன வசதிகளை பெற்றுக் கொடுக்க முடியும் என்பது பொதுவான நம்பிக்கையாகும். தற்போது வரையிலும் நாட்டினுள் செயற்படும் மொத்த அரச அனுமதி பெற்ற 80 தனியார் பாடசாலைகளில் 48 பாடசாலைகளும் மற்றும் அவற்றின் கிளைப் பாடசாலைகள் 10 இல் 09 பாடசாலைகளில் ஆசிரியர் சம்பளத்திற்காக அரசாங்கத்திடம் நிவாரணம் பெற்றுக்கொள்ளும் பாடசாலைகளாக உள்ளதுடன், எஞ்சிய 32 பாடசாலைகள் மற்றும் ஒரு கிளை பாடசாலை என்பன ஆசிரியர் சம்பள நிவாரணம் பெற்றுக் கொள்ளாத பாடசாலைகள் ஆகும். அரசின் நிவாரணம் பெற்றுக்கொள்ளும் பாடசாலைகளுக்கு ஆசிரியர் சம்பளம், பாடப் புத்தகங்கள், சீருடை மற்றும் வேறு வசதிகள் அரசாங்கத்தினால் வழங்கப்படும்.

அடிப்படை ரீதியில் இலங்கையில் வசிக்கும் வெளிநாட்டு மக்களின் பிள்ளைகளை இலக்காகக் கொண்டு சர்வதேச பாடசாலைகள் 1980 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்காலத்தில் இந்த பாடசாலைகள் வெளிநாட்டு மக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாததுடன் வகுப்பு கட்டணங்கள் அறவிடப்படுகின்றன என்பதனால் கொடுக்கக்கூடிய வசதி மற்றும் விருப்பம் உள்ள எந்த ஒரு நபருக்கும் இந்தப் பாடசாலைகளுடன் தொடர்பினை ஏற்படுத்த முடியும். கல்வி அமைச்சினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு ஏற்ப தற்காலம் வரையிலும் 391 சர்வதேச பாடசாலைகள் காணப்படுகின்றன என்பது அறியப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, இலங்கையில் பிரதான பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் என தமது சமயங்களை முன் நிறுத்தி கல்வி மத்திய நிலையங்களும் செயற்பட்டு வருகின்றன. இதில் ஒரு சில கல்வி மத்திய நிலையங்கள் கல்வி அமைச்சினால் பரிந்துரை செய்யப்பட்ட பாட விதானத்தின் கீழ் நியாயமான கல்வியை பெற்றுக் கொடுப்பதுடன் அரச பரீட்சைகளிலும் ஈடுபடுத்துகின்றது.

### 2.1.2 இலங்கையில் பாடசாலை செல்லும் வயதில் உள்ள பிள்ளைகள் கல்வி கற்கும் நிறுவனங்கள்

| | நிறுவனம் | நிறுவனங்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (அ) | அரச பாடசாலைகள் (தேசிய மற்றும் மாகாண) | 10,165 | 4,061,653 |
| (ஆ) | அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் | 89 | 135,600 |
| (இ) | சர்வதேச பாடசாலைகள் | 391 | 139,727 |

| | | | | (அண்ணளவாக) |
|---|---|---|---|---|
| (ஈ) | சமய பாடசாலைகள் | | | |
| | (i) | பிரிவென | 801 | 68,319 |
| | (ii) | சீலமாதா நிறுவனங்கள் | 03 | 45 |
| | (iii) | கத்தோலிக- தேவாலயங்கள் | 04 | 16 |
| | (iv) | இந்து – பூஜகர்களுக்கு கல்வி கற்பிக்கும் | 03 | 40 |
| | (v) | மதரஸா பாடசாலைகள் / அரபு பாடசாலைகள் | 317 (முஸ்லீம் சமய அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை மட்டும். இதில் 32 செயற்படவில்லை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.) | 28,424 |

**(ஆதாரம்: 2019 ஆம் ஆண்டு வருடாந்த பாடசாலை கணக்கெடுப்பு அறிக்கை, குறித்த நிறுவனங்களின் தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்ட கடிதங்கள்)**

## 2.2 கணக்காய்விற்கான அதிகார பலம்

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரைகள் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 3(1)(ஈ), 5(2), 12(ஏ) பிரிவிற்கு அமைய எனது தலைமையின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.3 கணக்காய்வு பிரவேசம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சிக்கல்கள் கலந்துரையாடப்படுவதற்கு இந்தத் தலைப்பின் கீழ் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்வதற்கான நுழைவு திட்டமிடப்பட்டது.

**(அ) அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கான கண்காணிப்பு முறைமைகள் போதுமானதாக இல்லாமை**

1961 இன் 08 ஆம் இலக்க துணை பாடசாலை மற்றும் பயிற்சி கல்லூரி (மேலதிக ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் கீழ் செயற்படும் அரசின் நிவாரணம் பெறும் அல்லது பெறாத பாடசாலைகள் "அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள்" ஆகும். இவ்வாறான 80 பாடசாலைகள் மற்றும் 10 கிளை பாடசாலைகள் நாடு முழுவதிலும் பரந்து காணப்படுகின்றன. இந்த பாடசாலைகள் கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைகள் பிரிவினால் முகாமைத்துவப்படுத்தப்படுவதுடன் அரசாங்கத்தினால் ஆசிரியர் சம்பளம், பாடப்புத்தகங்கள், சீருடை போன்ற நிவாரணங்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் ஆசிரியர் சம்பளம் மற்றும் வேதனம், வேறு கொடுப்பனவு மற்றும் ஆதன கடன் வட்டிக்காக மட்டும்

ரூபா.2,053,868,481 செலவிடப்பட்டிருந்தது. அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் ஒழுங்குறுத்தலுக்கான சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல் கடிதங்கள் என்பன வெளியிடப்பட்டிருந்த போதிலும், அந்தப் பாடசாலைகள் அதற்கு நேரொத்து செயற்படாமை, அந்தப் பாடசாலைகளின் தர நிலைமை தொடர்பாக போதுமான கணிப்பீடு மேற்கொள்ளப்படாமையும் காரணமாக பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன.

**(ஆ) சர்வதேச பாடசாலைகளை பதிவு செய்கையில் மற்றும் நடாத்திச் செல்கையில் கல்வி அமைச்சின் கண்காணிப்பிற்கு கீழ்படியாமை**

1961 இன் 08 ஆம் இலக் துணை பாடசாலை மற்றும் பயிற்சி கல்லூரி (மேலதிக ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவின் மூலம் கட்டாய வயது வரம்பினை (5 – 14 வயது வரை) கடக்கும் பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதற்காக பாடசாலைகளை ஆரம்பிப்பதற்குத் தனியார் பிரிவினருக்கு முடியாது என்பதாக ஒழுங்கு விதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதனால் சர்வதேச பாடசாலைகள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் கம்பனியொன்றாக அல்லது மாகாண வியாபார பெயர் பதிவு செய்யும் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு கல்வி நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது. அவ்வாறு கல்வி நிறுவனமாக பதிவு செய்யப்படும் போது, அலங்கை கல்வி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் முக்கியமான அரச நிறுவனமாக கல்வி அமைச்சிடம் இருந்து எதுவிதமான முன் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. அந்தப் பாடசாலைகள் கல்வி அமைச்சின் கீழ் ஒழுங்குறுத்தப்படவில்லை என்பதையும், கல்வி தரங்கள் பாடசாலைகளுக்கிடையே அனேகமாக வேறுபடுகின்றன என்பதையும் காணமுடிகின்றது. இவ்வாறான 391 சர்வதேச பாடசாலைகள் தற்போது வரையிலும் நாடு முழுவதிலும் செயற்பட்டு வருகின்றது என்பது கல்வி அமைச்சினால் கண்டறியப்பட்டுள்ளது.

**(இ) சமய பாடசாலைகளை ஒழுங்குறுத்த போதுமான நடைமுறையொன்று செயற்படாமை**

பிரதானமாக தமது சமயத்தினை முன்நிறுத்தி செயற்படும் கல்வி நிறுவனங்களும் இலங்கையில் செயற்பட்டு வருவதை காணமுடிகிறது. பௌத்த, கத்தோலிக்க, இந்து போன்ற சமயங்களுக்கு உரிய பூசை செய்பவர்களை உருவாக்கும் நோக்கில் சமய பாடசாலைகள் நடாத்தப்பட்டு வருகின்றமை தொடர்பிலான பரீட்சிப்பின் போது பௌத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்ட பிரிவென நிறுவனம் கல்வி அமைச்சினால் பரிந்துரை செய்யப்பட்ட பாடவிதானத்தின் கீழ் கற்பித்தலை மேற்கொள்ளும் நிறுவனம் என்பதும் கத்தோலிக்க மற்றும் இந்து சமயம் தொடர்பான பூசை செய்வோரை உருவாக்கும் நோக்கில் நடாத்தப்பட்டு வரும் நிறுவனம்

சாதாரண கல்வியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றது என்பதும் வெளிப்படத்தப்பட்டுள்ளது. ஆயினும் கட்டாயக் கல்வி வயது வரம்பினைக் கடக்கும் பிள்ளைகளுக்கு சாதாரண கல்வியை வழங்காது சமய கல்வியை மட்டும் பெற்றுக் கொடுக்கும், கல்வி அமைச்சின் கீழ் ஒழுங்குறுத்தப்படாத மதரசா கல்வி நிறுவனமும் நாடு முழுவதிலும் செயற்பட்டு வருகின்றது. அதற்கமைய இந்தப் பிள்ளைகளுக்கு நியாயமான கல்வியை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் தவறியுள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் மூலமும், அனைத்து நபர்களும் கல்வியில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் நியாயமான மற்றும் சமமான இடத்தினை பெற்றுக் கொள்ளும் உரிமை உறுதிப்படுத்தல் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் செயற்படும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் மதரசா பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கும் தரமான உயர் கல்வியினை பெற்றுக்கொடுத்தல் மற்றும் இத்துறையில் ஏற்பட்டுள்ள சாதாரண சிக்கல்கள் மற்றும் இந்த துறையினை ஒழுங்காக நடாத்திச் செல்வதற்கு தேவையான குறித்த அரச நிறுவனங்களின் ஒழுங்குகள் போதுமானதா என்பதை மதிப்பீடு செய்தல் இந்த கணக்காய்வில் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.4 கணக்காய்வு முறைமைகள்

(அ) பொறுப்புக் கூற வேண்டிய அரச நிறுவனங்கள் மற்றும் உரிய பிரிவுகளுடன் கலந்துரையாடல் மற்றும் உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளுதல்

(i) கல்வி அமைச்சின் உயர் முகாமைத்துவம் மற்றும் தனியார் பாடசாலை பிரிவுடன் கலந்துரையாடல், வினாக்கொத்து மூலம் தகவல்கள் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அவற்றை பகுப்பாய்வு செய்தல்.

(ii) கல்வி, சுகாதாரம் மற்றும் பிள்ளைகள் தொடர்பாக செயற்படும் குறித்த துறைகளின் உத்தியோகத்தர்கள் உடன் கலந்துரையாடுதல், வினாக்கொத்து மூலம் தகவல்கள் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அவற்றை பகுப்பாய்வு செய்தல்.

(iii) அரச பாடசாலைகள் போன்று அரச சார்பற்ற பாடசாலைகளும் அரச நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் உரிய வழிகாட்டல்கள், சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல் கடிதங்கள் என்பவற்றிற்கு நேரொத்து இருத்தலை பரீட்சிப்பதற்கு வினாகொத்து அனுப்புதல் மூலம் தகவல்கள் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அவற்றை பகுப்பாய்வு

செய்தல் இங்கு குறித்த அரச நிறுவனம் என்பது இந்த கணக்காய்விற்கு தொடர்புடைய நிறுவனமாகும்.

(ஆ) கோவைகளை பரீட்சிப்பு செய்தல்

கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைகள் பிரிவினால் பேணி செல்லப்படும் கோவைகளை பரீட்சிப்பு செய்தல்.

(இ) பௌதீக அவதானிப்புகள்

குறித்த பாடசாலைகளுக்கு சென்று அவற்றின் பௌதீக வசதிகள், கற்பித்தல் முறைமைகளை பரீட்சித்தல் மற்றும் பிள்ளைகளின் கருத்துக்களை பெற்றுக் கொள்ளுவதற்கு எதிர்பார்த்த போதிலும், நாட்டில் நிலவும் தற்கால சுகாதார நிலைமை காரணமாக பௌதீக அவதானிப்புகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 2.5 கணக்காய்வின் நோக்கங்கள் மற்றும் மூலப்பிரமாணங்கள்

### 2.5.1 கணக்காய்வு நோக்கங்கள்

கட்டாய கல்வி கற்க வேண்டிய வயதில் இருக்கும் பிள்ளைகளுக்காக இலங்கையில் நடத்திச் செல்லப்படும் அரச பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் (அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள், சமயப் பாடசாலைகள்) தொடர்பில் உரிய அரச நிறுவனத்தின் மூலம் முறையான ஒழுங்குறுத்தல் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல் இந்தக் கணக்காய்வின் அடிப்படை நோக்கமாகும்.

### 2.5.2 கணக்காய்வு மூலப்பிரமாணங்கள்

| | மூலப்பிரமாணங்கள் | மூலம் |
|---|---|---|
| (i) | VI ஆம் அத்தியாயத்தின் (ஏ) பிரிவு – கல்வியின் உரித்தினை சான்றுபடுத்தல் | அரசியலமைப்புச் சட்டம் |
| (ii) | 2015 இன் 1 ஆம் இலக்க குழந்தைகளை கட்டாயமாக பாடசாலைக்கு வரவழைக்கும் கட்டளை | 1939 இன் 31 ஆம் இலக்க கல்வி கட்டளைச் சட்டத்தின் 37 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 2016 ஏப்பிரல் 20 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 1963/30 கொண்ட அதிவிசேட வர்தமானி |

| | | |
|---|---|---|
| (iii) | வழிகாட்டல் நடைமுறைகள் | தேசிய கல்விக் கொள்கை (2016 சட்ட வரைபு) |
| (iv) | 28 மற்றும் 29 ஆம் பிரிவு – சிறுவர்களுக்கு கல்வியை பெற்றுக்கொள்வதற்கான உரிமை | ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் உடன்படிக்கை |
| (v) | நோக்கம் 4 இலக்கு 1 – அனைத்து சிறுவர்களுக்கும் சமனான மற்றும் தரமான கல்விளை சான்றுபடுத்தல். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் |
| (vi) | தனியார் பாடசாலைகளை அரசாங்கத்திற்கு சுவீகரிப்பதற்கான அதிகாரச்சட்டம்<br>- 6(a)பிரிவு– அரசாங்த்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் அதர கல்விக் கொள்கைக்க இணங்க வேண்டும் என்பது.<br>- 6(h) பிரிவு – ஆசிரியர் ஒருவரை அகற்றுவதற்குரிய ஏற்பாடுகள் | 1960 இன் 5 ஆம் இலக்க துணைப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூாரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் |
| (vii) | 25 ஆம் பிரிவு – புதிய தனியார் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட முடியாது என்பது. | 1961 இன் 08 ஆம் இலக்க துணைப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூாரிகள் (மேலதிக ஏற்பாடுகள்) சட்டம் |
| (viii) | மானியம் கிடைக்காத பாடசாலைளுக்கு மானியம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் | 1981 இன் 65 ஆம் இலக்க துணைப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூாரிகள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தப்பட்ட) சட்டம் |

| | | |
|---|---|---|
| (ix) | அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளின் கிளை பாடசாலைகளுக்காக அனுமதி வழங்கும் நிபந்தனைகள் | இலக்கம் அமப/18/0850/742/017 மற்றும் 2018 மே 23 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவை தீர்மானம் |
| (x) | அரச அனுமதி பெற்ற நிவாரணம் பெறும் / பெற்றுக் கொள்ளாத தனியார் பாடசாலைகளில் கல்வி மற்றும் நிறுவன நடவடிக்கைகள் நடாத்திச் செல்லல் தொடர்பான அறிவுரைகள் | கல்வி அமைச்சின் இலக்கம் 2005/31 கொண்டதும் 2005 ஒக்டோபர் 31 ஆம் இலக்க சுற்றறிக்கை |
| (xi) | அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி மற்றும் நிறுவன நடவடிக்கைகள் செயற்படுத்துதல் தொடர்பான அறிவுரைகள் | கல்வி அமைச்சின் இலக்கம் ஈடீ/01/10/01/01/16 கொண்டதும் 2008 நவம்பர் 13 ஆம் இலக்க சுற்றறிக்கை |
| (xii) | க.பொ.த. (உயர்தர) தொழில்நுட்பவியல் பாடவிதானத்தினை அறிமுகப்படுத்துதல் தொடர்பான பாடசாலைகளை தெரிவு செய்வதற்குரிய அளவிடைகள் | கல்வி அமைச்சின் இலக்கம் 20/2016 கொண்டதும் 2016 ஜூலை 08 ஆம் திகதிய சுற்றறிக்கை |
| (xiii) | துணை பாடசாலைகள் மற்றும் நிவாரணம் பெறாத பாடசாலைகள் அவற்றின் ஆசிரியர் வசதிகள், நியமனங்கள் மற்றும் பயிற்சிக் காலப்பகுதி தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய விதிகள் | 1983 திசெம்பர் 09 ஆந் திகதிய வர்த்தமானியில் கல்விக் கட்டளைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட 1983 இன் துணை பாடசாலைகள் மற்றும் நிவாரணம் பெறாத பாடசாலைகள் கட்டளை |

| | | |
|---|---|---|
| (xiv) | ஆசிரியர் சேவை பிரமாணத்தின் 5.1, 5.2, 7.2.1 மற்றும் 7.2.2 ஆம் பிரிவுகள் | 2014 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 1885/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி |
| (xv) | அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலையில் இருக்க வேண்டிய கல்விசார் பதவியணியினரை தீர்மானிப்பதற்குரிய நிபந்தனைகள் | கல்வி அமைச்சின் 2018 யூன் 20 ஆந் திகதிய இலக்கம் 17/2018 கொண்ட சுற்றறிக்கை |
| (xvi) | சர்வசேத பாடசாலைகள் தொடர்பான பரிந்துரைகள் | 2013 செப்டெம்பர் 17 ஆம் திகதிய சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பில் கவனத்தில் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை |
| (xvii) | வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவரினால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு முதலீட்டின் போது கருத்திற்கொள்ளப்படும் நிபந்தனைகள் | 1978 இன் 4 ஆம் இலக்க பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு் (BOI) சட்டத்தின் 16 ஆம் பிரிவு |
| (xviii) | கம்பனியியொன்றின் பதிவு செய்யும் போது கருத்திற்கொள்ளப்படும் மூலப்பிரமாணங்கள் | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டம் |
| (xix) | வியாபாரமொன்றினை பதிவு செய்யும் போது கருத்திற்கொள்ளப்படும் மூலப்பிரமாணங்கள் | வியாபார பெயர் பதிவு செய்யும் கட்டளைச்சட்டம் |

| | | |
|---|---|---|
| (xx) | அரசின் புதிய பாடசாலையொன்றினை ஆரம்பிக்கும் போது கருத்திற்கொள்ளப்படும் மூலப்பிரமாணங்கள் | கல்வி அமைச்சினால் 1981 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டுள்ள பாடசாலை கட்டமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல் கோவையின் 2.1 ஆம் பந்தி |
| (xxi) | பாடசாலையொன்றுக்கு தேவையான பௌதீக வளங்களுக்கான அளவிடைகள் | கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ள பௌதீக வளங்கள் முகாமைத்துவம் மற்றும் பௌதீக வளங்களுக்கான அளவிடைகள் தொடர்பான அதிபர் கையேடு |
| (xxii) | சுரக்ஷா காப்புறுதியை வழங்குதல் தொடர்பான நிபந்தனைகள் | கல்வி அமைச்சின் இலக்கம் 2017/35 இலக்கம் கொண்ட 2017 செப்டம்பர் 29 ஆம் திகதிய சுற்றறிக்கை |
| (xxiii) | பாடசாலை சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான அறிவுரைகள் மற்றும் மதிப்பீட்டு குறிகாட்டிகள் | கல்வி அமைச்சின் 2019 சனவரி 22 ஆம் திகதிய ரீடீ/1/21/6/4 ஆம் இலக்க சுற்றறிக்கை |
| (xxiv) | தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் | தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் குழு அறிக்கை |
| (xxv) | மதரஸா கல்விக் கட்டமைப்பு தொடர்பான ஆராய்ச்சி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் | இலங்கையின் முன்னைய மதரஸா கல்விக் கட்டமைப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கை |

## 2.6 கணக்காய்வு விடயப் பரப்பு

அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் மதரசா பாடசாலைகளின் நடவடிக்கைகள் தொடர்பில் மட்டும் இந்த கணக்காய்வில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## 2.7 கணக்காய்வு விடயப் பரப்பு மட்டுப்படுத்தப்படல்

(அ) சர்வதேச பாடசாலைகளுக்கு சென்று அந்தப் பாடசாலைகளை பௌதீக பரீட்சிப்பு செய்வதற்கு உரிய சட்ட ஏற்பாடுகள் இல்லாத காரணத்தாலும், நிலவும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் கணக்காய்வு காலப்பகுதியினுள் மூடப்பட்டிருந்த காரணத்தாலும் அரச அனுமதி பெற்ற தனியார் மற்றும் பாடசாலைகளையும் பௌதீக பரீட்சிப்புக்கு உட்படுத்தமுடியவில்லை.

(ஆ) சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் போதுமான அளவில் தரவுகள் கல்வி அமைச்சிடம் இல்லாமை.

(இ) சகல மதரசா பாடசாலைகள் தொடர்பில் போதுமான அளவு தரவுகள் முஸ்லீம் சமய விவகாரத் திணைக்களத்திடம் இல்லாமை

(ஈ) பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுமதிப்பதில் பெற்றோர்கள் பெரும் போட்டித்தன்மை உடன் செயற்படுகின்றனர். அதற்கமைய பெற்றோர்களிடையே பாடசாலைகள் தொடர்பில் காணப்படுகின்ற விருப்பு எவ்வாறு உருவாகின்றது என்பதனை அளவிடுவதற்கான மூலப்பிரமாணங்கள் இல்லாமை.

## 2.8 தொடர்புடைய நிறுவனங்கள்

| நிறுவனங்கள் | தொடர்புபடும் முறைகள் |
|---|---|
| (அ) கல்வி அமைச்சு | இலங்கையில் பாடசாலை கல்வி தொடர்பில் பொறுப்பேற்கும் பிரதான அரச நிறுவனமானது கல்வி அமைச்சு ஆகும். இந்த கணக்காய்வில் கலந்துரையாடப்படும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் மட்டும் கல்வி அமைச்சின் தனியார் பாடசாலை பிரிவின் மூலம் கண்காணிப்பு செய்யப்படும். |
| (ஆ) மாகாணக் கல்வி திணைக்களம் | அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் கண்காணிப்பின் போது கல்வி அமைச்சின் மாகாண கல்வி திணைக்களம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இந்த திணைக்களத்திடம் அரச சார்பற்ற பாடசாலைகள் |

| | | |
|---|---|---|
| | | தொடர்பில் கிடைக்கப்பெறும் கடிதங்கள் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்படும். |
| (இ) | சுகாதார அமைச்சு | அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலையின் உள்ளே சுகாதார சேவையை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு கட்டுப்பட்டுள்ளது. மாகாண மட்டத்தில் அந்தப் பொறுப்பினை மாகாண சுகாதார பணிப்பாளரிடமும், மாவட்ட மட்டத்தில் பிரதேச சுகாதார பணிப்பாளரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களின் மேற்பார்வையின் கீழ் பாடசாலையின் உள்ளே பாடசாலை சுகாதார வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யும் பொறுப்பு பொது சுகாதார பரீட்சகரின் வசம் உள்ளது. |
| (ஈ) | கம்பனிப் பதிவாளர் திணைக்களம் | கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் மூலம் சர்வதேச பாடசாலைகள் எனும் பெயரில் அறியப்படும் கல்வி நிறுவனங்கள் ''கம்பனி'' ஆக பதிவு செய்தல் இடம்பெறுகின்றது. |
| (உ) | முதலீட்டு சபை | சர்வதேச பாடசாலைகளுக்கான முதலீடுகளுக்கு அனுமதியினை பெற்றுக் கொடுத்தல். |
| (ஊ) | பரீட்சை ஆணையாளர் நாயகம் திணைக்களம் | உள்நாட்டு பாட விதானத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் பரீட்சை நடவடிக்கைகளை நடாத்துதல். |
| (எ) | புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | பௌத்த விவகார திணைக்களம், இந்து சமய அலுவல்கள்திணைக்களம், முஸ்லீம் சமய அலுவல்கள்திணைக்களம், கிறிஸ்தவ சமய அலுவல்கள்திணைக்களம் என்பன இந்த அமைச்சின் கீழ் செயற்படுகின்றன. |
| (ஏ) | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | கல்வி கற்கும் வயதில் உள்ள பிள்ளைகளின் சிக்கல்கள் தொடர்பில் தலையீடு செய்தல். |

## 3. விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புகள்

### 3.1 அனைவருக்கும் தரமான கல்விக்கான வசதிகள்

#### 3.1.1 அரசியலமைப்பு சட்டம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் VI ஆம் அத்தியாயத்தில் அரச கொள்கைகளை செயற்படுத்தும் கோட்பாடு மற்றும் அடிப்படை கடமைகளின் கீழ் கல்வி அறிவின்மை முற்றாக அழித்தல் மற்றும் அனைவருக்கும் கல்வியில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் நியாயமான மற்றும் சமமான வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துதல் குறிப்பிடப்பட்டுள்ளது.

#### 3.1.2 கல்விக் கட்டளைச் சட்டம்

1939 இன் 31 ஆம் இலக்க கல்வி கட்டளை சட்டத்தின் 37 ஆம் பிரிவின் கீழ் கல்வி அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டடுள்ள அதிகாரத்திற்கு அமைய 2016 ஏப்பிரல் 20 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 1963/30 கொண்ட அதிவிசேட வர்தமானியில், 2015 இன் 1 ஆம் இலக்கம் கொண்ட பிள்ளைகள் கட்டாயமாக பாடசாலைகளுக்கு வரும் கட்டளையில் ‘‘ஐந்து வயதிற்கு குறைந்த மற்றும் பதினாறு வயதிலும் கூடாத அனைத்து பிள்ளைகளினதும் பெற்றோர்களினால், அந்தப் பிள்ளையின் கல்விக்காக வேறுவகையில் போதுமான மற்றும் பொருத்தமான ஒழுங்கு முறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்காதவிடத்து, தினமும் பாடசாலைக்கு வருகை தந்து கல்வியை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையினை ஒழுங்கு செய்து தருதல் வேண்டும்’’ என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே போன்று அதில் 13 ஆவது கட்டளைகளுக்கு அமைய கட்டாய கல்வி வயதினை கடக்கும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது இருக்க காரணமாகக் கூடியது சுகயீனம், மன அல்லது உடல் பலவீனம் அல்லது வைத்திய காரணங்களினால் பிள்ளை பாடசாலைக்கு வருவது தவிர்க்கப்பட்டுள்ளது என்பது, தற்காலிக நடவடிக்கையாக முறையற்ற கல்வி மத்திய நிலையத்திற்கு அல்லது விசேட பாடசாலையொன்றுக்கு அல்லது தொழில்நுட்ப பயிற்சி நிலையமொன்றுக்கு அல்லது 1979 இன் 64 ஆம் இலக்க பிரிவென கல்வி சட்டத்தில் பொருள் கூறப்பட்ட பிரிவெனாவிற்கு பிள்ளையை அனுப்புதல் என்பதும் அல்லது ஒரு தவிர்க்க முடியாத காரணத்தினால் மட்டும் என்பதும் மேலதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.1.3 2016 ஆம் ஆண்டு பிரேரிக்கப்பட்ட பொது கல்விக் கொள்கை

தேசிய கல்வி ஆணைக்குழுவினால் இறுதியாக 2016 ஆம் ஆண்டில் இலங்கையில் பொது கல்வி தொடர்பில் தேசிய கொள்கைக்கான பிரேரணை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு தினம் வரையிலும் அது அங்கீகரிக்கப்பட்ட கொள்கையாக கல்வி ஒழுங்கமைப்பின் உள்ளே இணைக்கப்படவில்லை. ஆயினும் அதில் உள்ள யோசனைகளை கவனத்திற்கொண்டு தேவைக்கேற்ப ஒரு சில மறுசீரமைப்பு கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வெளிப்படுத்தப்பட்டுள்ள கல்வி கொள்கையின் வழிகாட்டலின் கோட்பாடாக குறிப்பிடப்பட்டுள்ள 17 பிரேரணைகளில் பின்வரும் காரணிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

- 18 வயதிற்கு குறைந்த அனைத்து நபர்களும் பிள்ளைகள் என வரையறை செய்யப்படுவர்.
- பாடசாலை என்பது மக்களுக்கு கல்வி சேவையை பெற்றுக் கொடுக்கும் பிரதான வழங்குனராக இருப்பதுடன், அனைத்து இலங்கை பிள்ளைகளுக்கும் இந்த சேவைகள் வழங்கப்பட வேண்டியது அவன்/அவளின் உரிமையாகும்.
- அரசாங்கம் விசேட கவனத்துடன் பிள்ளைகளின் உடல், மன, நல்லொழுக்கம், சமய மற்றும் சமூக முழு அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் அவர்களை சுரண்டுதல் மற்றும் வேறுபாடு காட்டுவதில் இருந்து பாதுகாப்பதற்கு அவர்களின் உரிமைகள் அரசாங்கத்தினால் விசேட கவனத்துடன் மேம்படுத்தப்பட வேண்டும்.
- உடல் அல்லது மன முதிர்ச்சி அடையாமை காரணமாக அல்லது உடல் பலவீனப்பட்டு இருப்பதன் காரணமாக பிள்ளைகளுக்கு குறித்த சட்ட ரீதியான பாதுகாப்பு உள்ளிட்ட விசேட பாதுகாப்பு, கவனம் மற்றும் அவதானம் என்பன கிடைத்தல் வேண்டும்.
- பிள்ளைகளுக்கு நான்கு வயது தொடக்கம் பதினாறு வயது வரையிலும் கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும்.
- பொருத்தமான விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடும் நோக்கில் ஓய்வு நேரம் ஒன்று இருத்தல் பிள்ளைகளுக்கு உள்ள உரிமை என அரசாங்கம் உணர்ந்து அதற்கான அதிகாரம் செலுத்தப்பட வேண்டியதுடன் கலாசார, கலைத்துவ, பொழுதுபோக்கு மற்றும் ஓய்வு நேர நடவடிக்கைகளுக்கு பொருத்தமான மற்றும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

இங்கு விசேடமாக கல்வியின் தர அபிவிருத்தி, கல்வி திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், கற்பித்தல் சுற்றாடல் போன்ற காரணிகள் தொடர்பில் விரிவான யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கணக்காய்வில் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள், சமய பாடசாலைகள் போன்ற கல்வி நிறுவனங்களில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் எதிர்காலத்தில் கலந்துரையாடப்படும் கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளுகையில், மொத்த கல்விக்காகவும் தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கல்வி கொள்கை ஒன்று பொது சட்டமாக காணப்படாமையே, அந்த ஒழுங்கமைப்பில் நிலவும் குறைபாட்டினை திருத்தம் செய்யப்பட முடியாமைக்கு காரணமாக உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.1.4 ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமை உடன்படிக்கை

ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமை உடன்படிக்கை எனப்படுவது சிறுவர்களின் உரிமைகள் எவை என்பது குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆவணமாகும். இந்த உடன்படிக்கை இலங்கை அரசினாலும் கையெழுத்திடப்பட்டு 1991 ஆம் ஆண்டு உறுதிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் மூலம் உலகப் புகழ்பெற்ற அளவில் அனைத்து பிள்ளைகளுக்கும் அனுபவிக்க வேண்டிய உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்த உரிமைகளை உறுதிப்படுத்துதல் பெரியோர்களது போன்றே அரசாங்கத்தினதும் பொறுப்பு என்பது அழுத்தமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் 28 ஆவது பிரிவிற்கு அமைய கல்வியைக் பெற்றுக் கொள்ளுவதற்கு அனைத்து பிள்ளைகளுக்கும் உரிமை உள்ளது. குறைந்தபட்சம் ஆரம்பக் கல்வியை கட்டாயப்படுத்துவதற்கும், அதனை இலவசமாக பெற்றுக் கொடுப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பு என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் 29 ஆவது பிரிவிற்கு அமைய கல்வியின் குறிக்கோளானது பிள்ளையின் ஆளுமை, அறிவு, திறன்கள் மற்றும் மன உடல் ரீதியான ஆற்றல்களை முழுமையாக அபிவிருத்தி செய்வதாகும். பொறுப்புடன், அமைதியான சுதந்திர சமூகத்தில் வாழ்வதற்கும் ஏனைய நபர்களின் உரிமைகளை உணர்ந்து கொண்டு சூழலுக்கு மதிப்பளித்து வாழ்வதற்கும் கல்வியின் மூலம் பிள்ளைகள் தயார்படுத்தப்பட வேண்டும்.

### 3.1.5 நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கங்கள் மற்றும் இலக்குகள்

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் (2015-2030) நோக்கம் 4 இன் 1 ஆவது இலக்குக்கு அமைய உற்பத்தித் திறனான கற்றல் பெறுபேற்றினை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் அனைத்து பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் பிள்ளைகள் சுதந்திரமான, சமனான மற்றும்

உயர்தரமான, ஆரம்ப நிலை மற்றும் இடைநிலை கல்வியை பூர்த்தி செய்து உள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலும் நோக்கம் 4 இல் இலக்கு (அ) விற்கு அமைய பிள்ளைகள், ஊனமுற்றோர் மற்றும் ஆண் பெண் சமூகம் தொடர்பில் உணர்ச்சிகரமான முறையில் கல்வி வசதிகளை கட்டியெழுப்புதல் அபிவிருத்தி செய்தல் மற்றும் அனைவரும் பாதுகாப்பாக, வன்முறையற்று அனைவரும் உள்ளடக்கப்படக்கூடிய உற்பத்தித் திறனான கற்றல் சூழலை உறுதிப்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

இந்த அறிக்கையில் எதிர்காலத்தில் கலந்துரையாடப்படும் கணக்காய்வுகளுக்கேற்ப, அரச சார்பற்ற பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் கல்வியில் மேற்கூறப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் 4 இன் இலக்கினை எட்டுவதற்கு அந்தப் பாடசாலைகள் பதிவு செய்கையில், நடாத்திச் செல்லுகையில் மற்றும் கண்காணிப்பின் போது, பாடசாலையொன்றில் இருக்க வேண்டிய தரம் மற்றும் போதியளவு நடைமுறைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.2 அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள்

### 3.2.1 பின்புலம்

விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) 1945 ஆம் ஆண்டு இலவச கல்வி யோசனை முறை நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் கட்டணம் அறவிடப்படும் ஆங்கில பாடசாலைகளாக காணப்பட்ட பாடசாலைகள் மற்றும் சமய அடிப்படையில் நடாத்தப்பட்டு வந்த பாடசாலைகளுக்கு இலவச கல்வி முறைக்கு வருவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) இவ்வாறு பாடசாலைகள் அரசாங்கத்தின் கீழ் பொறுப்பேற்கும் கொள்கையை தொடர்ந்தும் செயல்படுத்துவதன் பெறுபேறாக 1960 இன் 5 ஆம் இலக்க துணை பாடசாலை மற்றும் பயிற்சி கல்லூரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1961 இன் 8 ஆம் இலக்க துணை பாடசாலை மற்றும் பயிற்சி கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டம் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் துணைப் பாடசாலைகளை அரசாங்கத்தின் கீழ் பொறுப்பேற்றுள்ளதுடன், அவ்வாறு பொறுப்பேற்பதற்கு விருப்பமற்ற பாடசாலைகள் அந்த சந்தர்ப்பத்தில் ''நன்கொடை பெறாத பாடசாலைகள்'' என அறியப்பட்டுள்ளது. நன்கொடை பெற்றுக்கொள்ளாத பாடசாலைகள் ஆனபோதிலும் அரசாங்கத்தின் கல்விக் கொள்கைக்கு நெரொத்து இருத்தல் வேண்டும் என 1960 இன் 05 இலக்க சட்டத்தின் 6(a) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது வரையிலும் காணப்படும் அனைத்து தனியார்

பாடசாலைகளும் பொதுவாக ‘‘நன்கொடை பெறாத பாடசாலைகள்’’ எனம் ரீதியிலேயே நடாத்தப்பட்டு வந்துள்ளது.

(இ) இவ்வாறு நன்கொடை பெற்றுக்கொள்ளாத தனியார் பாடசாலைகள் எனும் ரீதியில் நடாத்தப்பட்ட ஒருசில பாடசாலைகளுக்கு ஆசிரியர் சம்பளம் வழங்குவதில் பொருளாதார சிக்கல் காரணமாக, 1981 இன் 65 ஆம் இலக்க துணைப் பாடசாலை மற்றும் பயிற்சி கல்லூரி (விசேட ஏற்பாடுகள்) (திருத்திய) சட்டம் சட்டபூர்வமாக்கப்பட்டு, ‘‘நன்கொடை பெற்றுக் கொள்ளாத பாடசாலைககளுக்கு நிதி உதவி வழங்கும் கட்டளை’’ அறிமுகப்படுத்தப்பட்டு, அதன் கீழ் ஆசிரியர் சம்பளம் வழங்குவதற்கு உதவி வழங்குதல் விதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு உதவி பெற்றுக்கொள்வதுடன் ஆசிரியர் சம்பளத்திற்காக நன்கொடை பெற்றுக்கொள்ளும் தனியார் பாடசாலைகள் ‘‘நன்கொடை பெறும் பாடசாலைகள்’’ எனவும் அவ்வாறு ஆசிரியர் சம்பள உதவி பெறாத பாடசாலைகள் ‘‘நன்கொடை பெற்றுக்கொள்ளாத பாடசாலைகள்’’ எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது ‘‘அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள்’’ எனும் பெயரின் கீழ் இந்த பாடசாலைகள் அனைத்தும் அறியப்படுகின்றன.

(ஈ) 2020 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நாட்டில் செயற்பட்டுவரும் சகல அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை 80 ஆகும். அதில் 47 பாடசாலைகள் ஆசிரியர் சம்பளதிற்கான உதவி பெறும் பாடசாலைகளாக உள்ளதுடன், எஞ்சிய 33 பாடசாலைகள் ஆசிரியர் சம்பள உதவி பெற்றுக்கொள்ளாத பாடசாகைள் ஆகும். இதற்கு மேலதிகமாக உதவி பெறும் 07 தாய் பாடசாலைகளில் 09 கிளை பாடசாலைகளும், உதவி பெற்றுக் கொள்ளாத 01 தாய்ப் பாடசாலையில் ஒரு கிளை பாடசாலை வீதம் 10 கிளை பாடசாலைகள் நடாத்தப்பட்டு வந்துள்ளது. தனியார் பாடசாலைகள் பிரிவினால் கணக்காய்விற்கு கிடைத்துள்ள தரவுகளுக்கேற்ப 2019 ஜூன் 01 ஆம் திகதியில் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 132,800 ஆகும்.

(உ) அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட உள்நாட்டு பாட விதானத்தில் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மாணவர்களை அனுமதிக்கையில் பெற்றுக்கொள்ளப்படும் நன்கொடை தொகைக்கு மேலதிகமாக, வருடாந்தம் அல்லது மாதாந்ததம் ஏதேனும் கட்டணம் அறவிடப்படுகின்றது என்பதனால் இந்தப் பாடசாலைகள்

பலவற்றிற்கு அரச பாடசாலைகளை விட நவீன வசதிகளை பெற்றுக் கொடுக்க முடியும் என்பது பொதுவான நம்பிக்கையாகும்.

(ஊ) அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புரிமைகள் அரசின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

(i) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நன்கொடை பெற்றுக் கொள்ளும் தனியார் பாடசாலைகளுக்கு மட்டும் ஆசிரியர் சம்பளத்திற்கான உதவி பெற்றுக் கொடுக்கப்படும். இந்தப் பாடசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு கடந்த 4 வருடங்களில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பின்வருமாறு ஆகும்.

**(ரூபா.மில்லியன்)**

| **செலவு விடயம்** | **ஆண்டு** | | | |
|---|---|---|---|---|
| | **2017** | **2018** | **2019** | **2020** |
| சம்பளம் மற்றும் வேதனம் | 930.29 | 1,012.33 | 1,179.99 | 1,594.49 |
| வேறு கொடுப்பனவு | 664.27 | 506.67 | 449.04 | 458.68 |
| அரச ஊழியர் ஆதன கடன்வட்டி | - | 0.03 | 0.34 | 0.70 |
| **மொத்தம்** | 1,594.56 | 1,519.03 | 1,629.37 | 2,053.87 |

**(ஆதாரம்: கல்வி அமைச்சு)**

(ii) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட உதவி பெறும் மற்றும் உதவி பெறாத இரு வகையான பாடசாலைகளும் கீழ்வரும் பிரதிபலன்கள் பெற்றுக் கொடுக்கப்படும். (ஒருசில பிரதிபலன்கள் பாடசாலை முகாமைத்துவத்தின் விருப்பு மற்றும் கோரிக்கையின் பேரில் பெற்றுக் கொடுக்கப்படும்)

- மாணவர்களுக்கான சீருடை மற்றும் பாடப் புத்தகங்கள் பெற்றுக் கொடுத்தல்.
- தேசிய பாடத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கான வசதிகள் வழிகாட்டல்கள் என்பவற்றை பெற்றுக் கொடுத்தல்.
- ஓய்வுதியப் பங்களிப்பு முறைமையின் பிரதிபலன்கள் (அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசியர்களுக்கு மட்டும்)

- தொழில் ரீதியான ஆசிரிய பயிற்சிகளை பெற்றுக்கொடுத்தல். (அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு மட்டும்)
- சேவைத்தல ஆசிரிய பயிற்சி பெற்றுக்கொடுத்தல். (அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு மட்டும்)
- பாடசாலைகளை கண்காணித்தல் மற்றும் அறிவுரைகள் வழங்குதல்.
- ஒருசில உத்தியோகபூர்வ ஆவணங்கள் பெற்றுக்கொடுத்தல். (பெயர் பட்டியல், மாணவர்களை அனுமதிக்கும் ஏடு, மாணவர் செயற்பாட்டு குறிகாட்டி போன்றவை……)
- சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்.
- மாணவர்களுக்கு அரச பாடசாலை பரீட்சைகளுக்கு பாடசாலை விண்ணப்பதாரிகளாக தோற்றும் சந்தர்ப்பம்.
- மாணவர்களுக்கு சுரக்ஷா காப்புறுதி சிறப்புரிமை.
- அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு அக்ரஹார காப்புறுதி முறையின் சிறப்புரிமை, குறைந்த வட்டியில் கடன் சிறப்புரிமை.

(எ) இந்தப் பாடசாலை ஒழுங்குறுத்தலுக்கு கல்வி அமைச்சில் தனியார் பாடசாலை பிரிவு எனும் பெயரில் தனியான அலகொன்று தாபிக்கப்பட்டுள்ளது. ஒரு பணிப்பாளர் மற்றும் இரு உதவி பணிபாபளர்களுடன் அந்த அலகு மூலம் இந்த பாடசாலைகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.2.2 அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் ஒழுங்குறுத்தலுக்கு கல்வி அமைச்சிடம் உள்ள சட்டரீதியான ஏற்பாடுகள்

அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளை ஆரம்பித்தல், கல்வி நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தல், நிதி வழங்குதல், ஆசிரியர்களை நியமித்தல் மற்றும் அகற்றுதல், கல்வி மற்றும் நிறுவன நடவடிக்கைகள் என்பவற்றிற்கு கல்வி அமைச்சின் வசம் உள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகள் பின்வருமாறு ஆகும்.

(அ) 1960 இன் 5 ஆம் இலக்க துணைப் பாடசாலை மற்றும் பயிற்சிக் கல்லூரி (விசேட ஏற்பாடுகள்) 6(a) பிரிவில், அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் அரச கல்விக் கொள்கைக்கு ஏற்ப மாணவர்களுக்கு கற்பித்தல் மற்றும் பயிற்றுவித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது கறிப்பிடப்பட்டுள்ளதுடன், 6(h) பிரிவின் பிரகாரம் ஆசிரியர் ஒருவரை அகற்றுவதற்கு உரிய ஒழுங்குவிதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) 1961 இன் 8 ஆம் இலக்க துணைப் பாடசாலை மற்றும் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவிற்கு அமைய புதிதாகத் தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) 1981 இன் 65 ஆம் இலக்க துணை பாடசாலை மற்றும் பயிற்சிக் கல்லூரி (விசேட ஏற்பாடுகள்) (திருத்தப்பட்டது) சட்டத்தின் மூலம் மூல சட்டத்திற்கு திருத்தம் ஒன்று சேர்க்கப்பட்டு உதவி பெற்றுக் கொள்ளாத பாடசாலைகளுக்கு நிதி உதவி வழங்கும் ஒழுங்கு விதி குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஈ) கல்வி கட்டளை சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள துணை விதிகளில் 16 (i), (iii), (iv), 31A ஆசிரியர்களை நியமித்தல், அகற்றுதல் தொடர்பான ஏற்பாடுகள்.

(உ) இலக்கம் அமப/18/0850/742/2017 மற்றும் 2018 மே 23 ஆம் திகதியிலான அமைச்சரவை தீர்மானத்தில் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி மற்றும் நிறுவன நடவடிக்கைகள் சுற்றறிக்கை.

(ஊ) இலக்கம் 2005/31 கொண்டதும் 2005 அக்டோபர் 31 ஆம் திகதி இடப்பட்ட ‘‘அரசு அங்கீகரித்த நன்கொடை பெறும் / பெற்றுக் கொள்ளாத தனியார் பாடசாலைகளில் கல்வி மற்றும் நிறுவன நடவடிக்கைகள்’’ சுற்றறிக்கை.

(எ) இலக்கம் ஈடீ/01/10/01/01/16 கொண்டதும் 2008 நவம்பர் 13 ஆம் திகதி இடப்பட்ட ‘‘அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் நிறுவனம் மற்றும் கல்வி நடவடிக்கைகளை செயற்படுத்துதல்’’ எனும் அறிவுறுத்தல் கடிதம்.

(ஏ) 1983 டிசம்பர் 9 ஆம் திகதியிலான கல்வி கட்டளை சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள வர்தமானி கட்டளை மூலம் அனைத்து துணை பாடசாலைகள் மற்றும் உதவி பெறாத பாடசாலைகள் அவற்றின் ஆசிரியர்களின் தகைமைகள், நியமனம் மற்றும் பயிற்சி காலப்பகுதி தொடர்பில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஐ) 2017 அக்டோபர் 24 ஆம் திகதியிலான இலக்கம் 40/2017 கொண்ட சுற்றறிக்கை

(ஒ) அவ்வப்போது வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல் கடிதங்கள்

இதற்கமைய மேற்கூறிய சட்டரீதியான ஏற்பாடுகளின் கீழ் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் விலக்குதல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் அறிக்கையின் எதிர்வரும் பந்திகளில் கலந்துரையாடப்படும்.

**3.2.3 அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் ஒழுங்குறுத்தல், கண்காணிப்பு மற்றும் நிர்வாகம்**

**3.2.3.1 வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிராமை**

இலக்கம் அமப/18/0850/742/017 கொண்டதும் 2018 மே 23 ஆம் திகதியிலான அமைச்சரவை தீர்மானத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளவாறு அமைச்சரவை பத்திரத்திற்கு அமைய MF5/NP/CP/18/52 மற்றும் 2018 மே 08 ஆம் திகதி இடப்பட்ட நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சரின் அவதானிப்புகளில் ‘‘அனைத்து அரச அங்கீகரிக்கப்பட்ட உதவி பெறும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குறுத்தல் செய்வதற்கு தேவையான வழிகாட்டல்கள் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்படுதல் அத்தியாவசியமாகும்’’ என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் கணக்காய்வு தினம் வரையிலும் கல்வி அமைச்சினால் அந்த வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2005 அக்டோபர் 31 ஆம் திகதியிலான 2005/31 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை மற்றும் 2008 நவம்பர் 13 திகதியிலான அறிவுறுத்தல் கடிதத்தின் மூலம் மட்டும் இந்த பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

**3.2.3.2 அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் நிர்வாகம்**

அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் நிர்வாகமானது முகாமைத்துவதத்தின் மூலம் இடம் பெறுவதுடன் இத்தகைய பல பாடசாலைகள் சமயத்தை மையப்படுத்தியவை என்பதுடன் ஒவ்வொரு சமய பிரிவுகளின் தலையீடும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்புபட்டுள்ளது. அதற்கமைய மாணவர்களை பாடசாலைக்கு அனுமதித்தல், கட்டணம் அறவிடுதல், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல், ஆசிரியர்கள் தொடர்பான நடவடிக்கைகள் போன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்தப் பாடசாலை முகாமைத்துவத்தின் மற்றும் குறித்த சமயப் பிரிவின் தலையீடும் இடம் பெற்றிருக்கின்றது என்பதும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் கல்வி அமைச்சின் போதிய தலையீடு இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

**3.2.3.3 கல்வி அமைச்சின் ஒழுங்குறுத்தல் மற்றும் கண்காணிப்பு**

விபரங்கள் பின்வருமாறு

(அ) அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் கண்காணிப்பு தொடர்பில் விசாரணை மேற்கொள்கையில் ஆசிரியர்களின் தனிநபர் கோவைக்கு குறித்த நிறுவனத்தின் சிக்கல்கள் தொடர்ச்சியாக காணப்படும்போது ஒரு சில சிறப்பு சிக்கல்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மட்டும் தனியார் பாடசாலை பிரிவினால் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் கண்காணிப்பு

செயற்படுகின்றன என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய அந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற கண்காணிப்பு பாடசாலை முகாமைத்துவத்திற்கு உரிய காரணிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டு இருந்தது. அதற்கமைய அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள், கல்வியின் தர அபிவிருத்தி நடவடிக்கைகள், ஆசிரியர் பதவி அணி தொடர்பான ஒரு சில நடவடிக்கைகள் போன்ற பிரிவுகள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் மூழ்கடிக்கப்பட்டிருந்தன.

(ஆ) கல்வி அமைச்சினால் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 2005 அக்டோபர் 31 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2005/31 கொண்ட சுற்றறிக்கையில் இலக்கம் 4(அ) (iii) ஆம் பந்தியின் பிரகாரம் பாடசாலை நடவடிக்கைகளை பரீட்சிப்பு செய்வதற்கு அல்லது தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கு அல்லது மேற்பார்வை செய்வதற்கு அல்லது வருகை தரும் மாகாண கல்வி உத்தியோகத்தரின் மற்றும் இணைந்த கல்வி அமைச்சு அதிகாரிகளின் அடையாளத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு தேவையான ஆவணங்களை பரீட்சித்தல் / கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்து அறிக்கை பெற்றுக் கொள்ளுதல் / குறிப்புகள் இடுதல் போன்றவற்றிற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அந்த சுற்றறிக்கைகள் குறிப்பிடப்பட்டள்ள காரணிகளை பின்பற்றாத பாடசாலைகள் காணப்படுகின்றன என்பதும், அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளை கண்காணிப்பதற்கு செல்கையில் அதற்குத் தேவையான ஒத்துழைப்பு அந்தப் பாடசாலைகளில் கிடைக்கவில்லை என்பதும் தனியார் பாடசாலை பிரிவு மூலம் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உதராணமாக கொழும்பில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஒன்றை 2015 ஜூலை மாதம் 21 ஆம் திகதி கண்காணிப்பிற்கு உட்படுத்துகையில் பாடசாலையின் பௌதீக வளங்களை அவதானிக்க வேண்டும் என கூறியிருந்த சந்தர்ப்பத்தில் அதற்குத் தேவையான ஒத்துழைப்பு அந்தப் பாடசாலையில் இருந்து கிடைத்திருக்கவில்லை. அதற்கமைய அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஒழுங்குறுத்தலில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் போதுமான அளவில் இல்லை என்பது இதன் மூலம் அறியப்படுகின்றது.

அதற்கமைய பாடசாலை கண்காணிப்பு தொடர்பில் கல்வி அமைச்சில் தற்போது காணப்படும் சட்டரீதியான ஏற்பாடுகள் போதுமானதாக இல்லையெனில் அந்த நிலைமையை தவிர்க்கும் நோக்கில் தேவையான

சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகளை அமைச்சு செய்திருக்கவில்லை.

(இ) கல்வி அமைச்சின் முகாமைத்துவம் மற்றும் தரநிலை பிரிவு மூலம் மெற்றும் அதன் நடவடிக்கைகளினால் அரசின் அனைத்து பாடசாலைகளும் கண்காணிப்பு செய்யப்படும். எனினும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் கண்காணிப்பு தொடர்பிலான விசாரணையின் போது கணக்காய்வு திகதி வரையிலும் அவ்வாறான விரிவான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை என்பதும், அந்தப் பாடசாலைகளின் கண்காணிப்பு அவர்களது விடய பரப்பிற்கு உரித்துடையது அல்ல என்பதும் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய கல்வி தரத்தின் அபிவிருத்தி சார்பில் முகாமைத்துவம் மற்றும் தரநிலை பிரிவு மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தர நிலைகளில் மேற்கொள்ளப்படம் ஒழுங்கான கண்காணிப்பு செயல்முறைகள் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு மேற்கொள்ளப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**கல்வியின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கான புதிய மதிப்பீட்டு துறைகள்**

(i) மாணவர் சாதனை
(ii) கற்றல், கற்பித்தல் மற்றும் மதிப்பிடல்
(iii) விடயத்துடன் இணைந்த நடவடிக்கைகள்
(iv) மாணவர் நலனோம்பல்
(v) தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம்
(vi) பௌதீக வளங்கள் முகாமைத்துவம்
(vii) பாடசாலை மற்றும் சமூகம்

மேலே குறிப்பிடப்பட்ட காரணத்தால், அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் 132,800 இற்கு கிட்டிய மாணவர் தொகையின் கல்வியின் தரம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூலப்பிரமாணத்திற்கு அமைய கண்காணிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்பதும் இந்த பாடசாலைகளுக்கு அரசாங்கத்தினால் வருடாந்தம் செலவிடப்பட்ட தொகை மற்றும் பெற்றோர்களினால் செலவிடப்பட்ட கல்வி செலவுடன் ஒப்பிடுகையில் உரிய பிரதிபலன் பிள்ளைகளினால் கைப்பற்றப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

**3.2.3.4 மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாக பாடசாலைகளை கண்காணித்தல்**

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாக அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் கண்காணிப்பு தொடர்பான கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட தகவல் விசாரணைகளில் அது தொடர்பில் பதில் வழங்கியுள்ள 06 மாகாணங்களில் சப்பிரகமுவ மாகாணம் தவிர ஏனைய 05 மாகாணங்கள் ஆகும். அந்த மாகாணங்களுக்கு உரிய அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளினது கண்காணிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதில் கிழக்கு மாகாணத்திற்கு உரிய அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் எதுவும் இல்லை என்பது கல்வி அமைச்சின் தனியார் பாடசாலை பிரிவினால் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மத்திய மாகாணம் இது தொடர்பில் பதில் எதுவும் வழங்கியிருக்கவில்லை.

**3.2.3.5 வலயக் கல்வி அலுவலகத்தின் ஊடாக பாடசாலைகளைக் கண்காணித்தல்**

(அ) பிரதேச மட்டத்தில் பாடசாலை கண்காணிப்பு மேற்கொள்கையில் வலயக் கல்வி அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பில் கிட்டிய கண்காணிப்பு மேற்கொள்ளுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்த போதிலும் மாதிரி பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட கொழும்பு வலய அலுவலகத்திற்கு உரிய 19 பாடசாலைகளில் எந்த ஒரு பாடசாலையும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கண்காணிப்பு செய்யப்பட்டு இருக்காததுடன் 2020 ஆம் ஆண்டுகளில் ஒரு பாடசாலை மட்டும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டு இருந்தது.

(ஆ) பாடசாலை கண்காணிப்பு தொடர்பில், தெரிவு செய்யப்பட்ட 8 வலய அலுவலகங்களில் தகவல்கள் வினவப்பட்டிருந்தபோதிலும் கொழும்பு வலயம் தவிர ஜயவர்தனபுர, பிலியந்தலை, கம்பஹா, களனிய, நீர்கொழும்பு, களுத்துறை, கண்டி போன்ற ஏனைய எந்த ஒரு வலய அலுவலகமும் கணக்காய்விற்கு பதில் பெற்றுக் கொடுத்திருக்கவில்லை.

**3.2.4 அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் தொடர்பான தரவுகள் மற்றும் அறிக்கைகளை பேணி செல்லுதல்**

**3.2.4.1 பாடசாலைகள் தொடர்பான அடிப்படை தகவல்கள்**

அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் தொடர்பில் நடவடிக்கைகளை பேணி செல்வதற்கு கல்வி அமைச்சில் தனியார் பாடசாலை பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வில் அந்த பிரிவிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய 11 பாடசாலைகளில் ஆசிரியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்களும் ஒரு பாடசாலையின் மாணவர் எண்ணிக்கை தொடர்பான

தரவுகளும் அடங்கியிருக்கவில்லை. அதற்கமைய பாடசாலை தொடர்பான தரவுகளை பேணிச் செல்லுவதில் குறைபாடுகள் உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. நாட்டின் மொத்த கல்வி நிலைமை தொடர்பான புள்ளிவிபர தரவுகளின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் தொடர்பான சரியான தீர்மானம் எடுப்பதற்கு இதற்கமைய முடியாதுள்ளது.

**3.2.4.2 அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் கட்டணம் அறவிடப்படுதல்**

(அ) அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் பலவற்றில் வருடாந்தம் மாணவர்களை அனுமதிக்கும் காலங்களில் விண்ணப்ப பத்திர கட்டணமாக அதிக தொகையினை அறவிட்டு பாரிய அளவில் விண்ணப்பப் பத்திரங்களை விற்பனை செய்வதுடன், அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட மாணவர் தொகையினை அந்தந்த பாடசாலைகளுக்கு தற்றுணிவின் மூலப்பிரமாணத்திற்கு அமைய அனுமதி மேற்கொள்கையில் அதிகூடிய அனுமதிக் கட்டணம், நன்கொடை, பாடசாலை கட்டணம் போன்ற பல்வேறு பெறுமதிகளில் அறவிடப்படுகின்றது. அதற்கமைய அந்த அறவிடுதல் தொடர்பில் எதுவிதமான மூலப்பிரமாணம் மற்றும் ஒழுங்குறுத்தல் இடம்பெறவில்லை என்பதுடன் நியாயமற்ற முறையில் பணம் அறவிடப்படுவதற்கான வாய்ப்புகள் கிடைத்துள்ளது.

(ஆ) இந்தப் பாடசாலைகளில் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளம் போன்று வழங்கப்படும் சேவைகளுக்கு அமைய பாடசாலைகள் தரப்படத்தப்பட்டு அதற்கமைய அறவிடப்பட வேண்டிய ஆகக்கூடிய மற்றும் ஆகக்குறைந்த கட்டண வீச்சுகள் தொடர்பில் எல்லைப்படுத்தல் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒரு சில சந்தர்ப்பங்களில் அறவிடப்படும் இந்த கட்டண தொகையுடன் ஒப்பிடுகையில் தரமான கல்வி பிள்ளைகளுக்கு கிடைக்கின்றதா என்பது சிக்கலானதாக உள்ளது எனினும் அது தொடர்பில் தொடர் நடவடிக்கை இடம்பெறாததுடன் வெறும் வியாபார நோக்கத்துடன் இந்த நிறுவனங்களை நடாத்திச் செல்வதற்கு முடிந்துள்ளது.

(இ) 2005 ஒக்டோபர் 31 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2005/31 கொண்ட சுற்றறிக்கையிலும் கட்டணம் அறவிடப்படுதல் தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இருக்காததுடன் அதற்கு தேவையான சட்ட விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் கட்டணம் அறவிடப்படம் அடிப்படை மற்றும் நியாயத்தினை பாதுகாப்பதற்கு எதுவிதமான ஒழுங்குறுத்தலும் மேற்கொள்ளுவதற்கு குறித்த சுற்றறிக்கைளின் மூலம் வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2005 ஒக்டோபர் 31 ஆம் திகதி இலக்கம் 2005/31 கொண்ட சுற்றறிக்கையின் (05) ஆம் பந்திக்கு அமைய அனைத்து அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் சகல வழிகளிலும் பெறுகை மற்றும் கொடுப்பனவு அடங்கலான வருமானம், செலவு தொடர்பான அறிக்கையொன்று அனைத்து வருடங்களுக்கும் தனியார் பாடசாலை கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் எந்த ஒரு பாடசாலையும் அந்த அறிக்கையை அனுப்பி இருக்காததுடன் அந்த அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று இது தொடர்பில் கொழும்பு கல்வி வலயத்தில் செய்யப்பட்ட விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டதாவது அந்த வலயத்திற்குரிய 19 பாடசாலைகளில் எந்த ஒரு பாடசாலையும் வலய அலுவலகத்திற்கு குறித்த வருமான அறிக்கையை சமர்ப்பித்து இருக்கவில்லை என்பதாகும். அதேபோன்று வருமான அறிக்கை அனுப்பாத பாடசாலைகள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறிப்பிப்படாததால் அந்த தேவைப்பாட்டிலிருந்து வெளிவருவதற்கு அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு முடியுமானதாக இருந்துள்ளது.

### 3.2.4.3 வெளிநாட்டுப் பாட விதானத்தை கற்பித்தல்

1960 இன் 5 ஆம் இலக்க துணைப் பாடசாலை மற்றும் பயிற்சிக் கல்லூரி (விசேட ஒழுங்கு விதி) சட்டத்தில் 6 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் அரசின் பொதுக் கல்விக் கொள்கைக்கமைய அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளும் கல்வியை பெற்றுக் கொடுத்தல் வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் தனியார் பாடசாலை பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு அறிக்கை ஒன்றுக்கு அமைய வேறுபட்ட வெளிநாட்டு பாடவிதான (Cambridge,Edexcel ஆகிய) கற்பித்தல் இடம்பெறும் ஒரு பாடசாலை அவதானிப்பு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பில் கணக்காய்வினால் செய்யப்பட்ட விசாரணைக்கு அமைய அவ்வாறு வேறுபட்ட வெளிநாட்டு பாடவிதான கற்பித்தல் இடம்பெறும் பாடசாலைகள் தொடர்பில் எந்தவொரு தகவலும் கல்வி அமைச்சின் தனியார் பாடசாலை பிரிவில் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2.5 கிளை பாடசாலைகள் ஆரம்பித்தல்

2005 ஒக்டோபர் 31 ஆம் திகதியிலான இலக்கம் 2005/31 கொண்ட சுற்றறிக்கையின் (உ)(i) இல் அரசு அங்கீகரித்த உதவி பெறும் / பெற்றுக் கொள்ளாத பாடசாலைகளின் கிளை பாடசாலைகளை ஆரம்பித்தல் முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2017 ஒக்டோபர் 24 ஆம் திகதி இலக்கம் 40/2017 கொண்ட சுற்றறிக்கையில் அந்தப் பந்தி நீக்கப்பட்டிருந்தது.

2018 ஆம் ஆண்டு வரையில் அரச அனுமதி பெற்ற 08 தனியார் பாடசாலைகளினால் 09 கிளை பாடசாலைகள் கல்வி அமைச்சின் முறையான அனுமதியின்றி ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்துள்ளது. பின்னர் அந்த 09 கிளை பாடசாலைகளுக்கு அதுவரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆசிரியர் சம்பளத்திற்கான அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கும், எதிர்காலத்தில் அந்த கிளை பாடசாலைகளுக்கு ஆசிரியர் சம்பளம், உரிய ஆசிரியர் சேவை எண்ணிக்கை தொகுதிக்கு அமைய பெற்றுக் கொடுப்பதற்கும் அமைச்சரவையிடம் யோசனை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதில் 2018 மே 23 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் அமப/18/0850/742/017 கொண்ட அமைச்சரவை தீர்மானம் மற்றும் அதனோடு இணைக்கப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு அமைய, எதிர்காலத்தில் ஏதேனும் தனியார் தாயப் பாடசாலையினால் நாட்டின் ஏதேனும் இடத்தில் கிளை பாடசாலை ஒன்றினை ஆரம்பிக்கும்போது ஒரு தாய் பாடசாலைக்காக அதிகபட்சம் 05 கிளை பாடசாலைகள் எனும் ரீதியில் கல்வி அமைச்சினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட மூலப்பிரமாணங்களின் கீழ் முன் அனுமதியினை பெற்றுக் கொடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் 8 தாய்ப் பாடசாலைகளில் 10 கிளை பாடசாலைகள் நடாத்தப்பட்டு வருகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன.

(அ) கல்வி அமைச்சின் அனுமதியின்றி கிளைப் பாடசாலைகள் நடத்தப்பட்டு பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கல்வி அமைச்சின் முறையான அனுமதியின்றி நடாத்தப்பட்டு வந்திருந்த இந்த ஒருசில கிளை பாடசாலைகள் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தே ஆரம்பிக்கப்பட்டு இருந்தது என்பது குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அந்த கிளைப் பாடசாலைகள் உண்மையாகவே ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடர்பான சரியான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. அவற்றுள் 05 கிளை பாடசாலைகள் சட்டபூர்வமாக்கப்பட்ட திகதியான 2019 சனவரி 01 ஆம் திகதி பாடசாலை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட தினமாக அமைச்சினால் கருதப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) அதற்கமைய முன் அனுமதியின்றி ஆரம்பிக்கப்பட்டு இருந்த அந்த 9 பாடசாலைகளும் உதவி பெற்றுக் கொள்ளும் பாடசாலைகளாக உள்ளதுடன் தாய்ப் பாடசாலையில் ஆசிரியர் சேவை பதவியணி எண்ணிக்கைக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கையில் கிளை

பாடசாலைகளின் மாணவர்களும் உள்ளடக்கப்பட்டு ஆசிரியர் பதவியணி கணக்கிடப்பட்டு, 20 வருடங்கள் தொடக்கம் தாய் பாடசாலையின் ஊடாக கிளை பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சம்பள உதவி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய அந்தக் காலத்தில் குறித்த பாடசாலைகள் தொடர்பில் களப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) கிளை பாடசாலைகள் ஆரம்பிப்பதற்காகப் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அமைய, எதிர்காலத்தில் ஏதேனும் தாய் பாடசாலையினால் நாட்டின் ஏதேனும் பிரதேசத்தில் கிளைப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கையில் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட மூலப்பிரமாணங்களின் கீழ் முன் அனுமதியினை வழங்க முடியும் என அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த மூலப்பிரமாணங்களை தயாரித்து கல்வி செயலாளரின் கவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு தினம் வரையிலும் அவ்வாறு தேவையான மூலப்பிரமாணங்களுக்கு முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2.6 இயங்காதிருந்த பாடசாலைகளை மீண்டும் செயற்படுத்துதல்

விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் தொடர்பில் உரித்தாகும் இலக்கம் 2005/31 கொண்டதும் 2005 ஒக்டோபர் 31 ஆம் திகதி உடைய சுற்றறிக்கையின் (04)(இ), (உ) (viii) மற்றும் (ix) இன் பிரகாரம் பாடசாலை ஒன்று புதிய சூழலுக்கு மாற்றப்படும்போது அல்லது இயங்காத நிலையில் இருந்து பின்னர் செயற்படும் நிலைக்கு வரும்போது அல்லது பாடசாலையை நடாத்திச் செல்லும் போது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆயினும் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள மூலப்பிரமாணங்கள் போதுமானதாக இல்லை என்பதனால் தனியார் பாடசாலை பிரிவு மூலம் இயங்காத பாடசாலையை மீண்டும் செயற்படுத்தும் போது நடைமுறையில் ஒரு சில காரணிகளை கவனத்தில் கொள்வதாக கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே போன்று இந்த மூலப்பிரமாணங்களை தயாரித்து கல்வி செயலாளரின் கவனத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த சட்டமூலமாக்கப்பட்ட ஆவணம் மட்டுமே ஆகும்.

(ஆ) அவ்வாறு 1961 ஆம் ஆண்டின் பின்னரும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளாக நடாத்தப்பட்டு வந்த பின்னர் இயங்காது இருந்த பாடசாலைகள் மீண்டும் செயல்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. 1986 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலும் அவ்வாறான 09 பாடசாலைகள் மாதிரிப் பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டன.

### 3.2.7 அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை நடாத்திச் செல்லுதல்

#### 3.2.7.1 மாணவர்களை அனுமதித்தல்

அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் பல சமயத்தை மையமாகக் கொண்டவை என்பதுடன் ஒரு சில சமயப் பிரிவுகளின் தலையீடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்புபட்டுள்ளது. அந்தப் பாடசாலைகளுகக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது பிரதான மூலப்பிரமாணமாக குறித்த சமயத்தை சேர்ந்த பிள்ளையாக இருத்தல் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் ஏனைய மூலப்பிரமாணங்கள் பாடசாலை முகாமைத்துவத்தின் தற்றுணிவிற்கு அமைய மாறுபடுவதுடன் எதுவித வெளிப்படைத்தன்மையும் இன்றி இடம்பெறுகின்றது. இது தொடர்பில் கல்வி அமைச்சின் எதுவித தலையீடும் இடம்பெறவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

#### 3.2.7.2 நேரசூசிக்கான அனுமதியினை பெற்றுக் கொள்ளுதல்

கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைகள் பிரிவின் மூலம் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் ஒழுங்குறுத்தல் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 2005 ஒக்தோபர் 31 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 2005/31 கொண்ட சுற்றறிக்கையின் இலக்கம் 4(அ) கல்வி நடவடிக்கைகள் (i) கொண்ட பந்தியின் பிரகாரம் அனைத்து பாடசாலைகளினதும் கற்றல், கற்பித்தல் முறைமைகளை ஒழுங்காக நிறைவேற்றுவதற்கு நேரசூசி ஒன்று பேணி செல்லப்பட வேண்டியதுடன், ஒவ்வொரு வருடத்திற்குமான அந்த நேரசூசி அதற்கு முந்திய வருட டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி பணிப்பாளரின் / தனியார் பாடசாலை கல்விப் பணிப்பாளரின் அல்லது அவருக்கு பதிலாக கடமை புரியும் உத்தியோகத்தரிடம் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய அரச அங்கீகாரம் பெற்ற 19 தனியார் பாடசாலைகளில் நேரசூசிக்கான அனுமதியினை பெற்றுக்

கொண்டிருந்தது 2019 ஆம் ஆண்டுக்காக ஒரு பாடசாலையும் மற்றும் 2020 ஆம் ஆண்டுக்காக 06 பாடசாலைகளும் மட்டுமே ஆகும்.

(ஆ) கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள் குழு ஒன்று 2015 ஜுலை 21 ஆம் திகதி கொழும்பில் அமைந்துள்ள அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை ஒன்றில் மேற்கொண்ட கண்காணிப்பின் போது அவதானிக்கப்பட்டுள்ள வகையில் 2015 ஆம் ஆண்டில் நேரசூசி காட்டப்பட்டிருக்காததுடன் பேராயர் இல்லத்தில் இருந்து மட்டும் அதற்கான அனுமதி பெறப்பட்டு இருந்தது என்பது குறித்த கண்காணிப்பு குழுவிற்கு தெரிவிக்கப்பட்டிருந்தமை குறித்த கண்காணிப்பு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய நேரசூசி மூலம் பேணப்பட வேண்டிய காலம் மற்றும் பாடங்களின் உள்ளடக்கம் தொடர்பில் கல்வி அமைச்சுக்கு ஒழுங்குறுத்தல் மேற்கொள்வதற்கு அந்த நிலைமை தடையாக ஒள்ளது என்பதும் கட்டாய கல்வி பெறும் மாணவர்களின் தரமான கல்விக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒவ்வொரு சமய பிரிவினரும் தலையிடக்கூடியதாக உள்ளதால் கட்டாய கல்வி தொடர்பில் பிள்ளைகளுக்கு உள்ள உரிமை அதன் மூலம் மறுக்கப்படுகின்றது என்பதால் அந்த தலையீடு சிக்கலானதாக உள்ள போதிலும் அது தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 மே 19 அம் திகதி கல்வி அமைச்சு உத்தியோகத்தர்கள் 05 பேர் நுகேகொடயில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு செயற்பாட்டுக்குரிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது பாடசாலை நேரசூசிக்காக வலய கல்வி அலுவலகத்தில் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்பதாகும்.

### 3.2.7.3 அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் மாணவர்கள் உயர் தர பாட விதானத்தை தெரிவு செய்தல்

தற்போது நாடு முழுவதிலும் இயங்கி வரும் 80 அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் மற்றும் அவற்றின் 10 கிளைப் பாடசாலைகளில் உயர்தர பாடவிதானம் கற்பித்தல் மேற்கொள்ளப்படும் முறைக்கு அமைய விஞ்ஞானம் / கணிதம் பாட விதானங்களை கற்பிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை 53 என்பதும், வர்த்தகம் மற்றும் கலை பாட விதானங்களை கற்பிக்கும் பாடசாலைகளில் எண்ணிக்கை முறையே 66 உம் மற்றும் 68 உம், தொழில்நுட்பம் கற்பிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை 9 என்பதும் அவதானிக்கப்பட்டதுடன் அந்த பாட விதானங்கள் 4 இனை கற்பிக்கும் பாடசாலைகள் 7 மட்டுமே என்பதும் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| **<u>பாட விதானம்</u>** | **<u>கற்பிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை</u>** |
|---|---|
| விஞ்ஞானம் / கணிதம் | 53 |
| வர்த்தகம் | 66 |
| கலை | 68 |
| தொழில்நுட்பவியல் | 09 |

தற்கால தொழில் சந்தைக்கு பொருத்தமான தொழிலாளர் படையினை உருவாக்கும் குறிக்கோளுடன் கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் போன்ற பாட விதானங்கள் செயற்படுத்தப்படுவது அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் 10 சதவீதத்திலும் குறைந்த அளவில் ஆகும்.

### 3.2.7.4 பரீட்சை நடவடிக்கைகள்

அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) மற்றும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரம்) பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

#### (அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சை பெறுபேறுகள்

அரச அனுமதி பெற்ற 80 தனியார் பாடசாலைகளில் மற்றும் அவற்றின் 10 கிளைப் பாடசாலைகளில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய சித்தி அடையும் வீதம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் புதிய பாடத் திட்டத்தின் கீழ் பொதுவாக 67 சதவீதமாக உள்ளதுடன் 2019 ஆம் ஆண்டு பழைய பாடத் திட்டத்தின் கீழ் 72 சதவீதமாக இருந்தது.

| ஆண்டு | பாடசாலை எண்ணிக்கை | தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை | சித்தியடைந்த சதவீதம் (நூற்றுக்கு) | சித்தியடைந்த சதவீதம் ஐம்பதுக்கும் குறைவான | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பாடசாலை எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை |
| 2018 | 61 | 8,449 | 5,690 | 67 | 17 | 385 |
| 2019- புதிய பாடத் திட்டம் | 70 | 7,495 | 5,034 | 67 | 20 | 375 |
| 2019- பழைய பாடத் திட்டம் | 55 | 1,624 | 1,183 | 72 | 08 | 32 |

**ஆதாரம்: பரீட்சைகள் திணைக்களம்**

**(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சைப் பெறுபேறுகள்**

அரச அனுமதி பெற்ற 90 தனியார் பாடசாலைகளில் 2018 மற்றும் 2019 ஆம் அண்டுகளில் கல்விப் பொதுத் தராதரப் பபத்திர (சாதாரண தரம்) பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய சித்தி அடையும் வீதம் 2018 இல் பொதுவாக 75 சதவீதமாக காணப்பட்டதுடன் 2019 பொதுவாக 70 சதவீதமாக காணப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| ஆண்டு | பாடசாலை எண்ணிக்கை | தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை | சித்தியடைந்த சதவீதம் (நூற்றுக்கு) | சித்தியடைந்த வீதம் ஐம்பதுக்கும் குறைவான பாடசாலை எண்ணிக்கை | சித்தியடைந்த வீதம் ஐம்பதுக்கும் குறைவான மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 2018 | 75 | 11,027 | 8,194 | 74.71 | 15 | 192 |
| 2019 | 83 | 11,975 | 8,387 | 70.04 | 14 | 318 |

**ஆதாரம்: பரீட்சைகள் திணைக்களம்**

(இ) இதற்கமைய பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்களில் சித்தியடைந்த வீதம் 50 சதவீதத்திற்கும் குறைவான மாணவர்கள் மற்றும் குறித்த பாடசாலைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டிய போதிலும் அவ்வாறான நிலைமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

### 3.2.7.5 கல்வி நடவடிக்கை தொடர்பில் பெற்றோர்களின் முறைப்பாடு

இவ்வாறு அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களினால் முகம் கொடுக்கப்படும் பல்வேறு சிக்கல்கள் தொடர்பில் தொடர்ந்தும் கல்வி அமைச்சிற்கு மக்கள் பிரதிநிதிகள் முன்வைத்து இருந்ததுடன் மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பில் 07 பாடசாலைகளுக்கு உரியதான சுற்றறிக்கைக்கு அமைய சந்தர்ப்பங்கள் இருந்தும் உயர்தர வகுப்புகளுக்கு மாணவர்களை பாடசாலைக்கு அனுமதித்து கொள்ளாமை, பாடங்களை கற்பித்தல் உரிய முறையில் இடம்பெறாமை, பரீட்சை முறைகேடுகள், சிறிய வகுப்புகளில் பிள்ளைகளுக்கு ஏற்படும் துன்பங்கள், பிள்ளைகளின் கல்வி உதவித் தொகையினை இரத்துச் செய்தல் போன்ற காரணிகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிருந்தவை அவ்வாறான பொதுமக்கள் பிரதிநிதித்துவங்கள் ஆகும். இந்த சந்தர்ப்பத்தில் கல்வி அமைச்சினால் அறிவுறுத்தல் கடிதம் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. அதே போன்று அவ்வாறான சந்தர்ப்பங்களில் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளாக அந்தப் பாடசாலைகள் அரச சுற்றறிக்கையைப் பின்பற்றாது இருந்துள்ளது என்பதும் அவதானிக்கப்பட்டது.

### 3.2.8 அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் சுகாதார வசதிகளை நடாத்திச் செல்லுதல்

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் சுகாதார வேலைத் திட்டங்கள் ஒழுங்குறுத்தல் தொடர்பான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட சுகாதார அமைச்சின் MH/FCC/02/AR-School Health/2020 இலக்கம் கொண்டதும் 2021 ஓகஸ்ட் 20 ஆம் திகதியிலான கடிதத்தின் பிரகாரம் தனியார் பாடசாலைகளில் பிள்ளைகளின் சுகாதார மேம்பாடு தொடர்பில் அந்தப் பாடசாலைகள் காட்டியுள்ள கவனம் குறைந்துள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டமையால் உரிய சுகாதார சேவைகளை வழங்குவதற்கு அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரிகளினால் அல்லது பாடசாலை சுகாதார அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பம் குறித்த தனியார் பாடசாலையினால் எழுத்து மூலம் நிராகரிக்கப்பட்டு இருந்தது என்பதும் இந்தப் பாடசாலையும் தனியார் வியாபாரமாக பதிவு செய்யப்பட்டிருந்ததால் அந்தப் பாடசாலைகளுக்கு சேவைகளை வழங்குவதற்கு கட்டாயப்படுத்தும் அதிகாரம் அல்லது சட்ட ரீதியான ஏற்பாடுகள் சுகாதார அமைச்சிடம் இல்லை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய கணக்காய்வு திகதி வரையிலும் கல்வி அமைச்சினால் அனைத்து அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு சுகாதார சேவைகளை வழங்குவதற்கு, அவதானிப்பு மற்றும் ஒழுங்குறுத்தல் செய்வதற்கு ஏற்ற வகையிலான அதிகாரத்தினை சுகாதார அமைச்சிற்கு பெற்றுக் கொடுத்திருக்காத காரணத்தினால் அந்தப் பாடசாலைகளில் மாணவர்களின் சுகாதார நிலைமை ஆபத்திற்கு உட்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

### 3.2.9 ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்தல்

அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்தலை மேற்கொள்ளுதல் குறித்த பாடசாலை முகாமைத்துவத்தினால் ஆகும். இவ்வாறு பாடசாலை முகாமைத்துவத்தினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு அரச அனுமதி பெற்ற நியமனக் கடிதம் பெற்றுக் கொடுப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானிக்குமாயின் நியமன பிரேரணை பத்திரம் வலய / மாகாண கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் கல்வி அமைச்சிடம் சமர்ப்பித்து அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளும். அதற்கமைய அந்த ஆசிரியர் ஓய்வூதிய பங்களிப்பு முறைக்கு உரித்து உடையவர் ஆவார்.

**3.2.9.1 ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்குரிய தகைமைகள்**

**(அ) 1983 துணை பாடசாலைகள் மற்றும் உதவி பெறும் பாடசாலை கட்டளை**

இதற்கமைய அனைத்து துணைப் பாடசாலைகள் மற்றும் உதவி பெற்றுக் கொள்ளாத பாடசாலைகள் என்பன அவற்றின் ஆசிரியர்களின் தகமைகள், நியமனம் மற்றும் பயிற்சி காலப்பகுதி தொடர்பில் கீழே காட்டப்பட்டுள்ள ஒழுங்குகளை பின்பற்ற வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டின் பின்னர் நியமிக்கப்பட்ட அனைத்து ஆசிரியர்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனும் ஒன்றையேனும் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) பல்கலைக்கழகப் பட்டம்

(ii) ஆசிரிய பயிற்சி சான்றிதழ்

(iii) சங்கீதம், நடனம், சித்திரம், விவசாயம், மனையியல், தொழில்நுட்பம் போன்ற பாடங்கள் மற்றும் காலத்துக்கு காலம் அறிவிக்கப்பட்ட வேறு ஏதேனும் பாடங்கள் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ்

(iv) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி (இந்த ஆசிரியர்கள் சேவையில் நியமிக்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்குள் பயிற்சி ஆசிரியர் சான்றிதழை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்).

**(ஆ) 2014.10.23 ஆம் திகதியிலான இலக்கம் 1885/38 கொண்ட ஆசிரியர் சேவைப் பிரமாணம்**

கல்வி அமைச்சின் 2015 மே 27 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் ED/01/10/01/01/16/135 கொண்ட கடிதம் மூலம் இலக்கம் 35/2014(1) கொண்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணம் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கும் உரித்தாகும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

| **தரம்** | **கல்வித் தகைமைகள்** |
|---|---|
| 3 வகுப்பு-II தரம் | கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) தகைமை பெற்றவர்கள் |
| 3 வகுப்பு-I(இ) தரம் | டிப்ளோமாதாரிகள் |
| 3 வகுப்பு-I(ஆ) தரம் | பயிற்சிக் கல்லூரி டிப்ளோமாதாரிகள் |
| 3 வகுப்பு-I(அ) தரம் | பட்டதாரிகள் |
| 2 வகுப்பு-II தரம் | இளங்கலை கல்விப் பட்டதாரிகள் |

அதற்கமைய துணைப் பாடசாலைகள் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பான கணக்காய்வு பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்ட வகையில் 1983 துணைப் பாடசாலை மற்றும் உதவி பெறும் பாடசாலை சட்டங்களில் மற்றும் ஆசிரியர் சேவைப் பிரமாணத்தில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) சித்தி அடைந்தவர்களையும் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்ப செய்துகொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அரச பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்கையில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது எனினும் 2019 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்காக கல்வி அமைச்சின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் நியமன கடிதங்களை பரீட்சிக்கும் போது 61 பாடசாலைகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 1025 ஆசிரியர்களுள் 461 ஆசிரியர்கள் மட்டும் பட்டதாரிகளாக உள்ளதுடன் 564 பேர்கள் பட்டதாரிகள் அல்ல என்பதும் ஆகும்.

(இ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களும் ஆசிரியராக சேவையில் நியமிக்கப்பட்டு பத்து வருடங்களுக்குள் பயிற்சி ஆசிரியர் சான்றிதழை பெற்றுக் கொள்ள வேண்டும் என 1983 ஆம் ஆண்டு துணைப் பாடசாலை மற்றும் உதவி பெறும் பாடசாலைக் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய அந்த தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது கணக்காய்வில் வெளிப்படவில்லை.

### 3.2.9.2 புதிய ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்தல்

(அ) புதிய ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் பிரேரணைப் பத்திரம் பரிந்துரை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என செய்யப்பட்ட விசாரணையின் போது, கொழும்பு கல்வி வலயத்திற்கு உரிய ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் பிரேரணைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டுக் கொள்ளவில்லை எனவும் பாடசாலையினால் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர் பிரேரணைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது எனவும் தெரவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அதே போன்று குறித்த பிரேரணை பத்திரத்திற்கான பரிந்துரை பெற்றுக் கொடுக்கும் போது ஆசிரியரின் தகைமைகளை உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் தனியார் பாடசாலைப் பணிப்பாளரினால் பிரேரணைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பப்பட்ட பின்னர் நியமனக் கடிதம் வழங்கப்படுவதோடு பதிவு செய்தல் இலக்கம் வழங்குவதற்கு முன்னர்

ஆசிரியரின் தகைமைகள் உறுதிப்படுத்தப்படும் எனவும் கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 3.2.9.3 ஆசிரிய நியமனங்களை அங்கீகரித்தல் தொடர்பான சிக்கல்கள்

**(அ)** அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பான பரீட்சிப்பின் போது பாடசாலையினால் நியமன கடிதமம் பெற்றுக் கொடுக்கப்பட்ட திகதி மற்றும் கல்வி அமைச்சு அந்த நியமனத்தை செல்லுபடியாக்கிய திகதி என்பவற்றுக்கு இடையில் நீண்டகால வித்தியாசம் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. 61 பாடசாலைகளில் அதற்கமைய 2019 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 1025 ஆசிரிய நியமனங்களுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் பாடசாலையினால் நியமனம் பெற்றுக் கொடுத்த திகதி மற்றும் கல்வி அமைச்சு அந்த நியமனத்தை செல்லுபடியாக்கிய திகதி என்பவற்றுக்குமிடையில் 01 வருடத்திற்கும் குறைவான கால வீச்சினை கொண்ட 615 நியமனங்களும், 1-3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 240 நியமனங்களும், 4-6 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 123 நியமனங்களும், 7-9 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 42 நியமனங்களும், 10-12 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 4 நியமனங்களும் மற்றும் 13-15 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 01 நியமனமும் என்பதான கால வீச்சில் காணப்பட்டது. அதற்கமைய ஆசிரியர்களின் நியமனங்களை அங்கீகரித்தல் தொடர்பில் முறையான ஒழுங்குறுத்தல் மேற்கொள்ளப்படாத காரணத்தால் இவ்வாறான தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதும் இந்தக் காரணத்தினால் ஆசிரியர்களின் தொழில் சிக்கல் தொடர்பான சிக்கல் மற்றும் ஓய்வூதியப் பங்களிப்பு செலுத்துதல் தொடர்பான சிக்கல் ஏற்படக் கூடும் என்பதும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பாடசாலை எண்ணிக்கைக | 2019.01.01 தொடக்கம் 2020.12.31 வரை கல்வி அமைச்சின் மூலம்அனுமதி வழங்கப்பட்ட ஆசிரிய நியமன எண்ணிக்கை | பாடசாலயினால் நியமனம் வழங்கப்பட்ட திகதி மற்றும் கல்வி அமைச்சினால் நியமனம் செல்லுபடியாக்கப்பட்ட திகதி என்பவற்றுக்கு அடையில் வேறுபாடு காணப்படும் ஆசிரியர் நியமன எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 ஆண்டுக்கு குறைவு | ஆண்டு 1-3 இடையில் | ஆண்டு 4-6 இடையில் | ஆண்டு 7-9 இடையில் | ஆண்டு 10-12 இடையில் | ஆண்டு 13-15 இடையில் |
| 61 | 1025 | 615 | 240 | 123 | 42 | 4 | 1 |

### (ஆ) நிலுவைச் சம்பளக் கொடுப்பனவு

மேலே கூறப்பட்டவாறு பிந்திய திகதி இடப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான நிலுவைச் சம்பளம் கொடுப்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்தில் அரச அனுமதி பெற்ற 08 தனியார் பாடசாலைகளில் 2011 – 2019 காலப் பகுதிக்கு உரியதாக ஆட்சேரப்பு செய்யப்பட்ட 68 ஆசிரியர்களுக்கு நிலுவை ஆசிரிய சம்பளமாக ரூபா. 29,924,374 செலுத்தப்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

### 3.2.9.4 ஆசிரியர் எண்ணிக்கையினை அங்கீகரித்து கொள்ளுதல்

2005/31 ஆம் இலக்க 2005 ஒக்டோபர் 31 ஆம் திகதி இடப்பட்டதுமான சுற்றறிக்கையின் மூலம் அரசு அங்கீகரித்த உதவி பெறும் / பெற்றுக் கொள்ளாத அனைத்து அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட வேண்டிய முறைகள் காட்டப்பட்டுள்ளன. அதற்கமைய இந்த சுற்றறிக்கைகளில் இலக்கம் 04(ஆ)(iv) இற்கமைய சகல வருடங்களும் குறித்த சுற்றறிக்கைகளுக்கு ஏற்புடையதாகும் வகையில் பாடசாலைக்கு சொந்தமான ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் விசேட பதவிக்குரியோர் எண்ணிக்கை என்பவை தனியார் பாடசாலை கல்விப் பணிப்பாளரிடம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

மாதிரி பரீட்சிப்புக்கு அமைய கொழும்பு வலய அலுவலகத்திற்கு உரிய 19 பாடசாலைகளில் 5 பாடசாலைகள் 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் ஆசிரியர் எண்ணிக்கையை அங்கீகரித்து கொள்வதற்காக பரிந்துரைக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்காததுடன், அதில் ஒரு பாடசாலை 2017 ஆம் ஆண்டு தொடக்கம் அவ்வாறு ஆசிரியர் எண்ணிக்கையினை அங்கீகரித்துக்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பது வெளிப்படத்தபட்ட போதிலும் குறித்த சுற்றறிக்கைக்கு அமைய செயற்படாத பாடசாலைகள் தொடர்பில் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று அவ்வாறான சந்தர்ப்பங்களில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் குறித்த சுற்றறிக்கையில் தெளிவான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

### 3.2.9.5 ஆசிரிய நியமனங்கள் அங்கீகரித்தல், திருத்தம் செய்தல் மற்றும் ஏனைய காரணிகள்

அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்குரிய கோவைகளை பரீட்சிக்கும் போது பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டது.

**(அ) தொடர்ச்சியான சேவை காலத்தினை பேணி செல்வதன் அவசியம்**

மாதிரி பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டதாவது அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவர் மொரட்டுவையில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலையில் (ஆசிரியர் சேவை 3-I) 2005 தொடக்கம் 2009 வரையிலும் 04 வருட சேவை காலத்தின் பின் 2009 ஜனவரி 08 ஆம் திகதி தொடக்கம் 2010 ஜனவரி 07 ஆம் திகதி வரையிலும் வெளிநாடு சென்றிருந்துள்ளார் என்பதும், 2010 ஜனவரி 8 அம் திகதி சேவையில் இருந்து இராஜினாமா செய்துள்ளார் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. மீண்டும் பொரளையில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஒன்றில் (ஆசிரியர் சேவை 3-I) ஒன்றில் 2011 ஜூன் மாதம் 02 நாட்கள் (ஜூன் 28/29) மட்டும் சேவையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 2011 ஜூன் 30 ஆம் திகதி இராஜினாமா செய்துள்ளார். 2014 ஜூலை 15 தொடக்கம் 2015 மார்ச் 15 வரையிலும் மொரட்டுவையில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஒன்றில் (ஆசிரியர் சேவை 3-II) சேவையாற்றி 08 மாதங்களின் பின்னர் 2015 மார்ச் 16 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் களுத்துறையில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஒன்றில் 3-II தர ஆசிரியராக ஆசிரிய நியமனம் அங்கீகரிக்கப்பட்டு இருந்தது. கல்வி அமைச்சினால் 2014 நவம்பர் 03 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்திற்கு அமைய 2014 ஜூலை 15 ஆம் திகதி தொடக்கம் செயற்படுத்தும் வகையில் மீண்டும் மொரட்டுவையில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை 3-II தர ஆசிரியராக ஆசிரிய நியமனம் அங்கீகரிக்கப்பட்டு இருந்ததுடன் இவ்வாறு அவ்வப்போது சேவை துண்டாடப்பட்ட நபருக்கு ஆசிரிய நியமனம் அங்கீகரிக்கப்பட்டு இருந்தமை கணக்காய்விற்கு சிக்கலாக இருந்துள்ளது.

**(ஆ) நியமனத் திகதி மற்றும் நியமனம் அங்கீகரிக்கப்பட்ட திகதி என்பவற்றுக்கு இடையில் வேறுபாடு காணப்படுதல்**

(i) யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஒன்றில் 2011 ஏப்பிரல் 26 ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டிருந்த ஆசிரியை ஒருவரின் கல்வித் தகைமையாக குறிப்பிடப்பட்டிருந்தது உயர் தரத்தில் சித்தி பெற்றிருந்தமை ஆகும்.

அந்த பாடசாலை அதிபரினால் 2019 ஏப்பிரல் 01 ஆம் திகதி கல்வி அமைச்சின் தனியார் பாடசாலை பிரிவுப் பணிப்பாளரிடம் அவரது நியமனத்தை 2019 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் அங்கீகரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. அதற்கமைய அவதானிக்கப்பட்டதாவது குறித்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 7 ½ ஆண்டுகளுக்குப் பின்னர் என்பதாகும். கல்வி அமைச்சரினால் இந்த நியமனம் அங்கீகரிக்கப்பட்டு இருந்தது 2019 ஜூன் 03 ஆம் திகதி தொடக்கம் செல்லுபடியாகும் வகையில் 2019 ஓகஸ்ட் 26 ஆம் திகதியில் ஆகும். அதற்கமைய இந்த ஆசிரியை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 08 வருடங்களுக்குப் பிறகு குறித்த நியமனத்திற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு இருந்தது.

(ii) இந்தப் பாடசாலையில் மற்றுமொரு ஆசிரியர் 1980 செப்டெம்பர் 08 ஆம் திகதி தொடக்கம் செயற்படும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியராக சேவையாற்றி இருந்ததுடன் அந்த ஆசிரியரின் பயிற்சி சான்றிதழ் செல்லபடியாகும் 1990 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் நியமனக் கடிதம் அங்கீகரிக்கப்பட்டு இருந்தது. மேலும் 2005 ஒக்டோபர் 28 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் ED/01/10/01/02/06 கொண்ட கல்வி அமைச்சின் பிரதி பாடசாலை பணிப்பாளரின் கடிதம் மூலம் இந்த நியமனம் 1980 செப்டெம்பர் 08 ஆம் திகதி என குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய அவ்வப்போது இந்த நியமன திகதிகளை மாற்றுதல் சிக்கலுக்குரியதாக உள்ளது.

(iii) கொழும்பில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஒன்றின் ஆசிரியை ஒருவர் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் பலவற்றில் சேவையாற்றி இருந்தார். 2001 ஜனவரி 02 ஆம் திகதி தொடக்கம் 2006 செப்டெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பிலியந்தலையில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற

தனியார் பாடசாலையிலும் 2007 மார்ச் 27 ஆம் திகதி தொடக்கம் 2015 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கொழும்பில் அமைந்துள்ள ஒரு அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலையிலும் 2018 பெப்ரவரி 05 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் அதே பாடசாலையில் சேவையாற்றியிருந்தார். ஆயினும் கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைப் பரிவு பணிப்பாளரின் 2019 மே 30 ஆம் திகதியிலான ED/01/10/01/03/07(x) இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம் 2018 பெப்ரவரி 05 ஆம் திகதி தொடக்கம் முதலில் குறிப்பிடப்பட்ட பாடசாலைக்கு வழங்கப்பட்டிருந்த நியமனம் 2017 ஜூன் 01 ஆம் திகதி தொடக்கம் பிந்திய திகதியிடப்பட்டு நியமனம் வழங்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

**(இ) நியமனத்தை திருத்தி அமைத்தல்**

கல்கிசையில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலையில் சேவையாற்றும் ஆசிரியைக்கு உரியதான நியமனக் கடிதம் வழங்குகையில் அவரது கல்வித் தகைமைகளாக கலை பட்டம் (2008) என குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அதற்கமைய 2009 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் உரித்தாகும் வகையில் 3-I தரத்தில் ஆசிரியையாக் கல்வி அமைச்சினால் நியமனம அங்கீகரிக்கப்பட்டு இருந்தது 2014 ஒக்டோபர் 20 ஆம் திகதியில் இருந்தது ஆகும்.

ஆயினும், பெறுபேற்றினை உறுதிப்படுத்தும் கடிதத்துக்கு அமைய பட்ட சான்றிதழ் 2010 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் செல்லுபடியாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய பட்டம் செல்லுபடியாகும் திகதிக்கு அமைய 3-I தரத்திற்கான நியமனத் திகதி திருத்தப்பட வேண்டும் என்பதால் 2009 ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் 2009 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதி 3-II தரத்திலான ஆசிரிய நியமனமாக கருதி பட்ட சான்றிதழ் செல்லுபடியாகும் திகதியான 2010 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 3-I தரத்தில் நியமனம் செய்வதற்கு பிலியந்தலை வலயக் கல்வி பணிப்பாளரினால் 2017 நவம்பர் 06 ஆம் திகதி கல்வி அமைச்சின் அங்கீகாரத்தினை கோரியிருந்ததுடன், அதற்கமைய கல்வி அமைச்சினால் 2017 நவம்பர் மாதம் திகதி இடப்படாத இலக்கம் ED/03/02/10(v) கொண்ட கடிதம் மூலம் குறித்த வேண்டுகோள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய உரிய தகைமைகள் சரியான முறையில் உறுதிப்படுத்தப்படாது நியமனக் கடிதம் வழங்கப்பட்டு இருந்தது என்பது இதற்கமைய அவதானிக்கப்பட்டது.

**(ஈ) சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறையினை அங்கீகரித்தல் தொடர்பான சிக்கல்கள்**

களுத்துறையில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஆசிரியராக சேவையாற்றிய அருட் தந்தை ஒருவர் பிரச்சார நடவடிக்கைகளுக்காக 2018 ஒகஸ்ட் 23 ஆம் திகதி தொடக்கம் 2020 ஓகஸ்ட் 22 ஆம் திகதி வரையில் வெளிநாடு செல்வதற்கு சம்பளமற்ற விடுமுறைக்கு விண்ணப்பித்து இருந்தார். இந்த விடுமுறையை பெற்றுக் கொள்வதற்கு கல்வி அமைச்சினால் 2019 ஜூலை 30 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த வெளிநாட்டு விடுமுறையை பெற்றுக் கொள்ளுவதற்குரிய விண்ணப்பத்திரம் குறித்த ஆசிரியரினால் 2018 ஓகஸ்ட் 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன், களுத்துறை வலயக் கல்வி அலுவலகத்தினால் அது பரிந்துரை செய்யப்பட்டிருந்தது 2019 ஏப்பிரல் 24 ஆம் திகதி ஆகும். பின்னர் அது கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டு இருந்தது 2019 ஜூலை 30 ஆம் திகதியாகும். அதாவது குறித்த ஆசிரியர் வெளிநாடு சென்று அண்ணளவாக ஒரு வருடத்திற்கு பின்னரே ஆகும்.

இது தொடர்பாக தேசிய மற்றும் பேராயர் கல்விப் பணிப்பாளர் அருட் தந்தையினால் 2019 மார்ச் 18 ஆம் திகதி குறிப்பிடப்பட்டுள்ளதாவது குறித்த ஆசிரியர் இந்த வெளிநாட்டு விடுமுறை விண்ணப்பப் பத்திரத்தை நேர காலத்துடன் சமரப்பித்து இருந்த போதிலும் பேராயர் இல்லத்தில் கத்தோலிக்க பாடசாலைகள் பிரிவினால் சமர்ப்பிக்க தாமதமாகியுள்ளது என்பதனாலேயே ஆகும்.

**(உ) வகுப்புகளுக்கு ஆசிரியர்களை இணைத்தல்**

மாதிரி பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட நுகேகொடையில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஒன்றில் 1 ஆவது வகுப்பிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவியர், 2 ஆவது வகுப்பிற்கு வகுப்பேற்றம் செய்யப்படும் போது அனைத்து வகுப்புகளிலும் உள்ள பிள்ளைகளை கலந்து அவர்களது வகுப்பு பொறுப்பாசிரியைகளும் மாற்றப்பட்டுள்ளது என 2019 பெப்ரவரி 01 ஆம் திகதி பெற்றோரினால் கல்வி அமைச்சிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. கல்வி அமைச்சின் 1998 நவம்பர் 23 ஆம் திகதியிடப்பட்டதும் 1998/44 இலக்கம் கொண்டதுமான சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த செயற்பாடு பிழையான செயல் என்பதனால் 2012 மே 08 ஆம் திகதியிடப்பட்ட 2012/13 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த செயற்பாடு செய்யக்கூடாத செயல் என கல்வி அமைச்சினால் 2019

பெப்ரவரி 28 ஆம் திகதி குறித்த பாடசாலை அதிபருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(ஊ) அறிவிப்பின்றி ஆசிரியர் சேவையிலிருந்து இடைநிறுத்தல்**

மாதிரி பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட கொழும்பில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் ஒருவருக்கு 2020 பெப்ரவரி 20 ஆம் திகதி குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டு குற்றம் தொடர்பில் எதுவித ஒழுக்காற்று விசாரணைகளும் செய்யாது சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 3.2.10 ஆசிரியர்களின் ஒழுக்கம்

அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களின் நியமனம் மற்றும் ஒழுக்காற்று அதிகாரி பாடசாலை முகாமையாளர் என்பது குறிப்பிடப்பட்டு இந்த பாடசாலைகளில் ஆசிரியர்கள் தொடர்பான ஒழுக்க காரணிகளின் போது பாடசாலை முகாமைத்துவத்தினால் நடாத்தப்படும் ஒழுக்காற்று விசாரணையின் பின்னர் குறித்த ஆசிரியர் மீண்டும் சேவையில் அமர்த்தப்படுவது அல்லது நிறுத்தப்படுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு கல்வி அமைச்சினால் அனுமதி மட்டும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது என்பது ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது.

அதற்கமைய உரிய ஒழுக்காற்று விசாரணைக்கு வட்டாரக் கல்வி / வலயக் கல்வி / மாகாணக் கல்வி அல்லது கல்வி அமைச்சு மட்டத்தில் ஏதேனும் அதிகாரியொருவர் பங்கு பற்றாத காரணத்தினால் பாரபட்சமாக ஒரு தரப்பினருககுச் சாதகமான தீர்மானத்தினால் நியாயமான தீர்வினைப் பெற்றுக் கொள்வதிலுள்ள நிச்சயமற்ற தன்மை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

மாதிரி கோவை பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்ட வகையில் நுகேகொடையில் அமைந்துள்ள அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவர் சிறுவர் துஷ்பிரயோகக் குறிறச்சாட்டு தொடர்பில் வலுவான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு உள்ளார் என்பதும் அது தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதும் பாடசாலை முகாமைத்துவத்தினால் கல்வி அமைச்சிற்கு 2018 ஓகஸ்ட் 03 ஆம் திகதி அறிக்கையிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கல்வி அமைச்சினால் 2018 ஓகஸ்ட் 20 ஆம் திகதி குறித்த பாடசாலையின் முகாமைத்துவத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாவது சிறுவர் பாதுகாப்பு

அதிகாரசபைக்கு செய்யப்பட்ட முறைப்பாடு சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டு எனில் அது கிரிமினல் குற்றம் என்பதால் குறித்த ஆசிரியர் வேலை நீக்கம் செய்யப்படுதல் வேண்டும் என்பதும், முறையான ஒழுக்காற்று விசாரணைகளின் பின்னர் குறித்த ஆசிரியர் மீண்டும் சேவையில் அமர்த்தப்படுவதற்கு அல்லது நீக்கப்படுவதற்கு கல்வி அதிகாரியின் அனுமதி பெற்றுக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாகும்.

இந்த ஆசிரியர் தொடர்பில் அந்தப் பாடசாலை அதிபரினால் 2018 செப்டெம்பர் 29 ஆம் திகதி குறித்த சமயப் பிரிவின் பொது முகாமையாளரான பிரதான அருட் தந்தையிடம் எழுத்து மூலம் குறித்த ஆசிரியர் இந்தப் பாடசாலைக்கு எப்போதும் ஆசிரியராக அனுப்பப்பட வேண்டாம் எனவும், எந்த வயதிலும் பிள்ளைகள் உள்ள பாடசாலைக்கும் ஆசிரியராக அனுப்ப வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆயினும் கல்வி அமைச்சின் தனியார் பாடசாலை பிரிவுப் பணிப்பாளரின் 2019 ஜூன் 19 ஆம் திகதியிலான இலக்கம் ED/03/10/06/05(I) கொண்ட கடிதம் அத்துடன் 2020 மார்ச் 12 ஆம் திகதியிலான ED/03/10/06/05(II) இலக்கம் கொண்ட கடிதம் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளரை விளித்து இந்த ஆசிரியர் தொடர்பில் பாடசாலை முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணைக்கமைய இந்த ஆசிரியருக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்து குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டு உள்ளதனால் அவர் மீண்டும் சேவையில் அமர்த்தப்படுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேலே குறிப்பிடப்பட்ட பந்திக்கு அமைய அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் தொடர்பில் பொதுவான அவதானிப்பானது, இந்தப் பாடசாலைகளின் ஒழுங்குறுத்தலுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்த போதிலும் கல்வி அமைச்சின் குறித்த அலகின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்ந்தும் தவறியுள்ளது என்பதும் மற்றும் தாமதப்பட்டு உள்ளது என்பதுமாகும். அதன் மூலம் அந்தப் பாடசாலைகள் கல்வி அமைச்சின் கண்காணிப்பில் இருந்து மேலும் மூழ்கடிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

அதே போன்று அரசாங்கத்தின் மூலம் ஒழுங்குறுத்தப்படும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளும் கல்வி அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் அறிவுறுத்தலுக்கு ஏற்புடையதாக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதும், அவ்வாறு இணங்குவதற்கு அந்தப் பாடசாலைகள் சட்டரீதியான பிணைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு உள்ளது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3.3 சர்வதேச பாடசாலைகள்

அடிப்படையில் இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டு மக்களின் பிள்ளைகளின் கல்வியினை இலக்காகக் கொண்டு சர்வதேச பாடசாலைகள் 1980 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இந்தப் பாடசாலைகள் வெளிநாட்டு மக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாததுடன் அதிகமான வகுப்பு கட்டணங்கள் அறவிடப்படுகின்றது என்பதால் அதனை கொடுக்கக் கூடிய வசதி மற்றும் விருப்பம் உள்ள எவரேனும் இந்த பாடசாலைகளுக்கு அனுமதியினை பெற்றுக் கொள்ள முடியும். பல்வேறு சமய, அரசியல் மற்றும் சமூக காரணிகளுக்கு அமைய தவறான முறைகளில் பரவியுள்ள இலங்கை பாடசாலை ஒழுங்கமைப்பினுள் அரசின் கீழ் கொண்டுவரப்பட்ட நகர மையத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் அரசிடம் ஒப்படைக்கப்படாத பாடசாலைகள் என்பன பௌதீக மற்றும் மனிதவளம் என்பவற்றில் உயர்ந்த தரத்தில் அமைந்துள்ளதால் அவை மீதான பெற்றோர்களின் ஈர்ப்பும் அதிகரித்துள்ளது என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. ஆயினும் தற்போது அரச பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்கு அனுமதி பெற்றுக் கொள்ளுவதில் உள்ள தடைகள் காரணமாக தற்போது சர்வதேச பாடசாலைகள் உள்நாட்டு மக்களின் ஈர்ப்பினை பெற்றுக் கொண்டுள்ளது.

2007 இன் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் நிறுவனமாக அல்லது வியாபார பெயர் பதிவு செய்தல் சட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு கல்வி நிறுவனமாக செயற்பட்டு வரும் இந்த பாடசாலைகளுக்கு இடையே கல்வியின் தரம் பெரும்பாலும் வேறுபட்டுள்ளது. அதற்கமைய இலங்கையில் பெரும்பாலான சர்வதேச பாடசாலைகள் அவற்றின் மாணவர்களை Edexcel மற்றும் Cambridge IGCSE சாதாரண தரம் மற்றும் உயர் தரம் பரீட்சைகளுக்காக தயார்படுத்தப்படுகின்றனர். கல்வி அமைச்சினால் 2015 ஆம் வருடம் தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு அமைய இதுவரையிலும் இலங்கையில் 391 சர்வதேச பாடசாலைகள் கண்டறியப்பட்டுள்ளன.

### 3.3.1 கல்வி அமைச்சின் மூலம் சர்வதேச பாடசலைகளை ஒழுங்குறுத்தல்

1961 இல் 8 ஆம் இலக்க துணைப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவிற்கு அமைய 5-14 வயது வரம்பில் இருக்கும் பிள்ளைகளுக்கு கல்வியினை பெற்றுக் கொடுக்கும் தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் காரணமாக கம்பனி சட்டத்தின் கீழ் நிறுவனமாக அல்லது வியாபாரப் பெயர் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தனிநபர் அல்லது கூட்டு வியாபாரமாக இந்த சர்வதேசப் பாடசாலைகள் எனும் நிறுவனம் விசேடமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் அதன் காரணமாக **சர்வதேச பாடசாலைகள்**, கல்வி அமைச்சின் கீழ் பதிவு

செய்யப்பட்ட நிறுவனம் அல்ல என்பதால் அவற்றை ஒழுங்குறுத்தல் செய்வதில் சட்ட ரீதியான தடைகள் காணப்படுகின்றன என்பது கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைப் பிரிவு பணிப்பாளரினால் 2020 ஜூலை மாதம் இலக்கம் ED/03/10/01 திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கையில் செயற்படும் எந்த ஒரு சர்வதேசப் பாடசாலையும் அரசாங்கத்தின் மூலம் கட்டுப்பாடு அல்லது ஒழுங்குறுத்தல் செய்யப்படுவதில்லை என்பது தெளிவாகின்றது. இந்தக் காரணத்தினால் கல்வித் தரத்தினைத் தாண்டி வியாபார நோக்குடன் அந்த நிறுவனங்களை நடாத்திச் செல்வதற்கு இடம் அளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக கல்வியின் தரத்தினை சகல பாடசாலைகளுக்கு இடையிலும் ஒரே மாதிரியாக பேணிச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் தடுக்கப்பட்டிருந்தன.

### 3.3.2 சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பான குழு

1980 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நாட்டு பாடசாலை ஒழுங்கமைப்பில் செயற்பட்டு வரும் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்தல் செய்வதற்காக 2013/ED/E/13 இலக்கம் கொண்ட 2013 ஜூன் 03 ஆம் திகதியிலான அமைச்சரவை பத்திரத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது.

அந்த அமைச்சரவை பத்திரத்திற்கு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் பரிந்துரையுடன் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னர் அமைச்சரவையினால் இந்த காரணிகள் தொடர்பில் கணிப்பாய்வு செய்யப்பட்டு அமைச்சரவையிடம் பரிந்துரையினை சமர்ப்பிப்பதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உத்தியோகத்தர்களை கொண்ட குழுவை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(i) கல்வி அமைச்சின் செயலாளர்
(ii) தேசிய கல்வி ஆணைக் குழுவின் பிரதிநிதி
(iii) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பிரதிநிதி
(iv) குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதிநிதி
(v) கல்வி அமைச்சரினால் பெயர் குறிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கல்வியாளர்கள்
(vi) இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள தனியார் துறை பிரதிநிதிகள்
(vii) ஏனைய தரப்பினர்

அதற்கமைய இந்த உத்தியோகத்தர் குழுவினால் 2013 ஓகஸ்ட் 28 ஆம் திகதி கலந்துரையாடப்பட்டு இணக்கப்பாட்டிற்கு வந்துள்ள பின்வரும் காரணிகள் தொடர்பில் அமைச்சரவையை தெளிவுபடுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

(அ) சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் அனைத்து பிள்ளைகளும் தாய்மொழி, சமயம் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களை கற்பது கட்டாய நிபந்தனை என்பதாக மாற்றுதல்.

(ஆ) சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளில் கல்வியின் தரத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு நடாத்திச் செல்லும் நோக்கில் கல்வி அமைச்சின் மூலம் ஒழுங்குறுத்தல் மற்றும் கண்காணிப்பு செயற்பாட்டினை தாபிக்கக்கூடிய வகையில் 1961 இன் 8 ஆம் இலக்க துணைப் பாடசாலை மற்றும் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவில் திருத்தம் செய்தல்.

(இ) சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளின் கல்வி செயற்பாடுகள் தேசிய கல்விக் கொள்கையின் பொதுக் கட்டமைப்பில் இருந்து முறையாக ஒழுங்கு செய்வதற்கு ஏற்ற வகையில் கல்வி அமைச்சின் கீழ் செயல்பட்டு வரும் தனியார் பாடசாலைப் பிரிவு, செயலாளர் அலுவலகம் (Secretariat) என்பதாக மாற்றப்பட்டு சட்ட ரீதியான அதிகாரங்களை வழங்குதல் மற்றும் அந்தப் பாடசாலைகளில் மனிதவளம் மற்றும் பௌதிக வளங்களின் தரத்தினை ஒழுங்குறுத்தல் செய்தல் முறைமையினை தயாரித்தல். இதன் கீழ் பின்வரும் அவதானிப்புகள் காட்டப்பட்டுள்ளன.

(i) சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளாக உண்மையாகவே செயற்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாது இருந்தமையால் அந்தந்த ஆண்டுகளில் பிறப்பு எண்ணிக்கை மற்றும் பாடசாலைக் கல்விக்கு உள்வரும் மாணவர் எண்ணிக்கைக்கு இடையிலான வேறுபாடு காணப்படுவதுடன், அவர்களது தேசிய ரீதியான பிரதிநிதித்துவம் இடம்பெறவில்லை. அந்தப் பிள்ளைகளும் தேசிய கல்வி ஒழுங்கமைப்பில் கல்வியைப் பெறும் பிள்ளைகளாக பிரதிநிதித்துவம் பெறும் முறைமையினை தயாரித்தல் அத்தியாவசியமானது என்பது.

(ii) உயர் தரத்தினை கொண்ட சர்வதேச பாடசாலை ஒழுங்கமைப்பினை பேணுதல், ஆசியாவின் அறிவு மையமாக நாட்டினை அபிவிருத்தி செய்யும் உத்திக்கு அமைய மிக முக்கியமானது என்பதாலும் மற்றும் நாட்டின் அபிவிருத்தி செய்யும் உத்திக்கு அமைய மிக முக்கியமானது என்பதாலும் மறறும் நாட்டின் வெளிநாட்டு முதலீட்டை அதிகரிப்பதற்கும் உதவி புரிகின்றது என்பதாலும் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளின் நடவடிக்கைகளின் தரத்திற்கு அமைய ஒழுங்குபடுத்துவதன் மூலம் நாட்டின்

பொருளாதார அபிவிருத்திக்கும் வலுவான ஆதாரம் கிடைத்துள்ளது என்பது.

(iii) சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளில் பௌதீக மற்றும் மனித வளங்களின் தரத்தினை மற்றும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் தரத்தின் அடிப்படையில் அந்த பாடசாலைகளை தரப்படுத்தல் செய்யும் முறையினை அறிமுகப்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் தரமற்ற சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகள் உருவாகுவதைத் தவிர்ப்பதும், செயற்பட்டு வரும் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளின் தரத்தினை உயர்த்துவதற்காக ஊக்கி ஒன்றினை வழங்குதலை மேற்கொள்வதாகவும் அனைத்து தரப்பினரும் உடன்பட்டு இருந்தமை.

(iv) கல்வி அமைச்சினால் தற்போது செயற்பட்டு வரும் தனியார் பாடசாலை பிரிவானது, அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பில் மட்டும் நடவடிக்கை எடுப்பதுடன் அந்த பிரிவின் நடவடிக்கைகள் மேலே காட்டப்பட்ட விடய காரணிகளும் உள்ளடக்கப்படும் வகையில் மீண்டும் தயாரிக்கப்பட்டு, அந்த பிரிவினை அதிகாரத்துடன் கூடிய செயலாளர் அலுவலகமாக மாற்றி, தனியார் பாடசாலைகளை ஒழுங்கு செய்யும் அதிகாரத்தினை அந்த செயலாளர் அலுவலகத்திற்கு வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டு இருத்தல்.

(v) சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகள் செயலாளர் அலுவலகம் கல்வி அமைச்சின் கீழ் அரம்பிப்பதன் மூலம், கல்வி நடவடிக்கைகளுக்கு இந்த நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டு மாணவர்களுக்கு விசா பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்கும், தேவையற்ற வெளிநாட்டு குடியகல்வுகளை கட்டுப்பாடு செய்வதற்கும் ஏற்ற திறன் கிடைக்கும் என்பதும் அது தற்போது செயற்பட்டு வரும் முறைமையினை மேலும் முறைப்படுத்துவதற்கு மிக முக்கியமான காரணியாக இருக்கும் என்பதும் அனைவராலும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தமை.

(ஈ) தேசிய கல்வி நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட பாட விதானங்கள் மற்றும் அறிவுரைகளின் கீழ் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளில் கல்வியைப் பெற்றுக் கொள்ளும் இலங்கையின் மாணவர்களுக்கான தேசிய பாடத் திட்டம் சார்ந்த பாட நெறிகள் / வகுப்புகளை செயற்படுத்துவதாயின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் தேசிய கல்வி நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட பாடத் திட்டம் மற்றும்

அறிவுரைகளை பின்பற்றும் தேவைப்பாடு மிகவும் முக்கியமானது என்பது பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

(உ) சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகள், பொது தேசிய கல்விக் கொள்கை மற்றும் தரங்களுக்கு ஏற்புடையதாக செயல்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் விதிமுறைகளை தயாரிப்பதில் உள்ள நடப்பு முக்கியத்துவம் தொடர்பில் அனைத்து தரப்பினரும் உடன்பாட்டினை தெரிவித்திருந்தமை.

அதற்கமைய பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு நியமிக்கப்பட்ட இந்த குழுவினால் மேலே குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் மற்றும் அவதானிப்புகள் அமைச்சரவையின் அவதானத்திற்கு 2013 செப்டம்பர் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த யோசனை உற்பத்தித் திறன் மற்றும் நடைமுறையில் உள்ளவை எனினும் அந்த யோசனைகள் தொடர்பில் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட பரிந்துரை அல்லது ஒழுங்குறுத்தல் தொடர்பான விபரங்கள் கணக்காய்வினால் கோரப்பட்டிருந்த போதிலும் அவை சமர்ப்பிக்கப்பட்டு இருக்காததுடன், அதற்கமைய சர்வதேச பாடசாலைகள் தொடர்பான மேற்கூறப்பட்ட யோசனைகளில் உள்ளடக்கப்பட்ட காரணிகள் நிறைவேற்றப்படுவதில் உள்ள வெற்றியை மதிப்பீட்டிற்கு உட்படுத்த முடியாதிருந்தது.

(ii) 2013 செப்டெம்பர் 17 ஆம் திகதியிலான அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டிருந்த வகையில் 1961 இன் 8 ஆம் இலக்க துணைப் பாடசாலை மற்றும் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவினை திருத்துவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள் சமூக காரணங்கள் மற்றும் வேறு நடைமுறை காரணங்களின் அடிப்படையில் வெற்றியடையவில்லை என்பதாக கல்வி அமைச்சினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

(iii) மேலே குறிப்பிடப்பட்ட (அ) பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு இலக்கம் 1863/10 கொண்டதும் 2014 மே 20 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளில் 1 ஆம் வகுப்பு தொடக்கம் 8 ஆம் வகுப்பு வரையில் கல்வி கற்கும் இலங்கை பிள்ளைகளுக்கு தாய்மொழி, சமயம் மற்றும் இலங்கை வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பித்தலை கட்டாயப்படுத்தும்

கட்டளை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஆயினும் அந்த கட்டளைகள் சர்வதேச பாடசாலைகளில் பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் எந்த விதமான தொடர் நடவடிக்கைககளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.3.3 சர்வதேச பாடசாலைகளைப் பதிவு செய்தல் மற்றும் தரவுகளை பேணிச் செல்லுதல்

#### 3.3.3.1 கல்வி அமைச்சிடம் உள்ள தரவுகள்

இலங்கையில் தற்போது செயற்பட்டுவரும் சர்வதேச பாடசாலைகள் தொடர்பான சரியான தரவு ஒழுங்கமைப்பு ஒன்று கல்வி அமைச்சிடம் இல்லாததுடன், கல்வி அமைச்சின் மூலம் 2015 அம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவிப்பக்கு கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கமைய மொத்தமாக சர்வதேச பாடசாலைகளின் எண்ணிக்கை 391 மட்டும் காணப்படுகின்றது என்பது கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைகள் பரிவுப் பணிப்பாளரின் 2020 ஜுலை மாத இலக்கம் ED/03/10/01 கொண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டள்ளது. ஆயினும் அந்தப் பாடசாலைகள் உண்மையான வகையில் காணப்படுகின்றனவா என்பது தொடர்பாக இதுவரையிலும் பௌதீக ரீதியில் எதுவிதமான உறுதிப்பாடும் இடம்பெறவில்லை.

#### 3.3.3.2 முதலீட்டுச் சபையின் அனுமதியினை பெற்றுக் கொண்டுள்ள சர்வதேச பாடசாலைகள்

1978 இன் 4 ஆம் இலக்க பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு சபை சட்டத்தின் (BOI) (முதலீட்டுச் சபை சட்டம்) 16 ஆவது பிரிவின் கீழ் 07 சர்வதேசப் பாடசாலைகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த சர்வதேச பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கும் போது முதலீட்டு சபையினால் கவனத்தில் கொள்ளப்படுவது வெளிநாட்டு முதலீட்டாளரினால் இலங்கைக்கு செய்யப்படும் முதலீட்டின் போது கவனத்தில் கொள்ளப்படும் நிபந்தனைகள் மட்டும் என்பது முதலீட்டுச் சபை பணிப்பாளரின் (முதலீட்டு மதிப்பீடு) 2020 ஜுலை 22 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த பாடசாலைகள் முதலீட்டு சபை சட்டத்தின் 16 ஆவது பிரிவின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள பாடசாலைகள் என்பதனால் அந்த நிறுவனங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் முதலீட்டு சபையின் செயற்பாடு அல்ல என்பதும் அதற்காக அவர்கள் சட்டரீதியான பிணைப்பிணை ஏற்படுத்தி இருக்கவில்லை என்பதும் தெளிவாகின்றது. அதற்கமைய இந்த கல்வி நிறுவனங்களில் இடம்பெறும் நடவடிக்கைகள் தொடர்பில் ஒழுங்குறுத்தல் செயல்களை மேற்கொள்ளும் பொறுப்பில் இருந்து கல்வி அமைச்சு இன்னமும் விலகிச் செல்ல முடியாது என்பது கணக்காய்வின் கருத்தாகும்.

### 3.3.3.3 கம்பனி சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் பதிவாளரின் கடமைப் பொறுப்புகள்

**(அ) கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சர்வதேசப் பாடசாலைகள்**

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் நிறுவனமாக 21 பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் நிறுவனம் ஒன்றை பதிவு செய்கையில் கருத்தில் கொள்ளும் மூலப்பிரமாணங்களுக்கு மேலதிகமாக பாடசாலையாக நடாத்தி செல்வதற்கு தேவையான எனைய மூலப்பிரமாணங்கள் மற்றும் தரங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாத வகையில் அமைக்கப்பட்டிருந்தமை மற்றும் அவை எந்த வகையிலும் ஒழுங்குறுத்தல் இல்லாத நிலையில் அவை முற்றாக வணிக நிறுவனங்களாக பதிவு செய்யப்பட்டு மற்றும் வியாபார நோக்கத்துடன் நடாத்தப்பட்டு வந்திருந்தன. இலங்கையினுள் எதிர்கால மனித முதலீட்டினை கட்டியெழுப்புகையில் அதன் தரத்தினை போன்றே சர்வதேச மட்டத்திற்கு பொருந்துதல் போன்ற எந்த வைப்பாட்டினையாவது பூர்த்தி செய்துள்ளதா எனும் காரணிகள் தொடர்பில் மதிப்பீடு இடம்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கம்பனிகளை பதிவு செய்தலை இடைநிறுத்தும் தீர்மானத்தை செயல்படுத்தாமை**

சர்வதேசப் பாடசாலைகள் பதிவு செய்தல் தொடர்பில் மேல் மாகாண வணிக பெயர் பதிவு செய்தல் திணைக்களத்தில் செய்யப்பட்ட விசாரணைக்கு பதிலாக கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்ததாவது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதுடன் அவர்கள் சர்வதேச பாடசாலைகளின் பதிவுக்கு அனுமதி வழங்குவதில்லை என்பதாகும். அந்த இலக்கம் அமப/01/71/11/004 கொண்டதும் 2001 ஜனவரி 31 ஆம் திகதியிலான அமைச்சரவைத் தீர்மானம் கீழே காட்டப்பட்டுள்ளவாறு ஆகும்.

''சர்வதேசப் பாடசாலைகள் என அறியப்படும் பாடசாலைகள், கல்வி தொடர்பான ஜனாதிபதி செயலாற்றல் அதிகாரசபையினால் எதிர்பார்க்கப்படும் வகையில் தேசிய கல்வி முறைமையில் அவை செயற்படுவதும், அவற்றின் குறிக்கப்பட்ட தரத்தினை பேணி செல்வதையும் உறுதிப்படுத்தும் நோக்கில், சட்டரீதியான ஒழுங்கு விதிகளை கொண்டு வரும் நோக்கத்திற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் என்பதற்கு உடன்படுகின்றன என்பது ஆகும். இது தொடர்பான அடிப்படை அறிக்கை ஒன்று 2001 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அளவில் சமர்ப்பிப்பதாக அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சினால் இது தொடர்பில் செயற்படும் வரையில், நிறுவனம் பதிவாளரினால், சர்வதேச பாடசாலைகளை நடாத்திச் செல்லும் நோக்கில் நிறுவனங்களை பதிவு செய்தல் உடனடியாக இடை

நிறுத்தப்பட வேண்டும் என மேலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.'' என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 2001 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட சர்வதேச பாடசாலைகள் காணப்பட முடியாது என்பதுடன் இதுவரையிலும் சர்வதேச பாடசாலைகளுக்கான தீர்மானிக்கப்பட்ட தரத்தினை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கையானது எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆயினும் கணக்காய்வு தினம் வரையிலும் சர்வதேச பாடசாலைகள் தேசிய கல்வி முறைக்கு உள்ளடக்கப்பட்டிருக்காததுடன், இன்னமும் சர்வதேச பாடசாலைகள் காணப்படுவதன் மூலம் அவதானிக்கப்படுவதாவது மேலே குறிப்பிடப்பட்ட அமைச்சரவை தீர்மானம் செயல்படும் மட்டத்தில் இல்லை என்பதாகும்.

**(இ) கம்பனிப் பதிவாளரின் தலையீடு**

கம்பனிப் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்படும் இந்த பாடசாலைகள் தொடர்பிலான தலையீடுகள் தொடர்பில் மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்ட ஏனைய அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(i) சர்வதேச பாடசாலைகளை கம்பனியாக பதிவு செய்தல்**

கம்பனி பதிவாளர் நாயகத்தின் இலக்கம் 19072716561 கொண்டதும் 2019 ஆகஸ்ட் 13 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தின் மூலம் அவருக்கு அனுப்பப்பட்ட சர்வதேசப் பாடசாலை ஒன்றை வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்வதற்கு கிடைத்த ஆவணங்களை பரீட்சித்த போது கல்வி நடவடிக்கைகள் தொடர்பான வியாபாரமாக உணரப்பட்டமையால், கம்பனி சட்டவாக்கத்தினை கருத்தில் கொண்டு அவதானிப்புகள் மற்றும் முடிவுகளை தெரிவிக்குமாறும் முன் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டி இருப்பின் அது தொடர்பான விபரங்களுடன் தெரிவிக்குமாறும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். ஆயினும் அந்தக் கடிதத்திற்கு பதிலாக கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைகள் பிரிவின் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது துணைப் பாடசாலைகள் சட்டத்திற்கு அமைய சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் எந்த ஒரு ஒழுங்குறுத்தலும் இடம்பெறவில்லை என்பதாகும். அதற்கமைய வணிக நிறுவன பதிவு செய்தல் மூலப்பிரமாணங்களுக்கு ஏற்புடைய வகையில் சர்வதேச பாடசாலைகளை பதிவு செய்தல் கம்பனி சட்டத்திற்கு அமைய இடம்பெற்ற போதிலும் அந்த பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் ஒழுங்குறுத்துவதற்கு இலங்கையில் எந்த

அரச நிறுவனமும் தலையிட்டு இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(ii) பெயர் மாற்றம் செய்தல்**

2019 ஒக்தோபர் 09 ஆம் திகதி கம்பஹாவில் அமைந்துள்ள சர்வதேச பாடசாலையொன்றின் பெயரினை மாற்றம் செய்வதற்கு கல்வி அமைச்சிடம் பரிந்துரை மற்றும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன் நடைமுறையிலுள்ள சட்டங்கள், விதிகள் என்பவற்றுக்கு அமைய அந்த விண்ணப்பத்தினை நிறைவேற்ற முடியாது என கல்வி அமைச்சினால் 2019 ஒக்தோபர் 11 ஆம் திகதி குறித்த பாடசாலை பணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இந்த வணிக பெயரினை மாற்றம் செய்வதற்கு 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 471(2) ஆவது பிரிவுடன் இணைந்து வாசிக்கப்பட வேண்டிய அதன் 8(1) ஆவது பிரிவில் கம்பனி பதிவாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கம்பனி பதிவாளரினால் 2019 ஜூன் 29 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது என கம்பனி பதிவாளரின் இலக்கம் பீபீ 549 கொண்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(ஈ) கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தினால் சரியான தகவல்கள் அறிக்கையிடப்படாமை**

கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளாக 21 பாடசாலைகளின் தரவுகள் மட்டும் கணக்காய்விற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் 2000 ஆம் ஆண்டின் பின்னர் சர்வதேச பாடசாலைகள் கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேல் மாகாண வணிக பெயர் பதிவு செய்தல் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் அவர்களால் சர்வதேச பாடசாலைகளை பதிவு செய்வதற்கான அனுமதி பெற்றுக் கொடுக்கப்படுவது இல்லை என்பதாகும். ஆயினும் நேரடியாகக் கிடைக்கப் பெற்ற தரவுகள் மற்றும் கம்பனி பதிவாளர் திணைக்களத்தினால் மற்றும் மேல் மாகாண வியாபார பெயர் பதிவு செய்யும் திணைக்களத்தினால் கிடைக்கப்பெற்ற தரவுகளுக்கு அமைய முரண்பாடுகள் காணப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறாயின் அவர்களது பதிலில் குறிப்பிடப்படாத போதிலும் சர்வதேசப் பாடசாலைகளாக

நடாத்தப்பட்டு செல்லும் பல கல்வி நிறுவனங்கள் இலங்கையில் காணப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது.

அதற்கமைய அவதானிக்கப்படுவதாவது 1961 இன் 8 ஆம் இலக்க துணைப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவிற்கு அமைய அரசு தவிர்ந்த வேறு தனியார் தரப்பினருக்கு கட்டாய கல்வி வயது எல்லையில் இருக்கும் பிள்ளைகளுக்கு கல்வியினை வழங்குவதற்காக பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு சட்ட ரீதியான தடைகள் உள்ளது என்பதனால் கல்வி அமைச்சின் மூலம் சர்வதேசப் பாடசாலைகள் பதிவு செய்யப்படாத போதிலும், கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு கல்வி நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது என்பதாகும்.

### 3.3.3.4 வியாபாரப் பெயர் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சர்வதேசப் பாடசாலைகள்

இது தொடர்பில் மாகாண மட்டத்தில் அவதானிக்கப்பட்ட காரணிகள் பின்வருமாறு ஆகும்.

**(அ)** மேல் மாகாண வியாபாரப் பெயர் பதிவு செய்தல் திணைக்களத்தில் செய்யப்பட்ட விசாரணைக்கு அமைய 2011 இன் 05 ஆம் இலக்க மேல் மாகாண வியாபார, கூட்டுத்தாபன மற்றும் கூட்டிணைக்கப்படாத, வர்த்தக நிறுவனங்களின் வியாபார பெயர் கட்டளைச் சட்டத்தின் கீழ், இலக்கம் 01/71/11/004 கொண்டதும் 2001.01.05 ஆம் திகதியிலான அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட சர்வதேச பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் மாகாண சபை நிறுவனத்தின் மூலம் கிடைக்கப்பொற்ற தகவல்களுக்கமைய வணிக நிறுவன மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வரும் சர்வதேச பாடசாலைகள் இன்னமும் காணப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ)** தென் மாகாண சபை செயலாளரின் இலக்கம் தபச/ஆ/26/2/20 கொண்டதும் 2020 செப்தம்பர் 07 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தின் மூலம் கல்வி அமைச்சு செயலாளரிடம் வினவப்பட்டுள்ளவாறு தென் மாகாணத்தில் சர்வதேச பாடசாலைகள் பதிவு செய்தல் தொடர்பிலான பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய நிறுவனம் தொடர்பான அறிவுரைகள் கோரப்பட்டிருந்தது.

இந்த கடித்திற்கு பதிலாக கல்வி அமைச்சினால் 2020 செப்தம்பர் 28 ஆம் திகதி குறிப்பிடப்பட்டுள்ளதாவது 1961 இன் 8 ஆம் இலக்க துணைப் பாடசாலைகள் மற்றும் பயிற்சி கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின்

25 ஆவது பிரிவிற்கு அமைய 5-14 வயது எல்லையில் உள்ள பிள்ளைகளுக்கு கல்வியினை வழங்குவதற்காக படசாலைகளை ஆரம்பித்தல் தனியார் தரப்பினருக்கு முடியாது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால் இந்த சட்ட ரீதியான ஏற்பாடுகள் திருத்தப்படும் வரையில் நிறுவனத்தினை ஆரம்பிப்பதற்கு பரிந்துரை / அறிவுரை வழங்குவதற்கான சாத்தியங்கள் இல்லை.

(இ) மேலும் மாதிரி பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்ட வகையில் அமைக்கப்பட்டிருந்த அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை ஒன்றை தனிநபர் வியபாரமாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கப்ட்டிருந்தது என்பதும் அதற்காக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒழுங்குறுத்தல்கள் என்ன என்பது தொடர்பிலும் 2020 ஆகஸ்ட் 03 ஆம் திகதியிடப்பட்ட மாவத்தகம பிரதேச செயலாளரின் கடிதம் மூலம் கல்வி அமைச்சு செயலாளரிடம் வினவப்பட்டிருந்தது. அதற்கமைய தனியார் தரப்பினர்கள் பல்வேறு வகைகளில் சர்வதேச பாடசாலைகளை பதிவு செய்வதற்கு முயற்சி செய்கின்றனர் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) கணக்காய்வினால் நாடு முழுவதிலும் அமைந்துள்ள மாநகர சபை மற்றும் நகர சபைகளில் செய்யப்பட்ட தகவல் சேகரிப்புக்கு கிடைக்கப்பெற்ற பதில்களுக்கு அமைய அந்த அதிகார பிரதேசத்தினுள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சர்வதேச பாடசாலைகள் வியாபர நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு எந்த ஒரு நிறுவனத்தினாலும் ஒழுங்குறுத்தப்படாத வியாபார மத்திய நிலையமாக மட்டும் பதிவு செய்யப்பட்டிருந்த நிறுவனம் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய 9 மாகாணங்களுக்குரிய 66 மாகாணசபை நிறுவனங்களில் தகவல் சேகரிக்கையில் கணக்காய்வு தினத்திற்கு தகவல்களை பெற்றுக் கொடுத்திருந்த 48 நிறுவனங்களில் 30 நிறுவனங்கள் அவ்வாறான 97 பாடசாலைகள் காணப்பட்டன என்பது அறிக்கை இடப்பட்டிருந்ததுடன் 17 மாகாணசபை நிறுவனங்களால் அது தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய நாடு முழுவதிலும் சர்வதேச பாடசாலைகள் விரைவாக பரவி வருகின்றது என்பதும், எது விதமான ஒழுங்குறுத்தல் பொறிமுறையுமின்றி மாகாணசபை நிறுவன மட்டத்தில் சர்வதேச பாடசாலைகள் நடாத்தி செல்லப்படுகின்றது என்பதும் அவதானிக்கப்ட்டது.

### 3.3.3.5 சர்வதேச பாடசாலைகளின் கிளைகளை தாபித்தல்

(அ) தற்போது வரையிலும் செயற்பட்டு வருகின்ற சர்வதேச பாடசாலைகள் அவற்றின் கிளைகளை தாபிப்பதற்கு ஆரம்பித்துள்ளதுடன் ஒரு சில பாடசாலைகள் அதற்காக கல்வி அமைச்சின் பரிந்துரையையும் கோரியுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் கல்வி அமைச்சின் பதிலாகவுள்ளது 1961 இன் 08 ஆம் இலக்க துணைப் பாடசாலைகள் சட்டம் திருத்தப்படும் வரை பரிந்துரை / அறிவுரை வழங்கப்பட முடியாது என்பதாகும். கிளைப் பாடசாலைகளை தாபிப்பதற்கு எதிர்பார்க்கும் அவ்வாறான இரண்டு பாடசாலைகள் தொடர்பான விபரங்கள் மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டன.

(ஆ) மாகாண சபை நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய ஒரு தடைவ கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சர்வதேச பாடசாலை அந்த பதிவு இலக்கத்தின் கீழ் நாடு முழுவதும் மாகாணசபை நிறுவன மட்டத்தில் கிளைப் பாடசாலைகளை ஆரம்பித்து நடாத்தி செல்கின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.3.3.6 சர்வதேச பாடசாலைகளின் உரிமையை ஒப்படைத்தல்

2020 மே 26 ஆம் திகதி காலி சர்வதேச பாடசாலையொன்றில் பெற்றோர் சங்கத்தினால் ஜனாதிபதியிடம் அனுப்பப்பட்ட முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது அந்தப் பாடசாலை நிதி நிறுவனத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டது என்பதும், 2017 ஆம் ஆண்டில் இந்த பாடசாலை விற்பனைக்கான விலை மனுவுக்கு அமைய ஒரு சர்வதேசப் பாடசாலைக்கு மாற்றுவதற்கு முயற்சி செய்யப்பட்டது என்பதுமாகும்.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் பதிலாக இருந்தது தற்போதுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகளக்கு அமைய சர்வதேச பாடசாலைகளின் சிக்கல்களுக்கு கல்வி அமைச்சிற்கு நேரடியாக தலையிடுவதற்கு சாத்தியம் இல்லாததால் பாடசாலை முகாமைத்துவத்துடன் கலந்துரையாடி பிரச்சனையை தீர்த்துக்கொள்ளுமாறு ஆகும்.

இதற்கமைய அவதானிக்கப்படுவதாவது முறையான ஒழுங்குறுத்தல் இல்லாத காரணத்தினால் சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்களுக்கு பெற்றோர்களுக்கு தீர்வினை பெற்றுக் கொள்ளக்கூடிய எந்த ஒரு அரச நிறுவனமும் இல்லை என்பதாகும்.

### 3.3.4 புதிதாக சர்வதேசப் பாடசாலைகளை ஆரம்பித்தல்

### 3.3.4.1 அரச பாடசாலை ஒன்றினை புதிதாக ஆரம்பிப்பதற்கான பொதுவான நிலைமை

கல்வி அமைச்சினால் 1981 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பாடசாலை அமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல் கோவையின் 2.1 பந்திக்கு அமைய அரசினால் புதிய பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கும் போது குறித்த பரிந்துரையை பெற்றுக் கொடுக்க வேண்டியது அதற்கான அத்தியாவசியமான சந்தர்ப்பத்தில் மட்டுமேயாகும். அதற்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் புதிய பாடசாலையினை ஆரம்பிப்பதற்கான தேவைப்பாடு உருவாகக்கூடும். அதற்கமைய குறித்த மூலப்பிரமாணங்கள் முழுமையாக சர்வதேச பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு ஏற்றதாக்குவது கடினம் மற்றும் நடைமுறையறற்து என்கின்ற போதிலும் தரமான கல்விக்கான மூலப்பிரமாணங்களை சர்வதேசப் பாடசாலைகளும் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தினை இங்கு நிராகரிக்கமுடியாது.

**(அ) பாடசாலைக்காக உள்ள தூரம்**

அதற்குரிய மூலப்பிரமாணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகும்.

(i). பிரதேசத்திலுள்ள 10 வதிலும் குறைந்த 2 கிலோ மீற்றருக்கு அதிக தூரத்தை கடந்து ஆரம்ப பாடசாலைக்கு செல்ல வேண்டி ஏற்பட்டுள்ள சந்தர்ப்பம்

(ii) பிரதேசத்தில் இருக்கும் 6-11 வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 4 கிலோ மீற்றருக்கு அதிகமான தூரத்தினை கடந்து இரண்டாம் நிலை பாடசாலைக்கு செல்ல வேண்டியேற்பட்டுள்ள சந்தர்ப்பம்

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறிப்பிட்ட தூர அளவில் ஆரம்ப நிலை இடைநிலை மற்றும் மூன்றாம் நிலை பாடசாலைகள் காணப்பட்ட போதிலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சந்தரப்பங்களில்

- இருக்கின்ற பாடசாலைகில் உள்ள இட வசதியினை விட அதிகளவில் பாடசாலைக்கு செல்ல வேண்டிய வயதில் இருக்கும் மாணவர் தொகை குறித்த பிரதேசத்தில் வசித்தல். (மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் மூலம் சான்றுப்படுத்தல் வேண்டும்)
- குறித்த தூரத்தில் பாடசாலைகள் காணப்பட்ட போதிலும் காடுகள், ஆறு அமைந்துள்ளமை, மலைகள் போன்ற இயற்கை தடைகளினால் அந்த பாடசாலைகளை அடைவதில் சிரமங்கள் உள்ளமை.

**(ஆ) புதிய குடியிருப்புகள் உருவாகுதல்**

மகாவலி செயற்றிட்டம் போன்ற புதிய குடியிருப்புகள் அல்லது விவசாய குடியிருப்பு அல்லது மாதிரி கிராமங்களை ஆரம்பித்தல் போன்றவற்றின் போது அந்த பிரதேசத்தில் வசிக்க வரும் குடும்பங்களில் பாடசாலை செல்ல வெண்டிய வயதில் உள்ள மாணவர் எண்ணிக்கை மறறும் அதன் வளர்ச்சிக்கு ஏற்ப புதிய பாடசாலைகளை ஆரம்பிக்க முடியும்.

**(இ) புதிதாக பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்கான பிரேரணை சமர்ப்பித்தல்**

புதிய பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கும் போது இரு வழிகளிலும் சமரப்பிக்கபடக்கூடிய பிரேரணைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கவனத்தில் கொள்ளப்படமுடியும்.

(i) வலயக் கல்வி அலுவலகத்தில் திட்டமிடல் பிரிவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு அமைய

(ii) பிரதேசத்தில் உள்ள பெற்றோர்கள், கிராம உத்தியோகத்தர் அலல்து ஒரு வெளி அமைப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கமைய

**(ஈ) வலயக் கல்விப் பணிப்பாளரினால் நடவடிக்கை எடுத்தல்**

மேலே குறிப்பிடப்பட்ட (இ) இன் பிரகாரம் அவ்வாறு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டவுடன் வலயக் கல்விப் பணிப்பாளரினால் கீழே குறிப்பிடப்பட்ட காரணிகள் தொடர்பில் உரிய தரவுகள் மற்றும் புள்ளி விபரங்களை கருத்தில் கொண்டு பிரேரணை தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(i) குறித்த போசணைப் பிரதேசத்தில் அந்த வகையான பாடசாலை இல்லாது இருத்தல்.

(ii) குறித்த போசணைப் பிரதேசத்தில் புதிய பாடசாலையினை ஆரம்பிப்பதற்கு போதுமான அளவு மாணவர் எண்ணிக்கையினர் இருத்தல்.

(iii) குறித்த போசணைப் பிரதேசத்திலுள் பாடசாலையில் / பாடசாலைகளில் தீர்மானிக்கப்பட்ட கல்வி மட்டத்தில் அனைத்து பிள்ளைகளுக்கும் இடவசதி இல்லாதிருத்தல்.

(iv) புதிய பாடசாலையொன்றை அமைப்பதற்கு பொருத்தமான அல்லது போதுமான கட்டடங்களுக்கு தேவையான காணி இருத்தல்.

**(உ) புதிய பாடசாலை ஒன்றை அமைப்பதற்கான குறைந்தபட்ச காணி அளவு தொடர்பில் கருத்தில் கொள்ளுதல்**

புதிய பாடசாலையொன்றை ஆரம்பிக்கும் பிரேரணை நியாயப்படுத்தப்பட்டதன் பின்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் புதிய பாடசாலையை நிர்மாணிபப்தற்கு பொருத்தமான இடம் உள்ளதா என்பது தொடர்பில் திருப்தி அடைதல் வேண்டும். ஆரம்பப் பாடசாலை ஒன்றை ஆரம்பிபப்தற்கு குறைந்தபட்சம் 02 ஏக்கர் காணி தேவையென்பது பாடசாலை அமைப்பு நடவடிக்கை தொடர்பான அறிவுறுத்தல் கோவையில் 2.2(ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3.3.4.2 சர்வதேச பாடசாலைகளை அமைக்கும் போது மேற்கூறிய மூலப்பிரமாணங்களை கருத்தில் கொள்ளாமை**

நாடு முழுவதிலும் சர்வதேச பாடசாலைகளை அமைக்கும் போது அது தொடர்பான ஒழுங்குறுத்தல் இடம்பெறாத காரணத்தினால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேவப்பாடுகளில் இருந்து விலகி சர்வதேச பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. மிகவும் குறைந்த வசதிகள் மற்றும் குறைந்த நிலப்பரப்பினை கொண்ட வீடுகள் போன்ற இடங்களில் ஒருசில சர்வதேச பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதும், பிள்ளைக்கு பொருத்தமான கற்றல் சூழல் இல்லை என்பதும் ஒரு சில பெற்றோர்களின் முறைப்பாடுகளை பரீட்சிக்கும் போது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் 3.3.5 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3.3.4.3 சர்வதேசப் பாடசாலைகளுக்கான கட்டடங்களை தாபிக்கும் போது கல்வி அமைச்சின் பரிந்துரைகள்**

சர்வதேச பாடசாலை ஒன்றை நிர்மாணிக்கும் போது நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் குறித்த கட்டட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு ஆரம்ப திட்டமிடல் தீர்வுகளுக்கு அனுமதியினை பெற்றுக் கொள்ளுகையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் குறித்த தெளிவுபடுத்தல் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு கோரப்பட்டுள்ள பரிந்துரைகளுடன் கல்வி அமைச்சின் பரிந்துரையும் கோரப்பட்டுள்ளது.

இங்கு கல்வி அமைச்சினால் குறித்த விண்ணப்பத்திற்கு பதிலாக தெரிவித்துள்ளதாவது 1961 இன் 8 ஆம் இலகக் துணைப் பாடசாலை மற்றும் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவிக்கு அமைய அரசு தவிர்ந்த தனியார் தரப்பினருக்கு பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு சட்டரீதியாக சாத்தியமில்லை என்பதும் மேலே கூறப்பட்ட காரணிகளுக்கு அமைய அறிவுறுத்தல் அல்லது பரிந்துரை வழங்கமுடியாது உள்ளது என்பதாகும்.

இந்த காரணத்தினால் பாடசாலை ஒன்றை நிர்மாணிக்கும் போது பின்பற்ற வேண்டிய மூலப்பிரமாணங்களிலிருந்து விலகி தமது தற்றுணிவின் பேரில் அவற்றை கட்டியெழுப்புவதற்கான இடம் கிடைத்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.3.5 பாடசாலை ஒன்றில் காணப்பட வேண்டிய பௌதீக வளங்கள்

மேலே கூறபப்ட்ட மூலப்பிரமாணங்களுக்கு மேலதிகமாக கல்வி அமைச்சின் பாடசாலை கட்டட பிரிவினால் 2010 ஜனவரி மாதம் தயாரிக்கப்பட்டிருந்த பௌதீக வள முகாமைத்துவம் மற்றும் பௌதீக வளங்களுக்கான பரிமாணம் எனும் வழிகாட்டியில் பாடசாலைக்கு தேவையான பௌதீக வளங்களுக்கான பரிமாணம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு காட்டப்பட்டுள்ளது. விபரங்கள் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளது.

- ஆரம்ப பாடசாலைகளுக்கு (1-5 தரம்) (Type 3 Schools)
- கீழ் பிரிவு இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கு (1-9 தரங்கள் அல்லது 1-11 தரங்கள்) (Type 2 Schools)
- மேல் பிரிவு இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கு (விஞ்ஞான விடயங்கள் தவிர்த்து) (Type 1C Schools)
- மேல் பிரிவு இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கு (விஞ்ஞான விடயங்களுடன்) (Type 1AB Schools)
- ஏனைய வசதிகள்
- ஆசிரிய குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள்
- கழிப்பறை சிறுநீர் கழிக்கும் இடம்

ஆயினும் சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் இந்த தரங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுகின்றனவா என்பது தொடர்பில் கல்வி அமைச்சின் கண்காணிப்பு இடம்பெறவில்லை. எனினும் இந்தப் பாடசாலைகளில் பௌதீக வளங்கள் போதுமானதாக இல்லாத சந்தர்ப்பங்கள் தொடர்பில் கல்வி அமைச்சிடம் தொடர்ந்தும் மக்கள் பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(i) எகலியகொடவில் நடத்தப்பட்டு வரும் சர்வதேச பாடசாலையில் கட்டட வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் போதுமானதாக இல்லை என 2019 ஜூலை 31 ஆம் திகதி பெற்றோர் ஒருவரினால் இரத்தினபுரி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் அவரால் சப்பிரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பபப்ட்ட கடிதம் அவரால் சப்பிரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளருக்கும் 2019 செப்டெம்பர் 2 ஆம் திகதி கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைகள் பணிப்பாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

(ii) குருணாகலை மாகாண சபைக்கு உரிய மல்லவபிட்டிய பிரதேசத்தில் நடத்தப்பட்டு வரும் சர்வதேச பாடசாலை ஒன்றில் பாடசாலை விஞ்ஞான கூடம், நூலகம், கணனிக்கூடம், மண்டபம், சுத்தமான கழிப்பறை, சுத்தமாக குடிநீர், தகைமை கொண்ட ஆசிரியர்கள் போன்ற வசதிகள் இல்லை என பெற்றோர்களினால் 2019 ஜூலை 15 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) நாவலையில் அமைந்துள்ள சர்வதேச பாடசாலையொன்றில் 3 ஆம் தர வகுப்பு பாதுகாப்பற்ற முறையில் நடாத்தப்பட்டு வருகின்றமை தொடர்பில் பெற்றோர்கள் 2019 மே 22 ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளனர். கட்டணம் அறவிடப்படும் மேலே குறிப்பிடப்பட்ட வகையில் நடத்திச் செல்லப்படும் இந்தப் பாடசாலை தொடர்பில் எதுவிதமான ஒழுங்குறுத்தல்களும் இல்லாது நடாத்தப்பட்டு வருவதனால் உரிய வசதிகள் இன்றி நடாத்திச் செல்வதற்கான இடம் கிடைத்துள்ளது.

### 3.3.6 சர்வதேச பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள்

#### 3.3.6.1 கல்வியின் தரம்

கல்வி அமைச்சுக்கு தொடர்ந்தும் சமர்ப்பிக்கப்பட்ட மக்கள் முறைபாடுகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாட்டில் பிரசித்தி பெற்றது என ஒத்துக்கொள்ளப்பட்ட அதிகளவு பெற்றோர்களின் ஈர்ப்பினை வசமாக்கிக் கொண்ட பாடசாலைகளில் ஆசிரியர்கள் முறையாக கற்பிக்காமை, தொடர்ந்தும் ஆசிரியர்களை மாற்றுதல், தகைமையற்ற ஆசிரியர்கள் கற்பித்தல், பாட திட்டத்தினை பூர்த்தி செய்யாமை, பிள்ளைகளின் மன நிலைமையை உணர்ந்து கொள்ளாது கற்பித்தல் முறைகளை பயன்படுத்தல், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களினால் பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் கல்வி அமைச்சுக்கு அது தொடர்பில் தலையிடுமாறு கோரப்பட்டுள்ளது. ஆயினும் கல்வி அமைச்சினால் இந்த அனைத்து கோரிக்கைகளின் போதும் அதற்கான தலையீட்டினை செய்ய முடியாது என்பதனை எழுத்து மூலம் தெரிவித்துள்ளது. அவ்வாறிருக்க கணக்காய்விற்கு கிடைத்த தகவலுக்கமைய மாதிரி பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட 14 பாடசாலைகளுக்கு உரியதான ஆசிரியர்களின் தகைமைகள், போதிய அளவு ஆசிரியர்கள் இல்லாமை, பாடத் திட்ட சிக்கல்கள் மற்றும் அவற்றை பூர்த்தி செய்யாமை மற்றும் தவறான நடவடிக்கை தொடர்பான காரணிகள் வெளிப்படுத்தப்பட்டு இருந்தன.

### 3.3.6.2. பாடத் திட்டத்தினை கற்பித்தல்

கல்வி அமைச்சினால் இதுவரையிலும் இலங்கையில் 391 சர்வதேச பாடசாலைகள் கண்டறியப்பட்டுள்ளன. அந்த பாடசாலைகளில் கல்வி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பாடத் திட்டம் மட்டுமன்றி வேறு பாடதிட்டங்களும் கற்பிக்கப்படுகின்றன. அது தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) **தேசிய பாடத் திட்டத்தினை கற்பித்தல்**

இந்த 391 சர்வதேச பாடசாலைகளில் 202 பாடசாலைகள் தேசிய பாடத் திட்டத்தில் மட்டும் கற்பிக்கும் பாடசாலைகள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அரச பாடசாலை போன்று இந்தப் பாடசாலைகளில் தேசிய பாடத்திட்டம் குறித்த தரத்திற்கு ஏற்ப கற்பிக்கப்படுகின்றதா என்பது தொடர்பில் கல்வி அமைச்சினால் அல்லது வேறு கல்வி தொடர்பான அரச நிறுவனத்தினால் பரீட்சிப்பு செய்தல் / ஒழுங்குறுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அதே போன்று உள்நாட்டு பாடத் திட்டத்தினை மட்டும் கற்பிக்கும் பாடசாலைகள் சர்வதேச பாடசாலைகள் எனும் பெயரினை பயன்படுத்துதலும் சிக்கலுக்குரியதாகும்.

**(ஆ) தேசிய மற்றும் வெளிநாட்டு பாடத் திட்டங்கள் என இரண்டையும் கற்பிக்கும் பாடசாலைகள்**

ஒரு சில சர்வதேச பாடசாலைகள் இரண்டு பாடத் திட்டங்களையும் கற்பிக்கின்றன என்பது அவதானிக்கப்பட்டது. ஒவ்வொரு பாடத் திட்டத்தையும் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

### 3.3.6.3 பிள்ளைகளுக்கு ஏற்படும் உடல் மற்றும் மனரீதியான சிரமங்கள்

சர்வதேச பாடசாலைகளின் ஆசிரியர்கள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 2018, 2019 மற்றும் 2020 ஆகிய வருடங்களில் பிள்ளைகளை கொடூரமாக தண்டித்தல், பாலியல் ரீதியில் துன்பப்படுத்தல் மற்றும் வேறு வகையிலான முறைபாடுகள் முறையே 13, 11 மற்றும் 06 என்பதாக கிடைத்திருந்ததுடன் கணக்காய்வு தினம் வரையில் அவற்றில் தீர்க்கப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை முறையே 06, 08 மற்றும் 05 எனும் ரீதியில் காணப்பட்டது.

| காரணம் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | **2018** | **2019** | **2020** |
| பிள்ளைகளை கொடூரமான முறையில் தண்டித்தல் | 08 | 07 | 05 |
| பாலியல் துன்பம் | 02 | 02 | - |
| வேறு | 03 | 02 | 01 |
| மொத்த எண்ணிக்கை | **13** | **11** | **06** |
| தீர்க்கப்படாத எண்ணிக்கை | **06** | **08** | **05** |

### 3.3.6.4 பரீட்சைகளை நடாத்துதல்

**(அ) சர்வதேச பாடசாலைகளில் மாணவர்களுக்கு தேசிய பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு உள்ள சந்தர்ப்பம்**

விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகும்.

(i) தனியார் பாடசாலை பிரிவின் மூலம் அறிந்துகொள்ளப்பட்டிருந்த 391 சர்வதேச பாடசாலைகளில் 202 பாடசாலைகளும் தேசிய பாடத் திட்டத்தினை பயன்படுத்துகின்றன என்பது அறிந்து கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு தேசிய பாடத் திட்டத்தினை கற்கும் மாணவர்களுக்கு கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) மற்றும் கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர் தரம்) பரீட்சைகளுக்கு தனியார் விண்ணப்பதாரியாக தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று அந்த இரு பரீட்சைகளுக்கும் தனியார் விண்ணப்பதாரியாக பரீட்சைக்கு தோற்றுவதாயின் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அந்த விண்ணப்பதாரியின் வயது கருத்தில் கொள்ளப்படமாட்டாது. அதே போன்று பல்கலைக்கழக அனுமதிக்கு கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பெறுபேற்றின் அடிப்படையில் தகைமை பெற்ற சகல விண்ணப்பதாரிகள் தொடர்பிலும் கவனத்தில் கொள்ளப்படும். அங்கு விண்ணப்பதாரியின் வயது கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

(ii) அதற்கமைய அரசின் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை மாணவராக அந்த பரீட்சைகளுக்கு தோற்றும் விண்ணப்பதாரர்களுக்கு கிடைக்காத சந்தர்ப்பம் சர்வதேச பாடசாலையில் கல்வி கற்கும் தனியார் விண்ணப்பதாரியாக பரீட்சைக்கு தோற்றும் மாணவருக்கு கிடைத்திருக்கின்றது என்பதும் அதன் மூலம் கல்வியில் சமனான சந்தர்ப்பங்கள் மூழ்கடிக்கப்படுகின்றது என்பதும் அது தொடர்பில் கல்வி

அமைச்சினால் கவனம் செலுத்தப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) சர்வதேசப் பாடசாலைகளில் மாணவர்கள் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) மற்றும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சைகளுக்குத் தோற்றுதல்**

நாட்டில் அரச பாடசாலைகள் மற்றும் துணைப் பாடசாலைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் மாணவர்கள் கல்வி பொதுத் தராதர பத்திர (சாதாரண தரம்) மற்றும் கல்வி பொதுத் தராதர பத்திர (உயர் தரம்) பரீட்சைக்கு தோற்றும் போது பாடசாலை மாணவர்களாக குறிப்பிடப்படாததுடன் தனியார் விண்ணப்பதாரிகளாக வகைப்படுத்தப்படுவர். குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பப் பத்திரத்தில் பாடசாலையின் பெயர் குறிப்பிட வேண்டும் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஒரு சில சர்வதேச பாடசாலைகளில் கோரப்பட்டிருந்தது என்பதும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய மேலே குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் முதல் தடவை பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரி கல்வி கற்கும் பாடசாலையை குறிப்பிடாத காரணத்தால் நாட்டில் ஒரு வருடத்தில் பாடசாலை விண்ணப்பதாரியாக தோற்றும் மாணவர் எண்ணிக்கை தொடர்பிலான சரியான தரவுகளை பேணி செல்வதற்கு அது தடையாக உள்ளது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 3.3.7 சர்வதேசப் பாடசாலைகளில் கட்டணம் அறவிடப்படும் முறைமை

#### 3.3.7.1 கட்டணம் அறவிடப்படுதல் தொடர்பான முறைபாடுகள்

ஒவ்வொரு சர்வதேச பாடசாலைகளிலும் அறவிடப்படும் கட்டணங்கள் வேறுபட்டவை என்பதுடன் அவை அறவிடப்படும் முறைமைகளிலும் ஒருசில நடைமுறை சிக்கல்கள் ஏற்படுகின்றது என்பது பெற்றோர்களின் முறைப்பாடுகளுக்கமைய அவதானிக்கப்பட்டது. அதாவது அறவிடப்படும் பாடசாலைக் கட்டணங்களுக்கு ஏற்ற வகையில் கற்பிக்காமை, வகுப்பு கட்டணங்களை செலுத்துவதற்கு தாமதமாகும் போது பிள்ளைகளுக்கு கொடூரமான வகையில் தண்டனைகளை வழங்குதல், பாடசாலை கட்டணங்களுக்கு மேலதிகமாக பல்வேறு நடவடிக்கைகளுக்கு பணம் அறவிடுதல், தன்னிச்சையாக பாடசாலை கட்டணங்களை அறவிடுதல், பாடசாலை கட்டணங்களை செலுத்தத் தவறும் பிள்ளைகளின் பாடசாலை மாணவர் செயல்திறன் சுட்டியை (விலகல் சான்றிதழ்) பெற்றுக் கொடுக்காமை பொன்ற காரணிகளுக்கு தொடர்ச்சியாக கல்வி அமைச்சிடம் எழுத்து மூலம் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தன. மாதிரி பரீட்சிப்பின் போது அவ்வாறான 05 நிகழ்வுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### 3.3.7.2. கொரோனா தொற்று நோய்க் காலத்தில் பாடசாலை கட்டணங்கள் அறவிடுதல் தொடர்பான சிக்கல்கள்

கொரோனா தொற்று நோய்க் காலத்தில் சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் தவணை கட்டணம் அறவிடுதல் நியாயமான முறை இல்லை என குறிப்பிட்டு பெற்றோர்களினால் கல்வி அமைச்சிற்கு பல்வேறு முறைப்பாடுகள் அனுப்பப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) ஹட்டனில் அமைந்துள்ள சர்வதேச பாடசாலையொன்றின் பெற்றோர்கள் 2020 செப்டெம்பர் 04 ஆம் திகதி மேன்மைதங்கிய ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளதாவது அந்தப் பாடசாலையில் பௌதீக மற்றும் மனித வளங்களின் குறைபாடு போன்றே கொரோனா தொற்றுநோய் நிலவிய காலத்தில் பாடசாலை மூடப்பட்டிருந்த போதிலும் (2020 ஏப்பிரல் / மே / ஜூன்) பிள்ளைகளின் பாடசாலை கட்டண அறவீட்டில் நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதும், கட்டணம் செலுத்தாத பிள்ளைகளை பாடசாலைக்கு வருவதற்கு அனுமதிக்கவில்லை என்பதுமாகும்.

(ஆ) மற்றொரு சர்வதேச பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் 2020 செப்டெம்பர் 12 ஆம் திகதி கல்வி அமைச்சிடம் செய்யப்பட்டிருந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளுள் கல்வி அமைச்சினால் கொரோனா தொற்றுநோய் காலப்பகுதியில் பாடசாலை கட்டண நிவாரணம் தொடர்பில் அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் பாடசாலை முகாமைத்துவம் அதனை கவனத்தில் கொள்ளாது புறக்கணித்திருந்தது என்பதாகும்

### 3.3.7.3 சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடுகள் கிடைத்தல்

2020 மார்ச் 15 ஆம் திகதி தொடக்கம் 2021 மார்ச் 05 ஆம் திகதி வரையான கொரோனா தொற்று நோய்க் காலப்பகுதியினுள் சர்வதேசப் பாடசாலைகளில் கட்டணம் அறவிடுதல் தொடர்பில் சிரமத்திற்கு உள்ளான பெற்றோர்களினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் 11 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் அதில் 03 முறைப்பாடுகள் மட்டுமே தீர்க்கப்பட்டிருந்தது. அதற்கமைய 08 பாடசாலைகளுக்கு அண்ணளவாக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| திகதி | முறைப்பாட்டு இலக்கம் |
|---|---|
| 2021.03.29 | PP/21/03/04/2688 |
| 2021.04.01 | CC/21/03/975/5/2813 |
| 2021.02.11 | CH/ 21/2/61/5/1184 |
| 2021.03.30 | CC/21/03/978/05/2816 |
| 2021.01.09 | CC/21/01/195/5/241 |
| 2021.03.11 | CH/20/08/19/4/5120 |
| 2021.02.09 | CC/21/2/058/4/1093 |
| 2021.01.25 | CC/21/1/668/4/598 |
| 2021.01.26 | CC/21/1/593/4/540 |
| 2021.02.09 | CC/21/2/114/5/1154 |
| 2020.08.27 | CC/20/8/629/4/5443 |

அதற்கமைய இவ்வாறு முறைப்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது இந்த சிக்கல்களில் பாதிப்பிற்கு உள்ளான சிறு தரப்பினர் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதால் பொதுவாக சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் இவ்வாறான சிக்கல்கள் நிலவக்கூடும் எனும் வாதத்தினை இதன்மூலம் நிராகரிக்க முடியாது.

### 3.3.8 பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தைப் பேணுதல்

#### 3.3.8.1. பாடசாலை சுகாதார வேலைத் திட்டம் தொடர்பில் பொதுவான நிலைமை

சுகாதார அமைச்சினால் 2016 சனவரி 06 ஆம் திகதி இடப்பட்ட பொது சுற்றறிக்கை இலக்கம் 01-37/2007(1) இற்கு அமைய அனைத்து பாடசாலை பிள்ளைகளுக்கும் பாடசாலையினுள் சுகாதார சேவையை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு கட்டுப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய வைத்திய பரிசோதனை மேற்கொள்ளுதல், ஊனமுற்ற பிள்ளைகளுக்கு சிகிச்சை வழங்கி குணப்படுத்தல், தேவையான நிபுணத்துவ சேவையினை பரிந்துரைத்தல், தொடர் நடவடிக்கை எடுத்தல் போன்றவை பாடசாலை சுகாதார வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள சுகாதார மேம்பாட்டு முறைமைகள் கல்வி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ், நாடு முழுவதிலும் உள்ள அனைத்து பாடசாலைகள், விசேட கல்வி அலகுகள், பிரிவென மற்றும் தனியார் பாடசாலைகளுக்கு அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- சுகாதார மேம்பாட்டுக் கொள்கையினைத் தயாரித்தல்
- சுகாதார மேம்பாட்டிற்கு தேவையான திறன்களின் அபிவிருத்தி
- சுகாதார மேம்பாட்டிற்கு சாதகமான சூழலை உருவாக்குதல்
- சுகாதார மேம்பாட்டிற்கு பாடசாலை சமூக பிணைப்பினை அபிவிருத்தி செய்தல்
- சுகாதார மேம்பாட்டிற்கு தேவையான சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்

பாடசாலை சுகாதார வேலைத் திட்டத்திலிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் எதிர்பார்க்கப்பட்டுள்ளன.

- பாடசாலை சுகாதார மேம்பாடுகளில், கல்வி மற்றும் சுகாதார துறைகளில் உள்ள ஒத்துழைப்பு மற்றும் தொடர்பினை வலுப்படுத்தல்.
- பாடசாலைப் பிள்ளைகளின் முழுமையான மேம்பாடு மற்றும் அபிவிருத்திக்கு தேவையான சந்தர்ப்பங்களை அறிந்து கொள்ளுதல்
- பொருத்தமான சுகாதார மேம்பாட்டு செயற்பாடுகள் மூலம் பாடசாலைப் பிள்ளைகளுக்கு தமது ஆரோக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கு உள்ள திறமையினை அபிவிருத்தி செய்தல்.
- குடும்பம் மற்றும் சமூகத்தில் ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதற்கான நிலைமாற்ற கர்த்தாவாக நடவடிக்கை எடுப்பதற்கு பாடசாலைப்ப பிள்ளைகளுக்குள்ள திறனை அபிவிருத்தி செய்தல்
- கற்றல் மற்றும் கற்பித்தலுக்கு பொருத்தமான வகையில் பாடசாலை சூழுலை ஆரோக்கியமானதாகவும் மற்றும் பாதுகாப்பானதாகவும் தயார்படுத்தல்
- தொற்றக்கூடிய மற்றும் தொற்றாத நோய்களிலிருந்து பாடசாலை பிள்ளைகளைப் பாதுகாத்தல்
- சுகாதார சிக்கல்களை முடிந்தளவு விரைவில் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு பாடசாலைப் பிள்ளைகளை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல்
- வழமையான ஆய்வுகள் மற்றும் பொருத்தமான தலையீடுகள் மூலம் பாடசாலைப் பிள்ளைகளில் ஊட்ட நிலைமையை அதிகரிப்பு செய்தல் மற்றும் சிறந்த சுகாதார பழக்கங்களை கடைப்பிடித்தல்
- பாடசாலை சுகாதார நடவடிக்கை அபிவிருத்திக்கு அதிகபட்ச மக்களின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்ளுதல்
- பாடசாலை சுகாதார வேலைத் திட்டத்தினை வெற்றிகரமாக்குவதற்காக ஒழுங்குறுத்தல் மற்றும் மதிப்பீட்டு செயற்பாடுகளை நடாத்திச் செல்லுதல்

மாகாண மட்டத்தில் அந்தப் பொறுப்பினை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமும், மாவட்ட மட்டத்தில் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாடசாலை சகாதார வேலைத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்தில் தாய் சேய் சுகாதார வைத்திய உத்தியோகத்தர்கள், பிரதேச மட்டத்தில் சுகாதார வைத்திய உத்தியோகத்தர்கள் (நகரசபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் பிரதான வைத்திய அதிகாரிகள் / பாடசாலை வைத்திய அதிகாரிகள்) ஆகியோர் மத்திய பொறுப்பினை வகிக்கும் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கண்காணிப்பில் பாடசாலையினுள் பாடசாலை சுகாதார வேலைத் திட்டத்தினை ஏற்பாடு செய்யும் பொறுப்பு பொது சுகாதார பரிசோதகரின் வசம் உள்ளது. இந்த வேலைத் திட்டத்தினை அரசின் அனைத்து பாடசாலைகள் மற்றும் பிரிவென பாடசாலைகளிலும் தனியார் பாடசாலைகளிலும் (துணைப் பாடசாலைகள்), செயற்படுகின்றது எனினும் ஒரு சில சர்வதேச பாடசாலைகளில் செயற்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டம் 23 மூலப்பிரமாணங்களின் கீழ் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. விபரங்கள் இணைப்பு 02 இல் காட்டப்பட்டுள்ளது.

### 3.3.8.2 சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் சுகாதார பிரிவின் ஒழுங்குறுத்தல்

சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தின் சுகாதார பணிப்பாளரின் இலக்கம் FHB/SH/Gen/2020 கொண்ட 2020 செப்டெம்பர் 7 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்திற்கு அமைய பாடசாலை வைத்திய பரிசோதனைக்கான கோரிக்கையினை விடுத்துள்ள பாடாசாலைகளில் மட்டும் வைத்திய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனினும் சுகாதார அமைச்சின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாடசாலை சுகாதார வேலைத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01-37(2007(i)) இன் ஊடாக அனைத்து பாடசாலைப் பிள்ளைகளுக்கும் சுகாதார சேவையினை வழங்குவதற்கு சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) பாடசாலை வைத்திய பரிசோதனைக்கு கோரிக்கை விடுத்துள்ள சர்வதேச பாடசாலைகள்**

சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் ஒழுங்கான தரவு ஒழுங்கமைப்பு இல்லை எனினும், கல்வி அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டுள்ள சர்வதேச பாடசாலைகளின் எண்ணிக்கை 391 ஆக உள்ளதுடன், சுகாதார அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் பாடசாலை வைத்திய பரிசோதனைக்கு விண்ணப்பித்துள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 151 மட்டும் அகும்.

அதற்கமைய இது மிகக் குறைந்த பெறுமதி அதாவது மொத்த பாடசாலை எண்ணிக்கையில் 40 சதவீதம் மட்டுமே என்பது அவதானிக்கப்பட்டது.

| | மாவட்டம் | கல்வி அமைச்சின் தரவுக்கு அமைய சர்வதேச பாடசாலைகளின் எண்ணிக்கை | பாடசாலை வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) | கொழும்பு | 98 | 07 |
| (ii) | கம்பஹா | 79 | 09 |
| (iii) | கண்டி | 44 | 35 |
| (iv) | மாத்தளை | 12 | 15 |
| (v) | மாத்தறை | 9 | 04 |
| (vi) | அநுராதபுரம் | 3 | 03 |
| (vii) | பொலன்னறுவை | 1 | 03 |
| (viii) | குருணாகல் | 28 | 0 |
| (ix) | மன்னார் | 2 | 0 |
| (x) | யாழ்ப்பாணம் | 3 | 04 |
| (xi) | வவுனியா | 4 | 02 |
| (xii) | அம்பாறை | 3 | 02 |
| (xiii) | மட்டக்களப்பு | 3 | 02 |
| (xiv) | களுத்துறை | 16 | 02 |
| (xv) | காலி | 13 | 09 |
| (xvi) | ஹம்பந்தோட்டை | 0 | 01 |
| (xvii) | நுவரெலியா | 13 | 15 |
| (xviii) | பதுளை | 6 | 10 |
| (xix) | மொனராகலை | 0 | 0 |
| (xx) | இரத்தினபுரி | 13 | 13 |
| (xxi) | கல்முனை | 0 | 01 |
| (xxii) | கிளிநொச்சி | 0 | 01 |
| (xxiii) | கேகாலை | 17 | 10 |
| (xxiv) | புத்தளம் | 19 | 0 |
| (xxv) | திருகோணமலை | 5 | 03 |
| | | 391 | 151 |

மேற்படி தகவல்களுக்கமைய மாத்தளை, மொனராகலை, அம்பாந்தோட்டை, பொலன்னறுவை, யாழ்ப்பாணம், நுவரெலியா, பதுளை, கல்முனை மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் காணப்படும் சர்வதேச பாடசாலைகள் அனைத்தும் கல்வி அமைச்சினால் அறிந்து கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதே போன்று சர்வதேச பாடசாலைகள் பெரும்பாலும் காணப்படும் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் நடாத்தப்பட்டு வரும் 177 சர்வதேச பாடசாலைகளில் பாடசாலை சுகாதார பரிசோதனை

மேற்கொள்ளப்பட்டுள்ளது மிகக் குறைந்த அளவான 16 பாடசாலைகளில் மட்டுமே ஆகும். அதே போன்று சுகாதார அமைச்சினால் குருணாகலை, மன்னார் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் எந்த விதமான சர்வதேச பாடசாலையிலும் பாடசாலை சுகாதார பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) சர்வதேச பாடசாலைகளில் நீர் விநியோகம்**

இது தொடர்பில் சகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைய பின்வரும் மூலப்பிரமாணங்கள் ஊடாக பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- நீர் வழங்கல் ஆதாரம் (Water Supply -Source)
- நீர் மாதிரிகளை பெற்றுக் கொள்ளல்
- கிடைக்கப்பெற்ற நீரின் பகுப்பாய்வு அறிக்கை
- நீர் விநியோகம் (Water Adequacy)
- நீர் விநியோக்தின் பாதுகாப்பு
- குடிநீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை (Water Supply Availability)
- குடிநீர் வழங்கல் அளவிடப்பட்ட எண்ணிக்கை

சுகாதார அமைச்சு கணக்காய்விற்கு பெற்றுக் கொடுத்த தகவல்களுக்கு அமைய பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(i) பாதுகாப்பற்ற கிணறுகள் மூலம் நீரைப் பெற்றுக் கொள்ளுதல்**

சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைய பரீட்சிப்பக்கு உட்படுத்தப்பட்ட 151 சர்வதேச பாடசாலைகளில் 2 பாடசாலைகள் பாதுகாப்பற்ற கிணறுகள் மூலம் நீரினை பெற்றுக் கொள்ளும் பாடசாலைகள் என அவதானிக்கப்பட்டு இருந்தது. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| மாவட்டம் | பொ.சு.ம. பிரிவு |
|---|---|
| கம்பஹா | கல்எலிய |
| பதுளை | பண்டாரவளை |

**(ii) நீர் விநியோகம் பாதுகாப்பற்று இருத்தல்**

சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைய பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்ட 151 பாடசாலைகளில் 05 பாடசாலைகளில் நீர் விநியோகம் பாதுகாப்பற்று இருந்தமை அவதானிக்கப்பட்டு இருந்தது. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| மாவட்டம் | பொ.சு.ம. பிரிவு |
|---|---|
| பொலனறுவை | தம்பள |
| கண்டி | கலஹா |
| கேகாலை | அல்கம |
| இரத்தினபுரி | இறக்குவானை |
| இரத்தினபுரி | எரத்த |

**(இ) சர்வதேச பாடசாலைகளில் கழிப்பறை வசதிகள்**

சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைய 152 சர்வதேச பாடசாலைகளில் கழிப்பறை வசதிகளின் பரீட்சிப்பின் போது 12 பாடசாலைகளில் காணப்படும் கழிப்பறைகள் போதுமானதாகவில்லை என்பதும், அங்கு போதிய அளவில் நீர் வசதிகள் இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டு இருந்தது.

**(ஈ) சர்வதேச பாடசாலைகளில் கழிவு முகாமைத்துவம் மற்றும் சுற்றாடற் காரணிகள்**

சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைய 152 சர்வதேச பாடசாலைகளில் கழிவு முகாமைத்துவம் மற்றும் ஏனைய சுற்றாடற் காரணிகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(i) முறையாகக் கழிவுகளை அகற்றாத பாடசாலைகள்**

முறையாக கழிவுகளை அகற்றாத 13 பாடசாலைகள் அவதானிக்கப்பட்டு இருந்ததுடன் இதன் காரணமாக மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் பல சுற்றாடல் சிக்கல்கள் ஏற்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ii) பரீட்சிப்பு செய்யப்பட்ட 152 பாடசாலைகளில் பாடசாலை சூழல் தொடர்பில் சுகாதார அமைச்சின் பரிந்துரைகள் பின்வருமாறு ஆகும்.

- நுளம்புகள் பரவக்கூடிய இடங்களை கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை - 09

- ஈக்கள் பரவும் இடங்கள் காணப்பட்ட பாடசாலை எண்ணிக்கை - 06
- விபத்துக்கள் ஏற்படக்கூடிய இடங்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை - 10
- சுதந்திரமாகத் திரியும் விலங்ககளை கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை – 27
- விளையாட்டு முற்றம் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை - 36
- வீட்டுத் தோட்டம் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை - 44
- சுத்தமான சூழல் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை - 07

**(உ) சர்வதேச பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலை**

152 சர்வதேச பாடசாலைகளில் சுகாதார ரீதியான தரவுகளை பரீட்சிக்கும் போது அதில் 66 பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலைகள் இல்லை என்பதை சுகாதார பிரிவு உறுதிப்படுத்தியுள்ளதுடன், பாடசாலை சிற்றுண்டிச்சாலை கொள்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்காத பாடசாலைகளின் எண்ணிக்கை 37 ஆகும்.

**(ஊ) சர்வதேச பாடசாலைகளில் விளையாட்டு மைதான வசதிகள்**

பாடசாலை பிள்ளையின் உடல், உள ஆரோக்கியத்திற்கு விளையாட்டு அத்தியாவசியமான கருவியாகும். மைதானம் மற்றும் விளையாட்டு அரங்கு என்பன பாடசாலையில் இருக்க வேண்டிய அத்தியாவசிய காரணிகளாகும். ஆயினும் சர்வதேச பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு விளையாடுவதற்கு விளையாட்டரங்கு வசதிகள் காணப்படுகின்றன என்பதற்கு கல்வி அல்லது சுகாதார பிரிவினால் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கமைய அந்தப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு அந்தந்த வயதுகளுக்கு ஏற்ற தேவையான உடல் செயற்பாடுகள் கிடைக்காத காரணத்தால் எதிர்கால சந்ததியினர் இடையே, தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன என்பது மேலதிகமாக அவதானிக்கப்பட்டது.

**3.3.8.3 கொவிட் 19 தொற்று நோய்க் காலத்தில் அறிவுரைகளை பின்பற்றல்**

கொவிட் 19 நோய்த்தொற்று காலப்பகுதியினுள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கெதிராக முரணாக நடவடிக்கை எடுத்த சர்வதேச பாடசாலைகள் உள்ளன என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாகக் கொள்ளுமிடத்து நீர்கொழும்பு பிரதேசத்தில் சர்வதேச பாடசாலை ஒன்றின் ஆசிரியர்கள் 2020 ஒக்தோபர் 06 ஆம்

திகதி கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைகள் பிரிவிற்கு கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காணப்படும் பிரதேசங்களில் இருந்து சேவைக்கு சமூகமளிப்பதாக தெரிவித்திருந்தனர்.

**3.3.9 சர்வதேச பாடசாலை மாணவர்களை சுரஷா காப்புறுதிக்கு பங்களிப்பு செய்வித்தல்**

சர்வதேச பாடசாலைகள் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக கல்வி அமைச்சு எதுவிதமான தலையீட்டினையும் செய்யாத போதிலும் அரச வரவு செலவு யோசனைக்கு அமைய அரச பாடசாலை பிள்ளைகளுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட சுரஷா வைத்திய காப்புறுதி முறைமையை மட்டும் அந்தப் பாடசாலைகள் தொடர்பிலும் செய்துள்ளது. இந்த சர்வதேச பாடசாலைகள் நிச்சயமான வகையில் காணப்படுகின்றனவா என்பது தொடர்பில் பௌதீக பரீட்சிப்பு மேற்கொள்ளப்படாத போதிலும், புள்ளிவிபர பெறுமதியை மட்டும் பெற்றுக் கொடுத்து இருந்த 308 சந்தர்ப்பங்களில் ரூபா.13,561,516 தொகையினை 64 சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இழப்பீட்டுத் தொகையினை பெற்றுக்கொடுத்திருந்தது.

**3.3.10 சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் கிடைக்கப்பெறும் பிரதிநிதித்துவம்**

சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் பெற்றோர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர்களால் தெடர்ந்தும் எழுத்துமூல முறைபபாடுகளில் தலையிடுவதற்கு கல்வி அமைச்சிற்கு முறையான அதிகாரம் இல்லை என்பதால் குறித்த பாடசாலை அதிபர் / முகாமைத்துவத்தினை விளித்து ஏதேனும் அறிவுரை பெற்றுக் கொடுத்தல் மட்டும் செய்யப்படுவதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இருந்த போதிலும் அந்த அறிவுறுத்தல் பெற்றுக் கொடுத்தல் மூலம் நிலவும் சிக்கல்கள் திருத்தப்படவில்லை என்பது மேலே குறிப்பிடப்பட்ட அத்தியாயங்களில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்பின் மூலம் தெளிவுபடுகின்றது.

**3.3.10.1 சர்வதேச பாடசாலைகளில் கற்கும் பிள்ளைகளுக்கு ஏற்படும் உடல் / உள ரீதியான தொல்லைகளில் கல்வி அமைச்சின் தலையீடு**

விபரங்கள் பின்வருமாறு

(அ) பல்வேறு சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாடசாலை முகாமைத்துவம் / ஆசிரியர்களினால் ஏற்படும் உடல் / உள ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் தொல்லைகள் தொடர்பில் பெற்றோர்களினால் தொடர்ந்தும் கல்வி அமைச்சின் தனியார் பாடசாலை பிரிவிற்கு முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தன. இந்த முறைப்பாடுகள் சமர்ப்பித்தலின் மூலம் அந்தப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு ஏற்பட்ட தவறான நடத்தைகளுக்கு ஏதேனும் சட்ட ரீதியான பாதுகாப்பு / நிவாரணத்தை எதிர்பார்த்து இருந்ததுடன் எதிர்காலத்தில் ஏனைய பிள்ளைகளக்கும் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படாது இருப்பதற்கு

பொருத்தமான சூழலையும் எதிர்பார்த்திருந்தனர். ஆயினும் கல்வி அமைச்சினால் அவ்வாறான சிக்கல்களில் தலையிடுவதற்கு சட்ட ரீதியான ஏற்பாடுகள் இல்லை என்பதை தெரிவித்துக் குறித்த பாடசாலைகளுக்கே முறைபாட்டினை தீர்த்துக் கொள்வதற்கு அனுப்புதல் அல்லது குறித்த அரச நிறுவனத்திற்கு முறைப்பாட்டினை அனுப்புதல் மட்டுமே இடம்பெற்றிருந்தது.

(ஆ) இவ்வாறான முறைப்பாடுகளுக்கு உதாரணமாக 2020 செப்டெம்பர் 23 ஆம் திகதி சர்வதேச பாடசாலையொன்றின் 2300 க்கும் அதிகமான பெற்றோர் தொகையினால் கல்வி அமைச்சுக்கும் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கும் தற்போதைய முகாமைத்துவத்தின் சீரற்ற நடத்தை காரணமாக அங்குள்ள பிள்ளைகளுக்கு பாலியல் தொந்தரவு, துன்புறுத்தல், அச்சுறுத்தல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் போன்றவை இடம்பெறுவதால் அவை தொடர்பில் தலையிடுமாறு அறிக்கை இடப்பட்டிருந்தது.

(இ) இது தொடர்பில் கல்வி அமைச்சின் தனியார் பாடசாலை பிரிவின் 2020 மற்றும் திசெம்பர் மற்றும் திகதியிடப்பட்ட இலக்கம் ED/03/10/02/02/23(iii) கொண்ட கடிதத்தில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் நாயகத்தை விளித்து இந்த பிரச்சனைகளுக்கு தொடர்புபட முடியாது என்பதால் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அனுப்பப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய நிலவும் பிரச்சனைகளில் கல்வி அமைச்சிற்கு செய்யக்கூடிய தலையீடு குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.3.10.2 சர்வதேச பாடசாலைகள் தொடர்பான வேறு முறைப்பாடுகள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சனைகளுக்கு மேலதிகமாக சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் பல்வேறு வகையிலான எழுத்துமூல பொது முறைப்பாடுகள் கிடைத்துள்ளது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதில் எழுத்துமூல பிரதிநிதித்துவம் அனுப்பப்பட்ட பாடசாலைகளில் பிள்ளைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் அவற்றை நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய அவ்வாறான 11 பாடசாலைகள் தொடர்பில் எழுத்துமூல பிரதிநிதித்துவம் கிடைத்திருந்தது. அதில் பெரும்பாலான எழுத்துமூல முறைப்பாடுகள் பிள்ளைகளை மனிதாபிமானமற்ற முறையில் நடாத்துதல், ஒழுக்காற்று காரணிகள் தொடர்பில் மற்றும் வேறு வசதிகள் தொடர்பிலான சிக்கல்கள் ஆகும்.

### 3.3.10.3 சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் கல்வி அமைச்சுக்கு ஆசிரியர்களிடமிருந்து / ஊழியர்களிடமிருந்து கிடைத்த எழுத்துமூல பொது முறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 10 வருடங்களுக்கு அதிகக் காலம் சேவையாற்றியவர்களை சேவையில் உறுதிப்படுத்தவில்லை எனவும், சம்பள உயர்வு வழங்கப்படவில்லை எனவும் திடீரென சேவையிலிருந்து நீக்கப்படுபவர் எனவும் நுகேகொடை சர்வதேச பாடசாலையின் ஊழியர் ஒருவர் 2018 மே 04 ஆம் திகதி கல்வி அமைச்சுக்கு தெரிவித்துள்ளதுடன் அந்த சர்வதேச பாடசாலை வலையமைப்பில் ஊழியர் சம்பளம் அது எனவும், உடன்படிக்கை கையெழுத்து இடுகையில் நியாயமற்ற பிரிவுகளை உள்ளடக்கி இருத்தல், குறைந்தபட்ச மகப்பேற்று வசதிகள், வைத்திய பலன்கள் இல்லாமை தொடர்பில் ஆசிரியர்களும் முறைப்பாடு செய்திருந்தனர்.

(ii) கவர் வீதி, கொழும்பு 05 இல் அமைந்துள்ள சர்வதேச பாடசாலையொன்றில் தகைமைகள் அற்ற ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்துள்ளதுடன், அவர்களுக்கு நியமன கடிதமேனும் முறையாக வழங்கப்படவில்லை எனவும், கடமை நேரங்கள் முறையாக இல்லை என்பதுடன், அனைத்து விடுமுறை நாட்களிலும் கூட சேவைக்கு அழைக்கப்படுகின்றனர் எனவும், முறையான கொடுப்பனவு, சம்பளம், பதவி உயர்வு போன்ற ஊழியர் பலன்களை செலுத்துவதில்லை எனவும் கல்வி அமைச்சுக்கு எழுத்துமூலம் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 3.3.11 சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் ராஜதந்திர மட்டத்தில் உள்ள ஆர்வம்

இந்த நாட்டில் வசிக்கும் பல்வேறு தரத்திலான வெளிநாட்டு மக்களின் பிள்ளைகள் கல்வியை கற்கும் நிறுவனம் உள்ளிட்ட சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் பல்வேறு இராஜதந்திர மட்டத்தில் கல்வி அமைச்சில் தொடர்ந்தும் விசாரணை செய்யப்படுகின்றது. ஆயினும் கல்வி அமைச்சில் அதற்கு தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகள் இல்லை எனக் கூறி ஆக்கபூர்வமாக தலையிடுவதில்லை. இந்த நிலைமை இராஜதந்திர மட்டத்தில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களில் இலங்கையின் நற்பெயருக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பது கணக்காய்வின் கருத்தாகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) கொழும்பு துறைமுக நகரத்தில் சர்வதேச பாடசாலையினை நிர்மாணித்தல்**

''அரச தனியார் கூட்டு முயற்சி (PPP) மூலம் கொழும்பு துறைமுக நகரத்தில் அரசு மீட்டெடுத்த காணியில் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு மத்திய நிலையம், சர்வதேச பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் போன்றவற்றின் உடனடி அபிவிருத்தி செயல்களுக்கு வழிவகுக்கும் முதலீடுகளை தேடும் யோசனை'' எனும் தலைப்பில் மாநகரசபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் 2019 ஆகஸ்ட் 19 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைய அமைச்சரவை அலுவலகத்தினால் CP19/2388/116/016-II இலக்கம் கொண்டதும் 2019 ஆகஸ்ட் 27 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் கல்வி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேலே குறிப்பிட்ட அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரத்தில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள சர்வதேச பாடசாலை தொடர்பில் கல்வி அமைச்சு செயலாளரின் பரிந்துரை கோரப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்திற்கு பதில் தெரிவித்து கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைகள் பிரிவுப் பணிப்பாளரினால் கல்வி அமைச்சு பணிப்பாளருக்கு (திட்டமிடல்) தெரிவித்துள்ளதாவது இந்த காரணி தொடர்பில் முதலீட்டு சபையிடம் (BOI) கருத்தினை பெற்றுக்கொள்வது பொருத்தமானது என்பதாகும். அதற்கமைய இவ்வாறான சர்வதேச நடவடிக்கைகளிலும் கூட கல்வி செயல்பாடுகள் தொடர்பில் கல்வி அமைச்சுக்கு தலையிட முடியாது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பாகிஸ்தானிய இஸ்லாமிய குடியரசின் உயர் ஆணையாளர் அலுவலகத்தினால் 2018 யூலை 10 ஆம் திகதி இந்நாட்டு சர்வதேச பாடசாலைகளினால் தேசியத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) அறவிடுவதிலுள்ள சட்டரீதியான பலவீனங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 3.3.12 சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் பல்வேறு அரச நிறுவனங்களின் மூலம் விடுவிக்கப்பட்ட கோரிக்கைகள்

பல்வேறு காரணிகள் தொடர்பில் அரச நிறுவன மட்டத்தில் சர்வதேச பாடசாலைகள் தொடர்பாக கல்வி அமைச்சிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் கருதப்படுவதாவது சர்வதேச பாடசாலைகளை தாபித்தல், நடாத்திச் செல்லுதல் தொடர்பில் நிச்சயிக்கப்பட்ட அதிகார சபையானது கல்வி அமைச்சு என்பதனை அனைத்து சமூகமும் நம்புகின்றது என்பதாகும். ஆயினும் இந்த அனைத்து விசாரணைகளிலும் கல்வி அமைச்சு தனது தலையீடு இல்லை என்பதனை அந்தந்த நிறுவனங்களுக்கு பதிலாக பெற்றுக் கொடுத்து இருந்தபோதிலும் உறுதியான பதில்

அல்ல என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. சமர்பிக்கப்பட்டுள்ள அவ்வாறான கோரிக்கைகள் பல கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) 2018 மே 03 ஆம் திகதி ஜனாதிபதி விசேட செயற்றிட்ட பணிப்பாளரினால் கல்வி செயலாளரை விளிக்கும் கடித்திற்கு அமைய சர்வதேச பாடசாலை ஒன்று வாடகை அடிப்படையில் இருந்து விடுபட்டு வெலிவிட்ட பிரதேசத்தில் தமக்கான கட்டடத்தை நிர்மாணிக்கும் போது நகர அபிவிருந்தி அதிகார சபையினால் கல்வி அமைச்சிடமிருந்து தடை நீக்கல் (Clearance) சான்றிதழை கோரியமை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நீர்கொழும்பில் அமைந்துள்ள சர்வதேச பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் இருவரை வகுப்புத்தடை செய்தமை தொடர்பில் 2018 மே 18 ஆம் திகதி பாதிக்கப்பட்டவர்கள ்மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையினால் கல்வி அமைச்சை விளித்திருந்தது.

(இ) தகவல் அறிந்துகொள்ளும் சட்டத்தின் கீழ் பெற்றோரினால் 2019 ஒக்தோபர் 15 ஆம் திகதி தகவல்கள் அறிந்து கொள்ளும் சட்டத்தின் கீழ் கொழும்பு பிரதேசத்தில் சர்வதேச பாடசாலைகளின் தரத்தினை பரீட்சிக்கும் மூலப்பிரமாணங்கள் தொடர்பிலும் மற்றும் கண்காணிப்பு அறிக்கையும் கேட்கப்பட்டிருந்தது.

(ஈ) சிறுவர் உரிமை மீறல் தொடர்பில் 2020 செப்தம்பர் 18 ஆம் திகதி பெற்றோர் ஒருவரினால் கல்வி அமைச்சின் தனியார் பாடசாலை பிரிவிடம் விடுக்கப்பட்டிருந்த கோரிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது கேகாலை தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் இரட்டை பிள்ளைகளை கேகாலை சர்வதேச பாடசாலைக்கு அனுமதிக்கும் போது 7 ஆவது வகுப்பிற்கு அனுமதிக்கப்பட வேண்டிய இரட்டை பிள்ளைகளில் ஒரு பிள்ளையினை 5 ஆம் வகுப்பில் அனுமதித்து உள்ளனர் என்பதால் இது தொடர்பில் கேகாலை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டிருந்தது என்பதாகும்.

எவ்வாறு இருப்பினும் சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் பொது முறைப்பாடு கிடைக்கப் பெற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கல்வி அமைச்சின் பதிலாக இருந்தது அவர்களுக்கு அதற்கான தலையீட்டை மேற்கொள்ள முடியாது என்பதாகும். அதற்கமைய இவ்வாறான பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்கு ஒழுங்கான பொறிமுறை ஒன்று இல்லாததால் அந்த பிரச்சனைகள் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றது.

### 3.4 சமயப் பாடசாலைகள்

#### 3.4.1 கல்வியின் தேவைப்பாடு

இந்த அறிக்கையில் 3.1 பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் கல்வி கட்டளைச் சட்டத்திற்கு அமைய அனைத்து பெற்றோர்களும் கட்டாயம் 5-14 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்கு பாடசாலை கல்வியை பெற்றுக் கொடுக்க வேண்டும். அதே போன்று ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் உடன்படிக்கைக்கு அமையவும் சர்வதேச மட்டத்தில் அனைத்து பிள்ளைகளும் அனுபவிக்க வேண்டிய உரிமைகளை உறுதிப்படுத்தல் பெரிவர்களினது போன்றே அரசாங்கத்தினதும் கடமை என்பது அழுத்தமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையில் 28 ஆவது பிரிவுக்கு அமைய கல்வியை பெற்றுக் கொள்வதற்கு அனைத்து பிள்ளைகளுக்கும் உரிமை உள்ளது. குறைந்தபட்சம் அடிப்படை கல்வியை கட்டாயப்படுத்தல், அதனை இலவசமாகப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அரசாங்கத்தின் பொறுப்பு என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று அதன் 29 ஆவது பிரிவுக்கு அமைய கல்வியின் குறிக்கோளானது பிள்ளையின் ஆளுமை, அறிவு, திறமை மற்றும் உள உடல் திறமைகளை முழுமையாக அபிவிருத்தி செய்தல் ஆகும். பொறுப்புமிக்க, அமைதியான சுதந்திரமான சமூகத்தில் வாழ்வதற்கும் ஏனைய மக்களின் உரிமையினை புரிந்து கொண்டு சூழலுக்கு மதிப்பளித்து வாழ்வதற்கும் கல்வியின் மூலம் பிள்ளைகள் தயார்படுத்தப்பட வேண்டும்.

அதேபோன்று 2016 ஆம் வருடத்தில் தயாரிக்கப்பட்டுள்ள முன்மொழியப்பட்ட பொதுக்கல்வி கொள்கைக்கு அமையவும், பிள்ளைகள் வாழும் சமூகம் அவர்களுக்கு திருப்தியான வாழ்க்கையை வாழுவதற்கும் மற்றும் பெரியோர்களுடன் இணைந்து உற்பத்தித் திறனாக செயற்படுவதற்கும் தயார்படுத்தி வைத்தல் பொதுகல்வியினால் செய்யப்படவேண்டும். அவர்கள் பாடசாலையை விட்டு விலகிச் செல்லும்போது உண்மையில் பெரிவர்களாக இருப்பதுடன் அவர்களின் குடும்பத்திற்கு, வாழும் சமூகத்திற்கு மற்றும் மொத்தத்தில் நாட்டின் நலனுக்காக பங்களிப்பினை வழங்கக்கூடியதான அறிவு மற்றும் ஏனைய திறமைகளில் பிள்ளைகள் கவனமாக இருத்தல் வேண்டும். ஆயினும், தற்போது இலங்கையில் ஒருசில சமய பாடசாலைகளில் கட்டாயக் கல்வியினை கற்கும் வயதில் உள்ள பிள்ளைகளுக்கு தரமான கல்வியினை வழங்கவில்லை என்பதும், அவ்வாறான நிறுவன ஒழுங்குறுத்தல் இல்லை என்பதும் பின்வரும் காரணிகளுக்கு அமைய அவதானிக்கப்பட்டது.

### 3.4.2 சமயப் பாடசாலைகளை வகைப்படுத்தல் (வார இறுதி நாட்களில் நடாத்தப்படும் அறநெறி பாடசாலை கல்வி தொடர்பில் இங்கு கலந்துரையாடப்படவில்லை)

இலங்கையில் சமய பாடசாலைகள் அடிப்படையில் பௌத்தம், இந்து, கத்தோலிக்க மறறும் முஸ்லிம் எனும் ரீதியில் சமயங்களை முன்னிலைப்படுத்தி நடாத்தி செல்லப்படுகின்றது. அதற்கமைய புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட தரவுகளுக்கு அமைய சமய பாடசாலைகளுக்கு பிள்ளைகள் இணைக்கப்பட்டுள்ள முறை பின்வருமாறு ஆகும்.

| சமயம் | நிறுவனங்களின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| பௌத்தம் - பிரிவென கல்வி (2019) | 801 | 68,319 |
| சீலமாதா நிறுவனம் | 03 | 45 |
| இந்து – பூசை செய்பவர்கள் சார்பில் | 03 | 40 |
| கத்தோலிக்கம் - கன்னியர் மடம், செமினரி | 04 | 16 |
| இஸ்லாம் - அரபு பாடசாலைகள் / மதரசா பாடசாலைகள் | 317 | 28,424 |

இந்த ஒவ்வொரு சமய கல்வி தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

#### 3.4.2.1 பௌத்த/ பிரிவென சமயக் கல்வி

பௌத்த நபர் ஒருவர் அர்ச்சகராக நியமிக்கப்படுவதற்கு வழங்கப்படும் கல்வி பிரிவென கல்வியாகும். பிரிவென கல்வி தொடர்பில் தாபிக்கப்பட்டுள்ள 1979 இன் 64 ஆம் இலக்க பிரிவென கல்விச் சட்டத்தின் நோக்கமாக பிக்குமார்களுக்கு மற்றும் பிரிவெனவில் நடாத்தப்படும் கல்விப் பாடத் திட்டத்தினை கற்க விரும்புவர்களுக்கு பௌத்த சூழலில் சுயமாக கல்வியைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பவர்களும் 14 வயதினை கடந்த ஆண் மாணவர்களுக்கு கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் பிரிவென கல்வியின் நோக்கமாகும். அதற்கமைய கல்வி அமைச்சினால் தாபிக்கப்பட்டுள்ள பிரிவென கல்வி அலகின் மூலம் இந்த பிரிவெனவின் நடவடிக்கைகள் நிர்வாகிக்கப்படுவதுடன் கல்வி அமைச்சின் தலையீட்டினால் தேசிய கல்வி நிறுவனத்தினால் பிரிவென பாடத் திட்டங்கள், ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் கையேடு என்பன தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பிரிவெனவை கண்காணிக்கும் பொறுப்பு கல்வி அமைச்சின் பிரிவென அலகினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலே கூறப்பட்ட காரணிகளுக்கு அமைய பௌத்த சமயம் தொடர்பில் நடாத்தப்பட்டு வரும் பிரிவென

கல்வி தொடர்பாக (முன்னர் கல்வி அமைச்சின் மூலம்) தற்போது குறித்த அரச அமைச்சு முறையான ஒழுங்குறுத்தலை மேற்கொள்வதற்கு கட்டுப்பட்டுள்ளது.

### 3.4.2.2 கத்தோலிக்க (செமினரி /கன்னியர் மடம்) கல்வியை பெற்றுக் கொடுக்கும் நிறுவனம்

கிறிஸ்தவ சமய அலுவல்கள்திணைக்களத்தினால் 2021 பெப்ரவரி 09 ஆம் திகதி இலக்கம் கிகதே/சங/ஏனைய/வா.ச.தி/2020-21 கொண்ட கடித்திற்கு அமைய நாடு முழுவதிலும் 4 கத்தோலிக்க தேவாலயங்கள் செயற்படுகின்றன என்பதும், இந்த கல்வி நிறுவனங்களில் சமய கல்வி வழங்கப்படுவது பொது கல்வியை பூர்த்தி செய்யும் வயது மட்டத்தில் உள்ளவர்களுக்காக என்பதும் வெளிப்படுத்தப்பட்டது.

### 3.4.2.3 இந்து கல்வியினை வழங்கும் நிறுவனங்கள்

இந்து சமயம் மற்றும் கலாசார விவகாரங்கள் திணைக்களத்தின் 2021 சனவரி 8 ஆம் திகதி இலக்கம் HA/5/GEN/39-2021 கொண்ட கடிதத்திற்கு அமைய நாடு முழுவதிலும் உள்ள இந்து சமய அர்ச்சகர்களுக்கு கல்வி வழங்கும் 03 நிறுவனங்கள் செயல்படுகின்றன என்பதும், இந்த கல்வி நிறுவனங்கள் சமய கல்வியை பெற்றுக் கொடுப்பது பொதுக் கல்வியை பூர்த்தி செய்த வயது மட்டங்களில் உள்ளவர்களுக்காக என்பதும் வெளிப்படுத்தப்பட்டது.

### 3.4.2.4 அரபு பாடசாலைகள் / மதரஸா பாடசாலைகள்

இந்த பாடசாலைகள் கல்வி அமைச்சின் ஒழுங்குறுத்தலின்றி கட்டாய கல்வி பெறவேண்டிய வயதில் உள்ள பிள்ளைகளுக்கு தீர்மானமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது கல்வியில் இருந்து விலகி செயற்படுகின்றது என்பதும், அடிப்படையில் அரபு மொழி மற்றும் இஸ்லாம் அறிவினை பெற்றுக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது என்பதும் வெளிப்படுத்தப்பட்டது.

**(அ) முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களத்தின் பங்களிப்பு**

முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களம் தாபிக்கப்படுவதற்கு முன்னர் அப்போதைய கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த அரபு பாடசாலைகளின் நிர்வாகம் 1980 ஆம் ஆண்டுகளில் முஸ்லிம் சமய அலுவல்கள்திணைக்களம் தாபிக்கப்பட்டதும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த திணைக்களத்தின் மூலம் இந்த நிறுவனத்தைப் பதிவு செய்கையில் அந்த நிறுவனத்திற்கு உள்ள பௌதீக வசதிகளின் அடிப்படையில் நிதி வலிமை, முகாமைத்துவ சபை, பாடத் திட்டம், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பான தகவல்கள், அப்பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளரின் அறிக்கை மூலம் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அரபு பாடசாலைகளில் கல்வி கற்கும்

மாணவர்களுக்கு 'அல்-ஆலிம்' பாட விதானத்திற்கான பாடத் திட்டம் 1961 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டு 1976 ஆம் ஆண்டில் மற்றும் 2012 ஆம் ஆண்டில் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சைகள் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும். 2020 ஆகஸ்ட் 13 ஆம் திகதி வரையிலும் இத்தகைய 317 பாடசாலைகள் முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தின் மூலம் இந்த பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 2015 - 2019 வரையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதி வழங்கப்பட்டிருந்தது.

| ஆண்டு | மாவட்ட எண்ணிக்கை | பாடசாலை எண்ணிக்கை | தொகை<br>ரூபா. |
|---|---|---|---|
| 2015 | 04 | 04 | 698,066 |
| 2016 | 04 | 04 | 100,000 |
| 2017 | 06 | 07 | 975,000 |
| 2018 | 05 | 06 | 2,600,000 |
| 2019 | 01 | 01 | 400,000 |
| | | ---- | ------------ |
| | | 22 | 4,773,066 |

**(ஆ) அரபு பாடசாலைகள் / மதரசா பாடசாலைகளின் விஸ்தரிப்பு**

2020 ஆகஸ்ட் 19 ஆம் திகதி முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கைக்கமைய அங்கு பதிவு செய்யப்பட்டிருந்த 317 அரபு பாடசாலைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் 4 தொகுதிகளின் கீழ் நிலைப்படுத்தப்பட்டிருந்தது.

| பாடசாலை வகை | எண்ணிக்கை | பிள்ளைகள் எண்ணிக்கை | ஆசிரியர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட அரபு பாடசாலை | 19 | 3,117 | 390 |
| (ii) அரபு பாடசாலை | 93 | 11,269 | 1,419 |
| (iii) ஆரம்ப அரபு பாடசாலை | 147 | 13,569 | 1,800 |
| (iv) ஆரம்ப அரபு பாடசாலை (தற்காலிகம்) | 58 | 4,367 | 537 |
| **மொத்தம்** | ------ | --------- | ------- |
| | **317** | **32,322** | **4,146** |
| | === | ===== | ==== |

முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் MRCA/R/9/1/1 இலக்கம் கொண்டதும் 2020 ஆகஸ்ட் 12 ஆம் திகதியிலான கடித்திற்கு அமைய இந்த அரபு பாடசாலைகளின் கல்வி காலம் 6-8 வருடங்களுக்கு இடைப்பட்டதாக உள்ளது என்பதும் பொதுவாக 13-15 க்கு இடைப்பட்ட

வயதே ஆட்சேர்ப்பு செய்யும் வயதாக உள்ளது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்டாய கல்வியை கற்க வேண்டிய வயதிலுள்ள இந்தப் பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கும் அரச பாடசாலைகள் குறித்த மாவட்டங்களில் அமைந்து இருக்கும் போது இவ்வாறான பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்புவது தொடர்பில் ஒழுங்குறுத்தல் செய்வதற்கு கல்வி அமைச்சு தலையிட்டு இருக்கவில்லை. அதன் காரணமாக கட்டாய கல்வியை கற்க வேண்டிய வயதில் உள்ள இந்தப் பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டிய தரமான விடயம் தொடர்பான அறிவு, விளையாட்டு, அழகியல், வாழ்க்கை திறன் போன்ற அத்தியாவசிய கருவிகள் இன்றி வயது வந்தவர்களாக சமூக மயப்படுத்துவதற்கும் இடம் அளிக்கப்பட்டுள்ளது என்பது கல்வி அமைச்சு மற்றும் முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தின் கவனத்திற்கு உட்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(இ) அரபு பாடசாலைகளின் பரீட்சை நடவடிக்கைகள்**

முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அரபு பாடசாலையின் மூன்று வருட பாடநெறியை பூர்த்தி செய்தவர்கள் ''அல் ஆலிம் முதவஸ்சிதா'' பரீட்சைக்கும், ஐந்து வருட பாடநெறியை பூர்த்தி செய்தவர்கள் ''அல் ஆலிம் சானவ்யியா'' பரீட்சைக்கும் தோற்றுவதற்கு தகைமை பெற்றவர்கள் என பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே போன்று அரபு பாடசாலையில் கல்வியை பெற்றுக் கொள்ளாத ஒருவர் தனியார் விண்ணப்பதாரியாக அண்மையில் உள்ள அரபு பாடசாலையின் மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதும், அல் ஆலிம் முதவஸ்சிதா பரீட்சையில் சித்தி பெறாது அல் ஆலிம் சானவ்யியா பரீட்சைக்கு தோற்றமுடியாது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விபரங்கள் பின்வருமாறு.

| பரீட்சையின் பெயர் | ஆண்டு | தோற்றிய எண்ணிக்கை | சித்திபெற்ற எண்ணிக்கை | சித்தி பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|
| அல்-ஆலிம் சான்று பத்திரப் பரீட்சை | 2014/2016 (பழைய பாடத் திட்டம்) | 363 | 73 | 20 |
| அல்-ஆலிம் சான்று பத்திரப் பரீட்சை | 2015/2017 (பழைய பாடத் திட்டம்) | 204 | 24 | 12 |
| அல்-ஆலிம் சான்று பத்திரப் பரீட்சை | 2015/2016 (புதிய பாடத் திட்டம்) | 354 | 87 | 25 |

| | | | | |
|---|---|---|---|---|
| அல்-ஆலிம் சான்று பத்திரப் பரீட்சை | 2017/2018 புதிய பாடத் திட்டம்) | 396 | 104 | 26 |
| அல்-ஆலிம் சான்று பத்திரப் பரீட்சை | 2016 புதிய பாடத் திட்டம்) | 1866 | 483 | 26 |
| அல்-ஆலிம் சான்று பத்திரப் பரீட்சை | 2017/2018 புதிய பாடத் திட்டம்) | 3050 | 802 | 26 |

**ஆதாரம்: பரீட்சைகள் திணைக்களம்**

205 ஆரம்ப அரபு பாடசாலைகளில் 17,936 பிள்ளைகள் கல்வியை கற்ற போதிலும் அல்-ஆலிம் முதவஸ்சிதா பத்திரப் பரீட்சைக்கு 2017/2018 ஆண்டுகளில் தோற்றி இருந்தது 3,050 மாணவர்கள் அதாவது மொத்த மாணவர் எண்ணிக்கையில் 17 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது. அதே போன்று இந்த பரீட்சையில் சித்தி அடையும் மாணவர்களின் எண்ணிக்கை 26 சதவீதத்தை விட குறைந்த அளவு என்பதும் அவதானிக்கப்பட்டது.

**(ஈ) பரீட்சைகளை நடாத்துவதற்கான மொத்த செலவு**

இந்தப் பரீட்சைகளை நடாத்துவதற்கு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதி பெற்றுக் கொள்வதற்கான முறைமையை செயல்படுத்தவில்லை என்பதும், 2018 ஆம் ஆண்டில் இந்த பரீட்சைகளை நடாத்துவதற்காக ரூபா 10,126,352 செலவிடப்பட்டுள்ளது என்பதும், அந்த செலவினை செய்த தரப்பினர்கள் இல்லை என்பதும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 19/IA/EX/2020/82 இலக்கம் கொண்ட 2020 நவம்பர் 13 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(உ) முஸ்லிம் சமய அலுவல்கள்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்காத பாடசாலைகள்**

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளுக்கமைய மாவட்ட மட்டத்தில் அல்-ஆலிம் முதவஸ்சிதா சான்று பத்திரப் பரீட்சைக்கு பிள்ளைகளை அனுப்பியுள்ள 133 அரபுபாடசாலைகள் முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மாவட்ட மட்டத்தில் புள்ளி விபரவியல் தரவுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| மாவட்டம் | பாடசாலை எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 09 |
| கம்பஹா | 10 |
| களுத்துறை | 07 |
| காலி | 03 |
| மாத்தறை | 07 |

| | |
|---|---|
| அம்பாந்தோட்டை | 02 |
| கேகாலை | 09 |
| குருணாகல் | 16 |
| புத்தளம் | 05 |
| அநுராபுரம் | 08 |
| பொலனறுவை | 02 |
| மாத்தளை | 05 |
| கண்டி | 11 |
| நுவரெலியா | 02 |
| இரத்தினபுரி | 01 |
| பதுளை | 04 |
| அம்பாறை | 12 |
| மட்டக்களப்பு | 06 |
| திருகோணமலை | 10 |
| வவுனியா | 03 |
| மன்னார் | 01 |
| | ------ |
| | 133 |

**3.4.2.5. முஸ்லிம் சமய மற்றும் கலாசார விவகாரங்கள் திணைக்களத்தின் கருத்து தெரிவிப்பு**

முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தின் MRCA/R/DP/01/2021 இலக்கம் கொண்ட 2021 செப்டெம்பர் 6 ஆம் திகதியிடப்பட்ட கடித்திற்கமைய அந்த திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 317 அரபு பாடசாலைகளில் 32 பாடசாலைகள் செயற்படுவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே போன்று 205 பாடசாலைகளில் சாதாரண தரம் மட்டும் கற்பிக்கப்படுகின்றது என்பதும் 122 பாடசாலைகளில் சாதாரண தரம் மற்றும் உயர் தரம் கற்பிக்கப்படுகின்றது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலைகள் தொடர்பில் கணக்காய்வினால் மேலும் தகவல்கள் கோரப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய திணைக்களத்தினால் MRCA/R/8/1/1 இலக்கம் கொண்ட 2021 நவம்பர் 10 ஆம் திகதியிடப்பட்ட கடித்திற்கமைய கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) மட்டும் காணப்படும் 202 பாடசாலைகளின் தகவல்களும், சாதாரணதரம் மற்றும் உயர்தரம் கற்பிக்கும் 112 பாடசாலைகளின் தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த தகவல்களுக்கமைய பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றியிருந்த அரபு பாடசாலைகளின் எண்ணிக்கை 202 என்பது மேற்கூறிய கடிதத்திற்கு அமைய தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 48 பாடசாலைகளில் 2019 ஆம் ஆண்டில் அந்தப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை குறிக்கப்பட்டிருக்காததுடன் எஞ்சிய 154 பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை பின்வருமாறு ஆகும்.

| **பாடசாலையில் உள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை விபரம்** | **பாடசாலை எண்ணிக்கை** |
|---|---|
| பிள்ளைகள் 1-10 வரை | 90 |
| பிள்ளைகள் 11-20 வரை | 44 |
| பிள்ளைகள் 21-30 வரை | 06 |
| பிள்ளைகள் 31-40 வரை | 09 |
| பிள்ளைகள் 41-50 வரை | 01 |
| பிள்ளைகள் 50 இலும் அதிகம் | 04 |
| | ------ |
| | 154 |

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றியிருந்த அரபு பாடசாலைகளின் எண்ணிக்கை 112 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதில் 23 பாடசாலைகளில் 2019 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை குறிக்கப்பட்டிருக்கவில்லை எஞ்சிய 89 பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை பின்வருமாறு ஆகும்.

| **பாடசாலையில் உள்ள மாணவர் எண்ணிக்கை** | **பாடசாலை எண்ணிக்கை** |
|---|---|
| பிள்ளைகள் 1-10 வரை | 53 |
| பிள்ளைகள் 11-20 வரை | 20 |
| பிள்ளைகள் 21-30 வரை | 08 |
| பிள்ளைகள் 31-40 வரை | 02 |
| பிள்ளைகள் 41-50 வரை | 02 |
| பிள்ளைகள் 50 இலும் அதிகம் | 04 |
| | ---- |
| | 89 |

### 3.4.2.6 மதரஸா கல்வியினை பரீட்சிப்பு செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு மற்றும் ஆய்வுகள்

**(அ) தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற பிரிவுக்குழு அறிக்கை மற்றும் மதரஸா பாடசாலைகள்**

இந்தப் பாடசாலைகளின் பெயர் 2019 ஏப்பிரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் பிரபலமானதுடன் இந்த பாடசாலைகள் தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் 2020 பெப்ரவரி 19 ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற பிரிவுக்குழு அறிக்கையின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(i) இந்த குழுவிற்கமைய 1679 மதரஸா பாடசாலைகள் உள்ளதுடன் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 317 ஆகும். கல்வி கற்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை 22,000 அளவில் ஆகும்.

(ii) தேசிய ரீதியில் அல்லது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடத் திட்டங்கள் இந்தப் பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதில்லை.

(iii) தேசிய ரீதியில் அல்லது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மூலம் இந்தப் பாடசாலைகளின் கற்பித்தல் நடவடிக்கைகள் கண்காணிப்பு செய்யப்படுவதில்லை.

(iv) இந்தப் பாடசாலைகளில் பின்வரும் காரணிகள் தொடர்பில் எதுவிதமான அரச நிறுவனத்தினாலும் ஒழுங்குறுத்தல்கள் செய்யப்படுவதில்லை.

- இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பது
- இந்தப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் எண்ணிக்கை எவ்வளவு என்பதும் மற்றும் அவர்கள் இலங்கையர்களா அல்லது வெளிநாட்டவர்களா என்பது
- இந்தப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் தகைமைகள் என்ன என்பது
- இந்தப் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அடிப்படை வசதிகள் உள்ளதா என்பது
- இந்தப் பாடசாலைகளில் நிதி நிலைமை என்ன என்பது மற்றும் நிதி பெற்றுக் கொள்ளும் ஆதாரம் என்ன என்பது

அதற்கமைய இவ்வாறான பாடசாலைகள் முறையாக ஒழுங்குறுத்தல் செய்யப்படாத காரணத்தால் கல்வியின் தரம் தொடர்பில் போன்றே அந்த நிறுவனங்களில் காணப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் தொடர்பில் உறுதிப்படுத்தல் செய்ய முடியாது என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) மதரஸா கல்வி தொடர்பான ஆய்வு**

அரபு மொழியில் பாடசாலை எனும் அர்த்தம் கொண்ட மதரஸா பாடசாலைகள் இஸ்லாமிய சமய பாடசாலைகளின் சிறப்பாகும். இந்தப் பாடசாலை தொடர்பில் A Study on Contemporary Madrasah Education System in Sri Lanka எனும் பெயரில் Community Association of Professionals (CAP) என்னும் அமைப்பினால் 2019/2020 ஆம் ஆண்டுகளில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த ஆய்வு மூன்று பேரைக் கொண்ட குழுவினால் முன்னாள் குவைத் நாட்டு தூதுவர் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் இருவரை கொண்ட பதிப்பாசிரியர் குழுவுடன் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அந்த ஆய்வானது முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 317 மதரசா பாடசாலைகளை

அடிப்படையாகக் கொண்டு 50 பாடசாலைகளில் தகுதிகாண் பரீட்சிப்பின் மூலமும் மற்றும் இன்னும் 24 மதரசா பாடசாலைகளில் தபால் மூலம் தகவல்கள் பெற்றுக் கொள்வதன் மூலமும் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

அதற்கமைள இந்தப் பரீட்சையில் வெளிக்கொணரப்பட்ட அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

**(i) மதரஸா பாடசாலைகளின் எண்ணிக்கை**

இந்த ஆய்வின் மூலம் அறிந்து கொள்ளப்பட்டுள்ள வகையில் 317 மதரஸா பாடசாலைகள் முஸ்லிம் சமய மற்றும் கலாசார நடவடிக்கைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் அண்ணளவாக 73 சதவீத மாணவர்கள் 50 க்கு அதிகமான எண்ணிக்கையில் இருப்பதுடன் 27 சதவீதமானவர்கள் 50 க்கு குறைவான எண்ணிக்கையில் இருக்கின்றனர். முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 317 மதரசா பாடசாலைகளில் 9 பாடசாலைகள் 1948 ஆம் ஆண்டிற்கு (சுதந்திரம் பெறுவதற்கு முன்னர்) ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 308 பாடசாலைகள் அதன்பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**(ii) மாணவர்களை அனுமதிக்கும் மூலப்பிரமாணங்கள்**

மதரசா பாடசாலகளில் 75 சதவீதமான 16 வயதிற்கு குறைந்த மாணவர்களே அனுமதிக்கப்படுகின்றனர் என்பது இந்த ஆய்வின் மூலம் வெளிப்பட்டது. மேலும் இந்த ஆய்விற்கு அமைய மதரசா பாடசாலைகளில் 22 சதவீதமானவர்கள் 5 ஆம் வகுப்பான குறைந்த கல்வித் தகைமை உடையவர்கள் என்பதால் அவர்கள் மதரசா பாடசாலை கல்வியை ஆரம்பிப்பதற்கு முன்னர் அல் குர் ஆனை மனப்பாடம் செய்துள்ளனர். மதரசா பாடசாலைகளில் 52 சதவீதமானோர் ஒன்பதாம் வகுப்பான குறைந்த கல்வித் தகைமை பெற்றிருப்பதுடன் மதரசா பாடசாலைகளில் 22 சதவீதமானோர் குறைந்த கல்வித் தகைமை மற்றும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) மட்டத்தில் உள்ளனர்.

**(iii)** இந்த பாடசாலைகளில் 90 சதவீதமானவை முழுநேர பாடநெறி என்பதுடன், 10 சதவீதமானவை பகுதிநேர (Part time) பாடநெறிகள் ஆகும். கற்பித்தல் காலம் 4 ஆண்டுகளுக்கும் 8 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகும்.

**(iv) சட்டரீதியான அடிப்படைகள்**

இருக்கின்ற மதரசா பாடசாலைகள் முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், மதரசா பாடசாலைகள் பதிவு செய்தல் மற்றும் ஏற்றுக்கொள்வதற்கான சட்ட ரீதியான அடிப்படை இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

**(v) மதரசா பாடசாலைகளில் மூலப்பிரமாணங்கள் மற்றும் கண்காணிப்பு**

மதரசா பாடசாலைகளில் கல்வி ஒழுங்கமைப்பின் செயல்கள் தொடர்பில் பாடவிதானம், மதரசா பாடசாலைகளின் முகாமைத்துவம் மற்றும் வேறு இணைந்த காரணிகள் தொடர்பில் நாட்டில் காணப்படும் மதரசா பாடசாலைகளின் ஒழுங்கமைப்பினை கண்காணிப்பு செய்வதற்கு அல்லது மதிப்பீடு செய்வதற்கான மத்திய நிறுவனம் ஒன்றும் இல்லை. கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல் இல்லாத காரணத்தால் அனைத்து மதரசா பாடசாலை வகைகளும் தமக்கான ஒழுங்கமைப்பு மற்றும் முறைகளின் அடிப்படையில் செயல்பட்டுவருவதுடன் அவற்றின் செயல்பாட்டில் மற்றும் நிர்வாகத்தில் சமச்சீரற்ற முறை உள்ளது.

**(vi) கற்பித்தல் மொழி மூலம்**

மதரசா பாடசாலைகளில் 96 சதவீதமானவை தமிழ்மொழி பாடசாலைகளாக செயற்பட்டுவருவதுடன் சிங்களம் மற்றும் ஆங்கிலம் போன்ற வேறு மொழிகளுக்கு போதிய அளவு அவதானம் அல்லது பயிற்சி வழங்கப்படுவதில்லை.

**(vii) நிறுவன கட்டமைப்பு**

இந்த ஆய்வின் மூலம் வெளிப்படுவது மதரசா பாடசாலைகளில் 44 சதவீத்திற்கு நிறுவன அமைப்பு / முறையான படிநிலை இல்லை என்பதாகும். இது வேலையை ஒப்படைத்தல், மனிதவள முகாமைத்துவம், அறிக்கையிடல் மற்றும் மொத்த நிர்வாகம் தொடர்பில் சிக்கலை ஏற்படுத்தும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

**(viii) மனிதவள முகாமைத்துவம்**

இந்த ஆயிவின் மூலம் வெளிப்படுவது மதரசா பாடசாலைகளில் 49 சதவீதமானவை அவர்களின் பதவியணியினருக்கு முறையான சம்பள முறைமை அல்லது சம்பள அமைப்பு இல்லை என்பதாகும். அதன் பெறுபேறாக பதவி அணியினருக்கு ஊக்கம் அற்றுப்போதல் மற்றும் திருப்பதியின்மை ஏற்பட்டுள்ளது. மேலும், மதரசா பாடசாலைகளில் 52 சதவீதமானவை முறையான ஆட்சேர்ப்பு கொள்கைகள் அற்றவை

ஆகும். ஒழுங்கான பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்யும் கொள்கை இல்லாத காரணத்தால், பயிற்சியற்ற மற்றும் வினைத்திறனற்ற ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன் அது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

### (ix) நிதி முகாமைத்துவம்

இந்த ஆய்வின் மூலம் அறிந்து கொள்ளப்பட்டுள்ளது மதரசா பாடசாலைகளில் 72 சதவீதமானவை முறையான கணக்கு / புத்தகங்களை வைத்திருப்பதில்லை என்பதும் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட கணக்காய்வாளர் ஊடாக அவர்களது கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுவதில்லை என்பதும் ஆகும். இது நிதி தவறாக முகாமைத்துவப்படுத்தப்பட்டு நிதி நெருக்கடிக்கு வழிவகுக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

### (x) பாடவிதானம்

- <u>பாடத் திட்டம்</u>

ஆய்வுக் கண்டுபிடிப்புகளுக்கு அமைய மதரசா பாடசாலைகளில் 52 சதவீதமானவை பாடத் திட்ட கட்டமைப்பை பின்பற்றி இருப்பதுடன் அவை பரீட்சைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டதோடு அல்-ஆலிம் முதவஸ்சிதா மற்றும் அல்-ஆலிம் சானவ்யியா பரீட்சைகள் முஸ்லிம் சமய மற்றும் கலாசார விவகாரத் திணைக்களத்தினால் வெளியிடப்படும்.

- <u>மொழி மூலம்</u>

மதரசா பாடசாலைகளில் 89 சதவீதமானவைகளில் சிங்களம் கற்பிக்கப்படுவதுடன், மதரசா பாடசாலைகில் 97 சதவீதமானவை தமது கற்பித்தல் மொழிக்கு மேலதிகமாக வேறு மொழிகளான தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது என்பது இந்த ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இரு தேசிய மொழிகளும் மதரசா பாடசாலைகளில் கற்பிக்கப்பட்ட போதிலும், இந்த மொழிகளுக்கு முகாமைத்துவம் போன்றே மாணவர்களுக்கும் போதியளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**(xi) பௌதிக வசதிகளின் நிலைமை**

| பௌதிக வசதிகள் | இருக்கும் அளவு சதவீதம் | இல்லாத அளவு சதவீதம் |
|---|---|---|
| 1.வேறு வேறான வகுப்பறைகள் | 93 | 7 |
| 2.போதிய காற்றோட்டமுள்ள வகுப்பறைகள் | 97 | 3 |
| 3.நூலக வசதிகள் | 95 | 5 |
| 4.உணவு மற்றும் தங்கும் விடுதி | | |
| (a) தங்கும் விடுதிகள் | 81 | 19 |
| (b) கட்டில்கள் | 41 | 59 |
| (c) உணவு பட்டியல் | 75 | 25 |
| 5.விளையாட்டு வசதிகள் | 73 | 27 |
| 6.விளையாட்டு மைதானம் | 55 | 45 |

**(xii) சுகாதார வசதிகள்**

சுகாதார வசதி நிலைமைகள் 35 சதவீதம் மிகத் திருப்திகரமானதாகவும், 47 சதவீதம் மிதமான திருப்திகரமானதாகவும் மற்றும் 18 சதவீதம் திருப்திகரமாக இல்லாமலும் காணப்பட்டது.

இதற்கமைய மொத்தமாக இந்த பாடசாலைகளை தாபித்தல், பதிவு செய்தல், நடத்திச் செல்லுதல் என்பன தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூலப்பிரமாணத்திற்கு அமைய இடம்பெற வேண்டும் என்பதும் அவற்றில் கல்வி கற்கும் கட்டாய கல்வி வயதிலுள்ள பிள்ளைகள் தொடர்பில் ஒழுங்கான ஒழுங்குறுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 04. பரிந்துரை

**4.1** கல்வித் தரத்தின் அபிவிருத்தி, கல்வித் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், கற்றலுக்கான சூழல் போன்ற காரணிகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டு மொத்த கல்விக்காகவும் இற்றைப்படுத்தப்பட்ட கல்வி கொள்கையினை தயாரித்து பொது சட்டமாக்குதல் வேண்டும்.

**4.2** 1961 இன் 8 ஆம் இலக்க துணைப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவுக்கு அமைய 5-14 வயது எல்லையிலுள்ள பிள்ளைகளுக்கு கல்வியை பெற்றுக் கொடுப்பதற்காக தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் கல்வி அமைச்சின் தலையீடின்றி வியாபார நிறுவனமாக சர்வதேசப் பாடசாலைகளும் சமய பாடசாலைகளாக மதரசா பாடசாலைகளும் நடாத்தப்பட்டு வருகின்றன என்பதால் சட்டத்தினை தீவிரமாக செயல்படுத்துவதற்கு தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுத்தல்.

**4.3** அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளவாறு அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளுதல், கட்டணம் அறவிடுதல், ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல், ஆசிரியர்கள் தொடர்பான நடவடிக்கைகள், கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் கண்காணிப்பு செய்தல் போன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் கல்வி மமைச்சின் போதுமான தலையீடு இடம்பெற வேண்டும் என்பதால் அதற்கான ஒழுங்கான வழிகாட்டல் தயாரிக்கப்பட்டு வர்தமானி மூலம் பிரசுரித்தல்.

**4.4** அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் கிளை பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சரவை அனுமதிக்கமைய, எதிர்காலத்தில் ஏதேனும் தாய் பாடசாலையினால் நாட்டின் ஏதேனும் இடத்தில் கிளை பாடசாலையினை ஆரம்பிக்கும்போது கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட மூலப்பிரமாணங்களின் கீழ் முன் அனுமதியினை பெற்றுக் கொடுத்தல் வேண்டும் என்பதால், அதற்கு தேவையான மூலப்பிரமாணம் தயாரிக்கப்படுதல்.

**4.5** அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலையினை மீண்டும் செல்படுத்தும்போது அதற்கு தேவையான ஒழுங்கான மூலப்பிரமாணங்களை தயாரித்தல்.

**4.6** கல்வியின் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கல்வி அமைச்சின் முகாமைத்துவ மற்றும் தர பிரிவின் மூலம் இடம்பெறும் கல்வியின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கான புதிய மதிப்பீடுத்துறை தரத்தின் ஊடாக இடம்பெறும்

கண்காணிப்பு செயல்பாடு ஏனைய பாடசாலைகளை போன்றே இந்த அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்காகவும் பின்பற்றப்படுதல்.

**4.7** அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் தொடர்பில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2005 ஒக்டோபர் 31 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2005/31 கொண்ட சுற்றறிக்கையின் 4(அ)(iii) ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் பாடசாலை நடவடிக்கைகளை பரீட்சிப்பு செய்வதற்கு அல்லது தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு அல்லது கண்காணிப்பு செய்வதற்காகவோ வருகை தரும் மாகாண கல்வி உத்தியோத்தர்கள் மற்றும் இணைந்த கல்வி அமைச்சின் அதிகாரிகளின் அடையாளத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு தேவையான ஆவண பரீட்சிப்பு, கற்றல் / கற்பித்தல் செயற்பாடுகளை கண்பாணிப்பு செய்து அறிக்கையிடுதல், குறிப்பு எடுப்பதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த சுற்றறிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சினால் தற்போது காணப்படும் சட்ட ரீதியான ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை எனில் அந்த நிலைமையை எட்டுவதற்கு கல்வி அமைச்சின் மூலம் மேலும் நடவடிக்கை எடுத்தல்.

**4.8** தற்காலத்து தொழில் சந்தைக்கு பொருத்தமான தொழிலாளர் படையினை உருவாக்கும் நோக்கில் கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் போன்ற பாட விதானங்கள் அனைத்து அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளிலும் செயற்படுத்துவதன் முக்கியத்துவத்தை கவனத்தில் கொள்ளுதல்.

**4.9** அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் நேரசூசியினை அங்கீகரித்தல், ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்தல், ஆசிரியர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பில் சமய பிரிவுகளின் மூலம் இடம்பெறும் தலையீட்டினை கட்டுப்படுத்தி கல்வி அமைச்சினால் மட்டும் குறித்த ஒழுங்குறுத்தல்களை மேற்கொள்ளுதல் தொடர்பில் கவனம் செலுத்துதல்.

**4.10** அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு புதிய ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் பிரேரணை பத்திரங்களை பரிந்துரை செய்து அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய மற்றும் குறித்த பிரேரணை பத்திரத்திற்கு பரிந்துரை வழங்கும்போது ஆசிரியரின் தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்டு பிரேரணை பத்திரம் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டதன் பின்னர் நியமனக் கடிதம் வழங்குதல்.

**4.11** தனியார் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்யும்போது பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பில் முயற்சி செய்தல்.

**4.12** அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகளில் பிள்ளைகளின் சுகாதார மேம்பாடு தொடர்பில் அந்தப் பாடசாலைகளில் செல்வாக்கு செலுத்தக்கூடிய வகையில் சட்டரீதியான ஏற்பாடுகளை சுகாதார அமைச்சுக்கு பெற்றுக்கொடுத்தல்.

**4.13** 1961 இன் 8 ஆம் இலக்க துணை பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவிற்கமைய 5-14 வயது எல்லையில் உள்ள பிள்ளைகளுக்கு கல்வியினை பெற்றுக் கொடுக்கும் தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாது என குறிப்பிடப்பட்டு இருந்தபோதிலும், கம்பனி சட்டத்தின் கீழ் நிறுவனமாக அல்லது வியாபார பெயர் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தனிநபர் அல்லது கூட்டு வியாபாரமாக இந்த சர்வதேச பாடசாலைகள் எனும் பெயரிலான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதால், குறித்த துணைப் பாடசாலைகள் மற்றும் பயிற்சி கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் வரை அதற்கு பொருத்தமான இடைக்கால வேலைத் திட்டத்தினை இருதரப்பினரினதும் உடன்பாட்டின் அடிப்படையில் செயற்படுத்தல்.

**4.14** சர்வதேச பாடசாலைகளில் ஆசிரியர்களின் குறைந்த தகைமை, குறைந்த பௌதிக வசதிகள் மற்றும் கற்றல் தரம் தொடர்பில் வழிகாட்டல் தயாரிக்கப்பட்டு வர்தமானியில் பிரசுரித்தல்.

**4.15** இந்தநாட்டு பாடசாலை ஒழுங்கு அமைப்பினுள் செயற்படும் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு இலக்கம் 2013/ED/E/13 கொண்ட 2013 ஜுன் 03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை பத்திரத்திற்கமைய நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குழு 2013 ஒகஸ்ட் 28 ஆம் திகதி கலந்துரையாடி உடன்படிக்கையை ஏற்படுத்திய காரணிகள் தொடர்பில் உடனடி கவனத்தைச் செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

**4.16** தற்காலத்தில் இலங்கையில் சமய நடவடிக்கைகள் எனும் போர்வையில் நடாத்தப்பட்டு வரும் நிறுவனங்களினால் கட்டாய கல்வியைய கற்க வேண்டிய வயதில் உள்ள மாணவர்களுக்கு தரமான கல்வியினை பெற்றுக்கொடுக்காது பல்வேறு நோக்கங்கள் சார்பில் நடாத்தப்பட்டு வரும் நிறுவனங்கள் ஒழுங்குறுத்தல் செய்யப்படல் வெண்டும். விசேடமாக கட்டாய கல்வி வயது எல்லைக்குள் இருக்கும் பிள்ளைகளுக்கு பாடசாலை கல்வியை பெற்றுக்கொடுக்காது நடாத்தப்பட்டு வரும்

நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடிய சட்ட ரீதியான ஏற்பாடுகளை அதிகாரமயப்படுத்தல்.

**4.17** ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி (2015-2030) நிகழ்ச்சி நிரலின் குறிக்கோள் 4 இன் இலக்கினை எட்டுவதற்கு அரச சார்பற்ற அனைத்து பாடசாலைகளையும் பதிவு செய்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்தல்களுக்குரிய அனைத்து அரச நிறுவனங்களையும் இணைப்பதற்கு கல்வி அமைச்சின் தனியார் பாடசாலை அலகின் மூலம் ஒழுங்கான முறைமையினை தயாரித்து அவற்றை காலத்திற்குக் காலம் மதிப்பிடல்.

**4.18** இலங்கையின் மொத்த மாணவர் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு அனைத்து பாடசாலைகளினதும் தரவுகளை க்ல்வி அமைச்சுக்கு பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அவற்றை இற்றைப்படுத்துதல் மூலம் கண்காணிப்பு முறைமையினை ஒழுங்குபடுத்தி முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல்.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2022 மார்ச் 02ஆந் திகதி

**இணைப்பு 01**

## பாடசாலைகளில் காணப்பட வேண்டிய பௌதீக பரிமாணங்கள்

**(i) ஆரம்பப் பாடசாலைகள் (1-5 தரங்கள்) (Type 3 Schools)**

- நிர்வாகப் பிரிவு - 20'x40' - அதிபர் அறை, அலுவலகம், ஆசியர் ஓய்வறை மற்றும் கழிப்பறையுடன்
- வகுப்பறை - 20'x25' - ஆரம்ப வகுப்பில் அதிகபட்ச பிள்ளைகளின் எண்ணிக்கை 35 ஒரு மாணவருக்கு தேவையான சதுர அடியின் அளவு 14.3' சதுரஅடி
- நூலகம் - 20'x40'
- கணனி அறை - 20'x20' - 10 கணனிகளுடன்
- விளையாட்டறை - 20'x20'
- அதிபர் இல்லம் - சதுரஅடி 1000
- அழகியல் அலகு - 20'x40'
- செயல்பாட்டு / விஞ்ஞான அறை - 20'x40'
- களஞ்சிய அறை - 20'x20'
- விளையாட்டுமுற்றம்

**(ii) கனிஷ்ட இரண்டாம்நிலை பாடசாலைகள் (1-9 தரங்கள் அல்லது 1-11 தரங்கள்) (Type 2 Schools)**

- நிர்வாகப் பிரிவு - 20'x60' - அதிபர் அறை, பிரதி அதிபர் அறை, அலுவலகம், ஆசீயர் ஓய்வறை மற்றும் (2) கழிப்பறைகளுடன்
- வகுப்பறை - 20'x25'
- நூலகம் - 20'x60'
- கணனி அறை - 20'x20' - 20 கணனிகளுடன்
- சாதாரண தர விஞ்ஞானகூடம் - 20'x20' – 6-11 வகுப்புகளின் எண்ணிக்கை 18 இலும் அதிகம் எனில் 2 விஞ்ஞான கூடங்கள் தேவை
- மனைப்பொருளியல்கூடம் - 20'x40'
- விவசாயகூடம் - 20'x40'
- அதிபர் இல்லம் - சதுரஅடி 1200
- விளையாட்டறை - 20'x20'
- ஆலோசனை அறை - 20'x20'
- அழகியல் அலகு - 20'x100' (நடனம், சங்கீதம், சித்திரம்)
- செயன்முறை தொழில்நுட்பத்திறன் அறை - 20'x40'

**(iii) சிரேஷ்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்கு (விஞ்ஞான பாடங்கள் அற்ற) (Type 1C Schools)**

- நிர்வாகப் பிரிவு - 20'x80' - அதிபர் அறை, பிரதி அதிபர் அறை (2), அலுவலகம், ஒன்றுகூடல் அறை, ஆசியர் ஓய்வறை மற்றும் (2) கழிப்பறைகளுடன்
- வகுப்பறை - 20'x25' இரண்டாம் நிலை வகுப்பறையில் அதிகபட்ச பிள்ளைகளின் எண்ணிக்கை 40
- நூலகம் - 20'x80'
- கணனி அறை - 20'x20' - 20 கணனிகளுடன்
- சாதாரண தர விஞ்ஞானகூடம் - 20'x20' – 6-11 வகுப'புகளின் எண்ணிக்கை 18 இலும் அதிகம் எனில் 2 விஞ்ஞான கூடங்கள் தேவை
- மனைப்பொருளியல்கூடம் - 20'x40' - மனைப்பொருளியல் பாடம் 6-11 வகுப்புகளுக்கு மட்டும் நடைபெறுமாயின் - 20'x60'- உயர்தர வகுப்புகளுக்கு மனைப்பொருளியல் விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது எனில்
- விவசாயகூடம் - 20'x40'
- அதிபர் இல்லம் - சதுரஅடி 1500
- விளையாட்டறை - 20'x20'
- ஆலோசனை அறை - 20'x20'
- அழகியல் அலகு - 20'x100' (நடனம், சங்கீதம், சித்திரம்)
- செயன்முறை தொழில்நுட்பத்திறன் அறை - 20'x40'

**(iv) சிரேஷ்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்கு (விஞ்ஞான பாடங்களுடன்) (Type 1AB Schools)**

- நிர்வாகப் பிரிவு - 20'x80' - அதிபர் அறை, பிரதி அதிபர் அறை (2)
- வகுப்பறை - 20'x25' இரண்டாம் நிலை வகுப்பறையில் அதிகபட்ச பிள்ளைகளின் எண்ணிக்கை 40

- நூலகம் - 20’x80’
- கணனி அறை - 20’x20’ - 20 கணனிகளுடன்
- சாதாரணதர விஞ்ஞானகூடம் - 20’x20’ – 6-11 வகுப’புகளின் எண்ணிக்கை 18 இலும் அதிகம் எனில் 2 விஞ்ஞான கூடங்கள் தேவை
- உயர்தர விஞ்ஞானகூடம் - 25’x40’ - பௌதிக விஞ்ஞானகூடம்
  - 25’x40’ - இரசாயன விஞ்ஞானகூடம்
  - 25’x40’ - உயிரியல் விஞ்ஞானகூடம்

  12 மற்றும் 13 ஆம் தரங்களுக்கு சமனான 3 வகுப்புகள் இல்லது அதைவிட குறைந்த எண்ணிக்கையில் இருக்குமானால் இரண்டாம் நிலை விஞ்ஞானகூடம் (25’x50’) மட்டும் பெற்றுக்கொள்ள முடியும்.
- மனைப்பொருளியல்கூடம் - 20’x40’ - மனைப்பொருளியல் பாடம் 6-11 வகுப்புகளுக்கு மட்டும் நடைபெறுமாயின் - 20’x60’- உயர்தர வகுப்புகளுக்கு மனைப்பொருளியல் விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது எனில்
- விவசாயகூடம் - 20’x40’
- அதிபர் இல்லம் - சதுரஅடி 1500
- விளையாட்டறை - 20’x20’
- ஆலோசனை அறை - 20’x20’
- அழகியல் அலகு - 20’x100’
  (நடனம், சங்கீதம், சித்திரம்)
- செயன்முறை தொழில்நுட்பத்திறன் அறை - 20’x40’

**(v) ஏனைய வசதிகள்**

- ஒன்றுகூடல் வசதிகள்
  40’x25’ வகை A - மாணவர்கள் 200 - பிள்ளைகள் 100 அல்லது அதைவிட அதிகம்
  50’x25’ வகை B - மாணவர்கள் 200 - பிள்ளைகள் 100 - 400
  70’x30’ வகை C - மாணவர்கள் 400 - பிள்ளைகள் 400 - 800
  90’x35’ வகை D - மாணவர்கள் 600 - பிள்ளைகள் 800 – 1200
  பல்கனியுடன் கூடிய E - மாணவர்கள் 800 - பிள்ளைகள் 1200 - 1600
  பல்கனியுடன் கூடிய F - மாணவர்கள் 1000 - பிள்ளைகள் 1600 இலும் குறைவு

**(vi) ஆசிரியர் இல்லம் மற்றும் தனியாள் இல்லம்**

அனைத்து பாடசாலைகளிலும் அதிபர் அல்லது ஆசிரியர் இல்லம் இருத்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக பாடசாலையின் தேவையின் அடிப்படையில் ஆசிரியர் இல்லம் அல்லது தனியாள் இல்லம் பெற்றுக் கொள்ள முடியும்.

**(vii) கழிப்பறை மற்றும் சிறுநீர் கழிக்கும் இடம்**

200 ஆண்பிள்ளைகள் வரையில் ஒரு கழிப்பறை மற்றும் 2 சிறுநீர் கழிக்கும் இடங்களும் 200 பெண்பிள்ளைகள் வரையில 3 கழிப்பறைகள் இருத்தல் வேண்டும். இதைவிட அதிகமான பிள்ளைகள் இருக்கும் சந்தர்ப்பத்தில் கழிப்பறை மற்றும் சிறுநீர் கழிக்கும் இடங்களின் எண்ணிக்கையை அமைச்சின் விதிகளுக்கு அமைய அமைக்க முடியும்.

(viii) நோயளர் அறை

(ix) விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கு

(x) உள்ளக விளையாட்டரங்கு

(xi) மாணவர் தங்கும் விடுதி ( உதவித் தொகை பெறும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவாராயின் மட்டும்)

(xii) பாடசாலை வேலி அல்லது மதில், பெயர் பலகை, காவலர் அறை

(xiii) நீர் வசதி, மின்சார வசதி, தொலைபேசி வசதி

(xiv) அதிபரின் தற்றுணிவிற்கு அமைய

- சிற்றுண்டிச்சாலை
- பாடத்துடன் இணைந்த செயற்பாடுகளுக்கான அறை – மாணவர் படை, சிறுவர் சாரணர்
- சுகாதார கூட்டுறவு போன்றவை
- சமயலறை – ஊட்டச்சத்து வேலைத் திட்டங்களுக்கு

**இணைப்பு 02**

## பாடசாலை சுகாதார மேம்பாட்டு வேலைத் திட்ட மதிப்பீட்டுப் பத்திரம்

| | மூலப்பிரமாணம் | சுட்டி |
|---|---|---|
| 1. | பாடசாலை சுகாதார மேம்பாட்டு குழு | 1. குழு ஒன்று உள்ளது, சுகாதார மேம்பாட்டு கொள்கை அறிந்து கொள்ளப்பட்டுள்ளது.<br>2. குழு செயல்பாட்டு நிலையில் காணப்படுகின்றது. |
| 2. | பாடசாலை சுகாதார மேம்பாட்டு சங்கத்தின் பங்களிப்பு | 1. பாடசாலை சுகாதார மேம்பாட்டு சங்கம் உள்ளது.<br>2. மாணவர் பங்களிப்பு 100% காணப்படுகின்றது.<br>3. உடல் ஆரோக்கியம் தொடர்பான செயல்பாடுகள் உள்ளன.<br>4. உளவியல் சமூக நல்வாழிவு தொடர்பான செயல்களில் ஈடுபடுகின்றது.<br>5. வருடாந்த திட்டம் ஒன்று உள்ளது. |
| 3. | பாதுகாப்பு தொடர்பில் தெளிவுபடுத்தி செயற்படுத்தி உள்ளது. | 1. விபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லை.<br>2. முதலுதவி வசதிகள் உள்ளன.<br>3. அவசர சந்தரப்பங்களின் போது செயல்பட வேண்டிய முறை தொடர்பில் திட்டம் ஒன்று உள்ளது.<br>4. அது தொடர்பில் தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 4. | பாடசாலை வைத்திய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கண்டறிந்த சிக்கல்களுக்கு நடவடிக்கை எடுத்துள்ளது. | 1. பாடசாலை வைத்திய பரிசோதனை வருடாந்தம் இடம்பெற்றுள்ளது.<br>2. 80% மான மாணவர்களுக்கு அதிகமாக பாதுகாக்கப்பட்டுள்ளது.<br>3. நடத்தை சிக்கல்கள் கண்டறியப்பட்ட மாணவர்கள் வைத்திய பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு அந்த ஆரோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்<br>4. ஆரோக்கிய சிக்கல்கள் கண்டறியப்பட்ட மாணவர்கள் நிபுணத்துவ வைத்திய மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.<br>5. தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 5. | பாடசாலை சுகாதார மேம்பாட்டு வேலைத் திட்டம் மற்றும் சமூக தொடர்பு | சமூகத்தின் மூலம் பாடசாலைக்கு செய்யப்படும் வேலைத் திட்டம்<br>1. வருடாந்தம் 03 செயற்பாடுகள் அல்லது அதற்கு அதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>2. வருடாந்தம் 01 வேலைத் திட்டம் அல்லது 02மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>பாடசாலை மூலம் சமூகத்திற்கு செய்யப்படும் வேலைத் திட்டம<br>1. வருடாந்தம் 03 செயற்பாடுகள் அல்லது அதற்கு அதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>2. வருடாந்தம் 01 வேலைத் திட்டம் அல்லது 02 மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 6. | சுகாதார வசதிகள் போதுமான அளவில் மற்றும் சுத்தமாக நடத்திச் செல்லுதல் | 1. மாணவர் ஆசிரியர் எண்ணிக்கைக்கு போதுமான அளவு சுகாதார வசதிகள் உள்ளன.<br>2. ஆசிரியர் மாணவர், ஆண் பெண், ஆரம்பநிலை மற்றும் இரண்டாம் நிலை , பொருளாதாரத் தேவைகளுக்கான வசதிகளுடன் சுகாதார வசதிகள் திட்டமிடப்பட்டுள்ளது.<br>3. தொடர்ச்சியான சுத்திகரிப்பு வேலைத் திட்டம் உள்ளது.<br>4. சுத்தமாக பேணப்பட்டு வருகின்றது.<br>5. இடையறாத நீர் வழங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. |
| 7. | நீர் வசதி முகாமைத்துவம் | 1. நீர் வசதிகள் உள்ளது.<br>2. தொடர்ச்சியாக பராமரிப்பு செய்யப்படுகின்றது.<br>3. சிக்கனமான முறையில் பயன்படுத்தப்படுகின்றது.<br>4. குடிநீர் வசதிகள் உள்ளன.<br>5. நீரின் தரம் தொடர்பில் அறிக்கை காணப்படுகின்றது. |
| 8. | ஆசிரியர் / மாணவர் வரவு | 1. மாணவர்களின் வரவு பொதுவாக 90% அல்லது அதற்கு அதிகம்.<br>2. மாணவர்களின் வரவு பொதுவாக 80% தொடக்கம் 89% வரையில்<br>3. மாணவர்களின் வரவு பொதுவாக 70% தொடக்கம் 79% வரையில் |

| | | |
|---|---|---|
| 9. | வகுப்பறையின் சூழல் மற்றும் பாடசாலை சூழல் மாணவர்களுக்கு சாதகமாக காணப்படுகின்றது | 1. பாடசாலை தோட்டம் முறையாக அழகாக மற்றுும் சுத்தமாக உள்ளது.<br>2. இருக்கின்ற இடவசதிகள் விளையாட்டு சாதகமாகப் பயன்படுத்தப்படுகின்றது.<br>3. வகுப்பறையில் வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் போதிய அளவில் உள்ளது.<br>4. வகுப்பறைகள் சுத்தமாக உள்ளது. |
| 10. | மாணவர்களின் ஊட்டச்சத்து பிரச்சனைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 1. மாணவர்களின் ஊட்டச்சத்து பிரச்சனைகள் அறிந்து கொள்ளப்பட்டுள்ளது.<br>2. தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்படும்.<br>3. திறன் அபிவிருத்தி வேலைத்திட்டம் செயல்படுத்தப்படும்.<br>4. ஊட்டச்சத்து சிக்கல்கள் உள்ள மாணவர்கள் கிளினிக்குகளுக்கு அனுப்பப்படுவர். |
| 11. | மாணவர் உடல் தகுதி | 1. மாணவர்களின் உடல் தகுதி அளவிடப்பட்டுள்ளது.<br>2. உடல்தகுதி அபிவிருத்தி வேலைத் திட்டம் வருடாந்த திட்டதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br>3. உடற்தகுதி செயற்பாடுகள் உள்ளன.<br>4. உடற்தகுதி சிக்கல்கள் உள்ள மாணவர்கள் கண்டறியப்பட்டு சிகிச்சை வழிமுறை மேற்கொள்ளப்பட்டள்ளது.<br>5. கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் தகுதி மேம்பாட்டு செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. |
| 12. | உடற்பயிற்சி வேலைத் திட்டங்கள் | 1. உடற்பயிற்சி வேலைத் திட்டங்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.<br>2. இரண்டாம் நிலை பிரிவுகளில் உடற்பயிற்சி வேலைத் திட்டம் மற்றும் அல்லது ஆரம்பநிலை பிரிவுகளில் செயல்பட்டு மகிழ்வடையும் வேலைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.<br>3. அனைத்து மாணவர்களின் பங்களிப்பு உள்ளது.<br>4. உடற்பயிற்சி வேலைத் திட்டத்திற்கு ஆக்கபூர்வமான செயல்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.<br>5. உடற்பயிற்சி வேலைத் திட்டத்தினால் மதிப்படும் வேலைத் திட்டம் காணப்படுகின்றது. |
| 13. | தனிப்பட்ட சுகாதாரம் தொடர்பான வேலைத் திட்டம் உள்ளது. | 1. தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்படும்.<br>2. தொடர்ச்சியான தேடுதல்கள் இடம்பெறும்.<br>3. தனிப்பட்ட சுகாதாரம் தொடர்பில் திறன் அபிவிருத்தி வேலைத் திட்டம் செயல்படுத்தப்படும். |
| 14. | சிற்றுண்டில்சாலை நடாத்திச் செல்லுதல் மற்றும் பாடசாலைக்கு உணவு கொண்டு வருதல் | 1. பாடசாலை சிற்றுண்டிச்சாலை தரப்படுத்தலுக்கு அமைய A தரத்திற்கு உரியதாகும்.<br>2. பாடசாலை சிற்றுண்டிச்சாலை தரப்படுத்தலுக்கு அமைய B தரத்திற்கு உரியதாகும்.<br>3. ஊட்டச்சத்துள்ள உணவுகளை பாடசாலைக்கு கொண்டு வருதலை ஊக்கப்படுத்துவதற்கு வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.<br>4. அதுதொடர்பான தேடுதல் இடம்பெறுகின்றது. |
| 15. | ஆரோக்கியமான சூழலுக்கு உளவியல் சமூக செயற்பாடுகளை பயன்படுத்துதல் | 1. உளவியல் சமூக கொள்கை அடையாளம் காணப்பட்டுள்ளது.<br>2. பாடசாலையில் வருடாந்த திட்டத்திற்கு உளவியல் ச5க செயற்பாடுகள் 3 ஆவது அடையாளம் காணப்பட்டுள்ளது.<br>3. வருடாந்தம் அவ்வாறான செயற்பாடுகள் 03 அல்லது அதற்கு அதிக அளவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. |
| 16. | துன்புறுத்தல் துஷ்பிரயோகம் மற்றும் மிரட்டல் அற்ற பாடசாலை சூழலுக்கு சந்தர்ப்பம் உள்ளது. | 1. துன்புறுத்தல் துஷ்பிரயோகம் மற்றும் மிரட்டலை தவிர்த்துக் கொள்வது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.<br>2. அறிக்கை இடம்பெறும் முறைமை காணப்படுகின்றது.<br>3. நிவாரணப் பெட்டி உள்ளது.<br>4. அந்த தகவல்கள் இரகசியத்தன்மை பேணப்படுகின்றது.<br>5. அந்த சிக்கல்களுக்கு தீர்வு வழங்கப்படும். |
| 17. | பாடசாலையில் மாணவர்களின் ஒழுக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு நேர்மறையான அணுகுமுறை பயன்படுத்தப்படுகின்றது. | 1. ஒழுக்கவிதித் தொகுப்பு உள்ளது.<br>2. ஒழுக்கவிதி தொகுப்பின் மூலம் சமூகம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.<br>3. நன்னடத்தையை மேம்படுத்தும் முறைமை காணப்படுகின்றது.<br>4. மோசமான நடத்தைகளை கண்டறியும் செயல் மற்றும் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.<br>5. அது தொடர்பான நடவடிக்கை இடம்பெறுகின்றது. |

| | | |
|---|---|---|
| 18. | பாடசாலை மாணவர்களின் உளவியல் சமூக திறன் அபிவிருத்தி செயற்படுத்தப்படும். | பாடசாலையினுள் 4, 7, 10 ஆம் தரங்களில் உள்ள மாணவர்களுக்கு திறன் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. |
| 19. | கற்றல் சிரமங்கள், நல்வாழ்வு மற்றும் நடத்தை சிக்கல்கள் கொண்ட மாணவர்களை அறிந்து கொள்ளுதல் மற்றும் தலையிடல் | 1. கற்றல் சிரமங்கள், நல்வாழ்வு மற்றும் நடத்தை சிக்கல்கள் கொண்ட மாணவர்கள் அறிந்து கொள்ளப்பட்டுள்ளனர்.<br>2. தலையிடல் தொடர்பில் ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.<br>3. அவ்வாறான மாணவர்களுக்கு முறையான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படும்.<br>4. முன்னேற்றம் தொடர்பான அறிக்கை பேணப்படுகின்றது.<br>5. தேவையான ஈடுபடுத்தல்கள் இடம்பெறுகின்றது. |
| 20. | ஆசிரியர்களின் உளவியல் சமூக அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. | 1. ஆசிரியர்களின் கடமை பொறுப்புகள் தொடர்பில் ஆசிரியர்களுக்கு போதியளவு தெளிவுபடுத்தல் வழங்கப்பட்டுள்ளது.<br>2. அனைத்து ஆசிரியரும் உளவியல் சமூக திறன் தொடர்பு பயிற்சி பெற்றுள்ளனர்.<br>3. ஆசிரியர்களின் பிரச்சனைகளின்போது உதவி வழங்கும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது.<br>4. மனஅழுத்த முகாமைத்துவம் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.<br>5. வருடத்திற்கு ஒருமுறையாவது குறைந்தபட்சம் ஓய்வு (relaxation) அல்லது பொழுதுபோக்கு வேலைத்திட்டம் செயல்படுத்தப்படும்.<br>6. ஆசிரியர்களின் கூட்டுச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முறைமை அமைந்துள்ளது. |
| 21. | ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வசதிகள் வழங்கல் | 1. பாடசாலையில் ஆலோசனை / வழிகாட்டல் பயிற்சி பெற்ற ஆசிரியர் இருக்கின்றார்.<br>2. தேவையான வழிகாட்டல் வழங்கப்படுகின்றது.<br>3. அனைத்து மாணவர்களுக்கும் குருவான (mentor) ஆசிரியர் ஒருவர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார்.<br>4. உதவி செயற்பாடுகள் காணப்படுகின்றன.<br>5. தொடர் நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன. |
| 22. | மன ஒருமைப்பாட்டினை அபிவிருத்தி செய்தல் | 1. மன ஒருமைப்பாட்டினை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளது.<br>2. மன ஒருமைப்பாட்டினை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுகின்றது.<br>3. அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை இடம்பெறுகின்றது. |
| 23. | இனப்பெருக் ஆரோக்கியம் தொடர்பில் தெளிவுபடுத்தல் | 1. தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.<br>2. தமது சரீரம் தொடர்பில் ஆரம்ப நிலை பிரிவு பிள்ளைகளுக்கும் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பில் 6, 7, 12 ஆம் தரங்களுக்கும் விசேட வேலைத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. |